# நிலத்தீர்வை. நிர்ணயம்

ஆனரபில் ராவ்பகதூர்,

K. இராமானுஜாசாரியாரவர்க.

இயற்றியதை

கும்பகோணம்

நாலிங்கய்யர் B.A., B.L.,

மொழிபெயர்த்தது.

---

சென்னை ஹைகோர்ட்டு வக்கீல்,

ராவ்பகதூர் T. ரெங்காசாரியாரவர்கள்,

எழுதிய முன்னுரையுடன் கூடியது.

---

கும்பகோணம்

ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ பிரஸில்

பதிப்பிக்கப்பட்டு

T. கிருஷ்ணஸ்வாமி ஐயரால்

பிரசுரஞ் செய்யப்பட்டது.

1920.

---

விலை அணா 12.

# Foreword.

1. The Hon. V. K. Ramanujachariar has placed the ryots of this Presidency under a deep debt of obligation by his masterly criticism of the theory and practice of land revenue administration in this Presidency. The experience which he has gained as a revenue official and the keen interest he has always evinced in the welfare of the ryot population have enabled him to lay bare the defects in the present land revenue policy of the Government. He has demonstrated, by reference to facts and figures, that the present policy, has led in practice to considerable hardship and resulted in economic deterioration of the ryot's position. His cardinal suggestions are (1) that land revenue should be fixed permanently, after an equitable re adjustment of the burdens in the different districts, and (2) that a tax should be levied each year, with the sanction of the Legislature, at a certain percentage of the land revenue in order to enable the State to meet the increased expenditure entailed by the introduction of responsible Government. An alternative suggestion is also made, that land tax should be levied at a certain percentage of the land values.

2. In view of the recommendation of the Joint Select committee on India Affairs, that the principles governing the levy and the enhancement

of assessment should be embodied in the form of a statute by the Provincial Legislatures as early as the question of the land revenue policy of the possible Madras Government has assumed a new importance. It is necessary that the landholders should meet together in conferences as often as they can in order to consider the future land policy of the Government in this province and to formulate definite proposals for legislation to be introduced in the new council which is soon to be inaugurated under the Government of India Act, 1919.

This book will, I am certain, be found to be of very great use in stimulating and guiding discussion as well as in assisting the formulation of a definite policy for the future administration of land revenue in this Presidency. The translation is remarkably well done in easy and flowing Tamil and the shrewd and intelligent ryot of Southern India is sure to use this book with advantage to himself and to his province.

MADRAS
14—2—1920 }

T. RANGACHARI.

25 MAY 1920
MADRAS

## சென்னை இராஜதானியில்

# நிலத்தீர்வை நிர்ணயம்.

இப்பொழுது தென்னாற்காடு ஜில்லாவில் நிலவரிகளை மாற்றுவதற்கு செட்டில்மெண்டு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவிலும் சமீபத்தில் வரப்போகிற மறு செட்டில்மெண்டுக்கு ஆகவேண்டிய ஆரம்பங்களும் தோன்றியிருக்கின்றன. இந்த சமயத்தில், நிலவரியேற்படுத்தும் முறைகளைப்பற்றி சிறிது விளக்கிக்காட்டினால், சட்டசபையிலும் அதற்குவெளியினும் அதுவிஷயமாகநடக்கும் வியவகாரங்களை ஜனங்கள் எளிதில் அறியலாகும். முன்னுரையாகச் சில வார்த்தைகள் சொல்லுவோம்.

மகம்மதியர்கள் நம் நாட்டிற்கு வருவதற்கு முன் இந்து ராஜாக்கள் ஆண்டகாலத்தில் எல்லாவிதமான வரும்படிகள் மேலும் ஒருபாகம் வரியாக விதித்திருந்தனர். அது ஆறிலொரு பாகமாகும். அரசன் நிலத்திற்குத் தானே சுவான்தாரன் என்றாவது குடிகளிடமிருந்து பகுதி பெற்றுக்கொள்ளுகிறதாகவாவது ஒருநாளும் சொன்னதில்லை. ஒவ்வொரு மனிதனும் தனது வரும்படியில் ஒருபாகம் கொடுத்தான். தானடைவது தான்ய வரும்படியாக இருந்தால், வரியும் தான்யமாகவே செலுத்தினான். வயல்களிலும் அறுப்புக்களங்களிலும் இறைந்து கிடக்கும் தான்யத்தைப் பொறுக்

கிப் புசித்து வனங்களில் வாழும் ரிஷிகளும் தமது 'உஞ்சு' விருத்தியால் கிடைத்ததில் ஆறில் ஒருபங்கை அரசன் அரண்மனையில் சேர்ப்பிக்கக் கடமைப்பட்டிருந்தனர். அவர்கள் நிலச்சம்பந்த முள்ளவர்களல்ல, பகுதிக்கு உழுபவர்களும் அல்ல. மகம்மதியர்கள் வந்தபின் தேசத்தில் குழப்பங்கள் மிகுதிப்பட, வரி மேல்வரியாக ஏற்பட்டுக்கடைசியாக நிலக்காரன் தாங்கவேண்டிய வரிச்சுமை அவன் வரும்படியில் ஒருபாதி மட்டில் ஆய்விட்டது.

பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரும் நாட்டிலிருந்த வழக்கத்தைத் தாம் கண்டபடியே அனுசரித்தார்கள். ஆனல் இரண்டு மாறுபாடுகள் செய்தார்கள். முதலாவது, தான்ய வரியைப் பணவரியாக மாற்றினர்கள். தான்யமாகவே வரியை வசூலிப்பதில் அநேக அசௌகரியங்கள் இருந்தன. அந்த ஏற்பாட்டில் சர்க்காரை நிலக்காரர்கள் ஏமாற்ற இடமுண்டு. அத்துடன் நிலக்காரர்கள் அறுவடையைப் பார்த்து மகசூலை சோதிக்கும்படி நியமிக்கப்பட்ட குறைந்த சம்பளமுள்ள கீழ் உத்தியோகஸ்தர்களின் பேராசைக்கு ஆளானர்கள். எனினும், ஒரு விசேஷ நன்மை அதில் இருந்தது. நிலக்காரர்கள் தமது சக்திக்குத் தகுந்தபடி செலுத்தினர்கள். நிலம் நன்ருய் விளைந்தால் சர்க்காருக்கு முழுவரியும் கிடைத்தது. கால வித்தியாசத்தால் விளைவு மட்டாகவிருந்தால் தான் அடைந்ததில் ஒருபாகம் மாத்திரமே நிலக்காரன் கொடுத்தான். விளைச்சலே யில்லாவிட்டால் வரியும் கிடையாது. இந்தப் பெரும் சௌகரியத்தால் நிலக்காரர்களும் அவரை அண்டினவர்களும் சுகமாய் ஜீவித்துவர முடிந்தது.

பணவரியென்கிற புது ஏற்பாடு ஆரம்பிக்குமுன் கவர்ன்மெண்டார் இரண்டுவித ஜாக்கிரதைகள் செய்தார்கள். முதலாவது, சரியான வருஷங்களில் உயர்ந்து விளையக்கூடியதைக் கொண்டு வரியை நிதானிக்காமல் சராசரி விளைச்சலைக்கொண்டு வரியைத் தீர்மானிக்க வேண்டுமென்று அறிந்தார்கள். ஆரம்பத்தில் (அதாவது சர்வேக்குமுன்) என்ன முறையை அனுசரித்தார்களென்று தெரியவில்லை. ஆனால் சென்ற 1850 வருஷம் சுமார் செட்டில்மெண்டுகள் ஏற்பட்டபோது நிலத்தின் சாதாரண விளைச்சலைக் கண்டுபிடித்து கால வேறுபாடுகளை யெண்ணி 100-க்கு 20 முதல் 25 வரையில் தள்ளுபடிபண்ணி வரிகணைக்கிட்டார்கள். இந்தத் தள்ளுபடி போதுமானதாவென்று பின் விசாரிப்போம். இங்கே காண்பிக்க வேண்டியது என்னவென்றால், இந்த சராசரிக் கணக்கானது ஏட்டில் நன்றாயிருந்தாலும், நிலக்காரர்கள் பெரும்பான்மையோரை நிரம்பவும் நெருக்கக்கூடிய தன்மையுடையது என்பதே. சராசரிக் கணக்குக்குமேல் விளையும் சுபிக்ஷவருஷங்களில் நிலக்காரன் சற்று தாராளமாய்ச் செலவழிக்கிறான். அவன் அவ்வாறு செய்வது இயற்கையே. அப்படி அதிகமாக மிஞ்சுவதற்கும் பெரும்பான்மையோர் விஷயத்தில் இடமில்லை. ஏதோ இங்குமங்கும் சிலர் சில நாட்களுக்கு அரைவயிறாக இல்லாமல் முழுவயிறாகச் சாப்பிடலாம். காய்ந்த வருஷங்களிலோ நிலக்காரன் சாப்பிடுவதற்கும் வரி கொடுப்பதற்கும் போதுமானது இருக்கிறதில்லை. விளைவு எவ்வளவுக்கெவ்வளவு குறைவோ அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு அதிகமான கஷ்டந்தான். பழைய ஏற்பாட்டிலோ நிலக்காரன் தான் பிழைப்பதற்கு வழி

பண்ணிக்கொள்ள வேண்டியிருந்தது. புதிய ஏற்பாட்டுப்படிக்கோவென்றால் சர்க்கார் வரியை எவ்விதம் செலுத்துவதென்ற அதிகப்படி கவலையையும் படவேண்டியதாயிருக்கிறது. விளைவில்லாமை வெகுவாய்ப் பரவினதாயும், கடுங்காய்ச்சலாயும் இருந்தாலொழிய சர்க்கார் வரியை வஜாச்செய்வதில்லை. ஸ்தலத்திலிருக்கும் அதிகாரிகளோ, பஞ்சப்பரிகார வேலைகளுக்கு கூலியாட்கள் பெருகி வருவதைக்கண்டு பஞ்சம் முற்றிவிட்டதென்று நன்றாய்த் தெரிந்தாலொழிய வரி வஜாவுக்காக ஒரு சிபார்சும் செய்கிறதில்லை.

சர்க்கார் கவனமெடுத்துக்கொண்ட இரண்டாவது விஷயமாவது, விலைகள் நிர்ணயிக்க அநேக வருஷங்களில் விற்றவிலைகளின் சராசரியை எடுத்துக்கொண்டார்கள். தற்காலத்தில் நடக்கும் செட்டில்மெண்டுகளில், பஞ்சமாக இருந்த வருஷங்களைத் தள்ளிவிட்டு இருபது வருஷகாலத்தை எடுத்துக்கொள்வது வழக்கமாக இருக்கிறது. இந்த விஷயத்திலும் சராசரி விலையை எடுத்துக்கொள்வதென்ற ஏற்பாடு அனுபோகத்தில் மிகுந்த கஷ்டங்களை உண்டுபண்ணுகிறது. ஒரு சமயத்தில் (உதாரணமாக மதுரை செட்டில்மெண்டில்) இருபது வருஷங்களுக்குள் தாழ்ந்து விற்றவிலையை எடுத்துக் கொண்டார்கள். அது இப்பொழுது மாறிவிட்டது. செட்டில்மெண்டு முறைகளில் சராசரி விலை யெடுத்துக்கொள்ளும் முறையே மேற்கொண்டு நிற்கிறது. அந்த முறையின் முழுத்தீங்கும் இன்னும் வெளிப்படவில்லை ஏனெனில் தற்கால விலைகள் செட்டில்மெண்டில் புள்ளிவைத்த விலைகளுக்குமேல் மிகவும் தூக்கி நிற்கின்றன.

மேற்சொன்னபடி தான்யவரியைப் பணவரியாக மாற்றினது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் செய்த முதல் மாறுபாடு. சாகுபடியின்பேரில் வரி விதிக்காமல், நிலம் எவன் வசத்திலிருக்கிறதோ அவன் வரி நிச்சயம் செலுத்தவேண்டுமென்று ஏற்பாடுசெய்தது இரண்டாவது மாறுபாடு. அதற்குமுன் வரும்படியிருந்தால்தான் சர்க்காருக்குப் பங்கு உண்டு. ஆகையால், நிலத்தைச் சாகுபடி செய்யாவிட்டால், வரும்படியுமில்லை வரியுமில்லை. வரி எவ்வளவென்று தீர்மானிப்பதற்கு, சாகுபடியான நிலத்தையெல்லாம் அளந்து கட்டவேண்டியிருந்தது. ஏதோ ஒருவிதமாக சர்வே பண்ணி ஒவ்வொருவயலின் விஸ்தீர்ணத்தையுங்கண்டு பிடித்திருந்தார்கள். ஒருபாகம் மாத்திரம் சாகுபடி ஆயிருந்தாலும் அதையும் அளக்கவேண்டியதாக இருந்தது. இந்த சிரமத்தைத் தவிர, ஒவ்வொரு பட்டாதாரனாலும் சாகுபடி செய்யப்பட்ட வயல்கள் இன்னின்னவென்று கண்டுபிடித்து மொத்தம்போட வேண்டியதாயுமிருந்தது. முதலில் திட்டம் என்ற ஒரு ஏற்பாட்டை சர்க்கார் பரீக்ஷை செய்துபார்த்தார்கள். அதாவது ஒரு சாலின் ஆரம்பத்தில் தாசில்தார் நிலக்காரர்களுடன் இன்னின்ன விஸ்தீர்ணங்களுள்ள நிலங்கள்தான் அவர்கள் சாகுபடிசெய்யலாம் என்று ஏற்பாடுசெய்தார். வரவர வரி வசூல் மாத்திரம் அதிகமாக வேண்டுமென்ற எண்ணத்துடன் தாசில்தார் நிலக்காரர்களை நெருக்கி நிர்ப்பந்திக்க ஆரம்பிக்கவே தாசில்தார்போட்ட திட்டத்தைக்காட்டிலும் சாகுபடியான விஸ்தீர்ணம் குறைந்துபோய் நிலக்காரர்கள் வஜாக்களுக்காக மன்றாடினார்கள். சில வருஷங்கள்

சென்றபின் அந்த ஏற்பாடும் நின்றுவிட்டது. பட்டாவிலுள்ள ஒவ்வொரு நிலத்திற்கும் சாகுபடியானாலும் ஆகாவிட்டாலும் இனிமேல் கிஸ்தி செலுத்திவிட வேண்டுமென்று சர்க்கார் விளம்பரப்படுத்தினார்கள். எவனும் தான் வேண்டாத நிலத்தை விட்டுவிடலாம். வேறொருவன் புகுந்து சாகுபடி செய்யும்படியாகத் தகுந்த காலத்தில் மாத்திரம் அவ்விதம் விடவேண்டியது. ஏதோ முதல் பார்வைக்கு இது அதிகவிசேஷமில்லாத ஒரு நியாயமான மாறுபாடுபோல் தோன்றுகிறது. ஆனால் சாகுபடியாகிற ஒவ்வொரு 100 ஏகரா புஞ்சைக்கும் இருபது ஏகரா (அதாவது 5-ல் ஒன்று) சாகுபடியாகாமல் நின்றுவிடுகிறது என்று சர்க்கார் கணக்குகள் சொல்வதைப்பார்த்தால், அவன் கஷ்டம் இன்னதென்று விளங்கும். நிலக்காரன் அவைகளை ஒவ்வொரு வருஷமும் உழமுடிவதில்லை. அவைகளை விடுவதற்கும் மனசாகிறதில்லை. இந்திய நிலக்காரர்களுக்குள்ள இந்த குணத்தை சர்க்கார் தெரிந்துகொள்ளவில்லை. ஒவ்வொருவருஷ ஜமாபந்தி ரிபோர்ட்டிலும் மேற்கண்ட விஷயம் கண்ணில் உறுத்தும்படி வெளியானாலும் பரிகாரம் ஒன்றும் தேடுவதுமில்லை. ஆகவே, நிலக்காரன் சாகுபடி செய்யும் நிலங்களிலிருந்து தரிசு நிலத்துக்கும் வரி செலுத்துகிறானென்றேற்படுகிறது. அவன் ஏற்கனவே படும் கஷ்டம் இதனாலும் அதிகமாகிறது.

## அத்தியாயம் 2.

தற்காலம் வழங்கும் நிலத்தீர்வை நிர்ணயிக்கும் முறை ஏற்படுத்துவதற்கு முன் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இரண்டுமாறுதல்கள்செய்தார்களென்றும், அவைகளால் நிலக்காரர்கள் மேலுள்ள பாரம் அதிகமாயிற்றென்றும் கடைசி அத்தியாயத்தில்சொன்னேம். சர்க்கார் செய்த மூன்றாவது காரியமாவது, நிலவிஸ்தீர்ணங்களை ஒழுங்காய் அளக்க எத்தனித்தார்கள். அநேக வயல்களின் உண்மையான விஸ்தீர்ணம், முன் ஏற்பட்டிருந்த கணக்குகளைக்காட்டிலும் வாஸ்தவத்தில் அதிகமாக இருந்தது. புது அளவு செய்து சரியாகக் கண்டுபிடித்த விஸ்தீர்ணத்தின்பேரில் விதப்படி தீர்வைபோட்டபொழுது, அப்படிப்பட்ட வயல்களின் புதுத்தீர்வை முன்னிருந்ததைக்காட்டிலும் மிகவும் அதிகமாயிற்று. சில நிலங்களின் முன் ஏற்பட்டிருந்த விஸ்தீர்ணத்தைக்காட்டிலும் புது அளவையில் குறைவாக இருக்கிறதாகக் கண்டுபிடிக்க நேரிட்டு, சர்வேயினல் தீர்வையில் சௌகரியங்களும் உண்டாயிருக்கக் கூடும் என்று நினைக்கலாம். ஆனல் உண்மையான அளவுகளைக்காட்டிலும் கணக்குகளில் ஏற்பட்டிருந்த அளவு கூடுதலாக இருந்திருப்பது அரிது. அப்படியிருந்தால் நிலக்காரர்கள் அப்பொழுதே திருத்திக்கொண்டிருப்பார்கள். ஆகையால் வெகுவாய்புதிய அளவுப்படி அநேக நிலங்களின் விஸ்தீர்ணம் பழங்கணக்குகளைக் காட்டிலும் அதிகமாக்கும்படிதான் நேரிட்டது. அதினின்றும் ஏற்பட்ட அதிகத்தீர்வைகள் வசூலாகாமல், அநேக ஜில்லாக்களில் ஸ்திரமாக வஜாக்கள்செய்யும்படியும் ஆயிற்று.

இந்த சர்வேக்குத்தான் பைமாஷ் என்று பெயர். அதில் 33-அடிக்கோலை உபயோகித்தார்கள். அந்த கோலால் ஒரு கோல் நீளம், ஒரு கோல் அகலம் உள்ள சதுரத்தைக் கணக்குக்கு ஆதாரமாக வைத்துக் கொண்டார்கள். அந்த விஸ்தீர்ணமாவது 33×33 சதுர அடி, அல்லது 121 சதுர கஜம். அப்படி 40 கொண்டது ஒரு ஏகரா. ஆனால் வெகுவாய் வயல்கள் நேர் உருவங்களாய் இருப்பது அரிதாதலால், இரண்டு மூன்று விதமாக நீள அகலங்கள் எடுத்து சராசரி போட்டுக்கணக்கிடவேண்டியதாயிருந்தது எந்தெந்த இடங்களிலிருந்து அவைகள் எடுக்கப்பட்டனவென்று அளவு புஸ்தகத்தில் குறிக்காததினாலும், வயலின் பிளானும்போடாததினாலும்,பிற்காலத்தில் அளவுகளை சரிபார்ப்பது சாத்தியப்படவில்லை. வயல்களின் எல்லைகளில் கல்லுகளும் புதைக்கவில்லை. மண்மேடுகளும் மரங்களுமே எல்லைக் குறிகளாக வைக்கப்பட்டிருந்தன. அவைகள் காலளவில் மறைந்துபோகவே, வயல்களை நிதானிப்பது சிரமமாய்விட்டது. பிற்பட்டு எல்லாம் கர்ணன் வைத்ததுதான் சட்டம் என்று ஆய்விட்டது.

சர்க்காருக்கு பைமாஷ் கணக்கில் அதிருப்தியுண்டாகி 1850-ம் வருஷம் சுமார் மிகசுத்தமாக ஒரு சர்வே செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள். முதலில் வயல்களுக்கு எல்லைக் கற்கள் நட்டுப் பிறகு 66 அடி சங்கிலியால் அளந்தார்கள். ஒவ்வொரு வயலையும் முக்கோணங்களாக வகுத்து, அவைகளின் விஸ்தீர்ணத்தைக்கூட்டி வயலின் மொத்த விஸ்தீர்ணம் கண்டுபிடித்தார்கள். இந்த சர்வே செய்ததில் சர்க்கார் சில

மாறுபாடுகள் செய்தார்கள். பைமாஷ் கணக்கில் வரப்புகளும் வழிநடப்புகளும் வாய்க்கால்களும் அளக்காமல் ஒதுக்கப்பட்டிருந்தன புது சர்வேயில் வயலை அளக்கும்போது அவைகளையும் சேர்த்து அளந்துவிட்டு அதனால் உண்டாகக்கூடிய ஏற்றத்துக்குப் பதிலாகப்பின்னால் 100க்கு இன்னவிதம் என்று தள்ளுபடி செய்யப்பட்டது. இதைப்பற்றிப் பின்னே சொல்வோம். இன்னொரு விஷயம் கவனிக்கவேண்டியதாவது, ஒவ்வொரு பட்டாதாரனுக்குச் சொந்தமான ஒவ்வொரு வயலையும் எவ்வளவு சிறிதாயிருந்தாலும் தனியாய் பைமாஷில் அளக்கப்பட்டிருந்தது. புதுசர்வேயிலோ அநேக வயல்களை ஒன்ருகச்சேர்த்து ஒரு சர்வே நம்பராக அளக்கப்பட்டது. சர்வே நம்பரின் உட்பிரிவு (சப் டிவிஷன்)க்கு வயலின்சொந்தக்காரன் கல்லுகள் நட்டு, தன் பாகத்திற்கு ஸ்திரமாய் எல்லை கட்டிக் கொள்ளவேண்டியது. இரண்டு உட்பிரிவுகளின் எல்லையைப்பற்றித் தகரார் ஏற்பட்டாலும், அல்லது கற்கள் நடாமலேயிருந்துவிட்டாலும், இரண்டு வயல்களுக்கும் சேர்த்து ஜாயிண்டாக ஒரு சொந்தக்காரன் இருப்பதுபோல் பாவிக்கப்படும். இந்த மாதிரி ஜாயிண்டுசொந்தம் பாவிப்பதனுல்நிலக்காரர்களுக்குத்துன்பமுண்டாயிற்று. ஜாயிண்டு பட்டாவில் யாராவது ஒரு பட்டாதாரிடமிருந்து முழுத்தீர்வையையும் வசூலித்துவிடலாம். எவனொருவன் கிராம உத்தியோகஸ்தனுக்கு ஆகாதவனுயிருக்கிருனே அவன் முழுத்தொகையும் கொடுக்க நேரிட்டு, மற்றவர்களிடமிருந்து வரவேண்டிய தொகைகளை அவன் வியாஜ்ய மூலமாகவோ வேறுவிதமாகவோ பெற்றுக்கொள்ளும்படியாயிற்று.

ஆகையால், புது சர்வேயால் நிலக்காரர்களுக்கு ஒரு சௌகரியமும் உண்டாகவில்லை. சர்க்காருக்காவது செலவு லாபமுண்டோவென்றால் அதுவும் சந்தேகம். சர்வே நம்பர்கள் அளப்பதோடு நின்றிருந்தால், எல்லை குறிப்பதிலும் அளவை சிரமத்திலும் ஆபீஸில் கணக்குப்போடுவதிலும் சிறிது லாபமிருந்திருக்கும். அப்படிச் செய்யாமல் உட்பிரிவு (சப்டிவிஷன்)களுக்கும் எல்லைகட்டி சர்வே செய்துவிட்டார்கள்.

இந்தப் புதுமுறையில் சில வருஷம் அனுபோகமானபின், சர்வே நடவடிக்கை மிகவும் தாமசமாகிறதென்றுகண்டு, இன்னும் லகுவாக ஒருவழி அனுசரிக்கவேண்டுமென்றும், கர்ணன்களுக்கு சர்வே சற்பித்து அவர்களிடம் வேலை வாங்கவேண்டுமென்றும் ஏற்பாடுகள் செய்தார்கள். ஆனால் வயல்களுக்குப் புள்ளியிட்டு பிளான் போட்டபோது அளவுகளில் அநேக பிசகுகள் இருப்பதாக வெளியாயிற்று. மேற்சொல்லியபடி கர்ணன்களால் லகுவான வழி நடைபெற்ற ஜில்லாக்களில் மறு சர்வேயாகும்படி உத்தரவாயிற்று.

பலவிதமாய்த் தட்டிக்கெட்டுத் தடுமாறி, தவறுதல்களிலிருந்து புத்திவந்து கடைசியாக சர்க்கார் இப்பொழுது புதுவிதமாகச் சர்வே நடத்துகிறார்கள். இப்பொழுது வயலின் எதிரெதிரேயுள்ள மூலைகளை ஒரு கோட்டால் சேர்த்து, இரண்டு நுனிகளில் மாத்திரம் கல் நட்டு, அந்தக் குறுக்குக்கோட்டின் இருபக்கத்திலும் வயலின் எல்லை வளையுமிடத்திலிருந்து மேற்சொன்ன குறுக்கு மூலைக்கோடுவரையில் இடையிலுள்ள நிமிர்ந்த நேர்நீளங் கண்டுபிடித்து விஸ்தீர்ணம் கணக்குப் பண்ணுகிறார்கள். இந்த முறையில் என்ன

குறைகள் இருக்கின்றனவோ இனிமேல்தான் தெரிய வேண்டும்.

இனி, மறு செட்டில்மெண்டைப் பின்பற்றுவோம். நம் ராஜதானி முழுவதும் சர்வே 30 அல்லது 40 வருஷத்திற்குள் முடிந்துவிடுமென்று சர்க்கார் நினைத்திருந்தார்கள். அதற்குப்பின் சர்வேவேலையில் அமர்ந்திருப்பவர்களைபிரித்துவிடலாம் என்றெண்ணியிருந்தார்கள். ஆனால் இதுவிஷயத்தில் கொடுமையாக ஏமாந்தார்கள். முன் சர்வேயான ஜில்லாக்களில், அநேக வருஷங்களுக்குப் பிற்பாடு மறுசெட்டில்மெண்டு நடத்தும்போது வயல்களின் எல்லைகளில் வைத்திருந்த எல்லைக்கற்களெல்லாம் காணமற்போய்விட்டன. சர்வேஅண்டு பவுண்டரீஸ் மார்க்ஸ் ஆக்டுப்படி (Survey and Boundaries Act) நிலக்காரர்கள் கற்களைக் காப்பாற்றவேண்டுமென்று விதித்திருக்கிறது வாஸ்தவந்தான். ஆனால் அக்கடமையை அவர்கள் சரிவரச் செலுத்தும்படி ஏற்பாடுகள் ஒன்றும் செய்யவில்லை. அவைகளைக் கவனிக்கும்படி கர்ணன்கள்மேலும் பொறுப்புக்கட்டவில்லை. சர்வேபண்ணினதெல்லாம் வீணாய்ப் போய்விட்டது. ஒரு வயலில் பல கற்களில் ஒன்றிரண்டு மாத்திரம் தவறியிருந்தால், கணக்குகளிலுள்ள அளவையனுசரித்து புதுக்கற்கள் போட்டுவிடலாம். இது மாத்திரம் செய்தால் அதற்குத் திருத்தல் சர்வே என்று பெயர். ஏராளமாய் அவ்விதம் செய்யவேண்டியிருந்த கிராமத்தை யெண்ணி பூராவாக மறு சர்வே செய்துவிடுவதே நலமென எண்ணும்படியாயிற்று.

புதிதாய் நடக்கிற மறு சர்வேக்களைப்பற்றி விசாரணைசெய்தபோது, இதுவரையில் நடந்த சர்வேயின்

குறைகள் வெளிப்பட்டன. சர்வேயின் பிரயோஜன மெல்லாம் கற்களைக் காப்பாற்றுவதில் சார்ந்திருக்கிறது. அதற்காக சர்க்காரில் நிலக்கணக்குப் பதிவு இலாகா (Land Records Department) என்று ஒரு புது இலாகா ஏற்படுத்தினார்கள். கற்களைப் பரிசோதித்து, போனவைகளுக்கு புதிது போடவேண்டியது கிராம கர்ணனுடைய கடமையாயிற்று. அவன் வேலையை மேற்பார்ப்பதற்கு ஒவ்வொரு தாலுக்காவுக்கு ஒவ்வொரு ரிவின்யூ இன்ஸ்பெக்டரும், ஜில்லாவுக்கு ஒரு தாசில்தாரும் இருக்கிறார்கள். இந்த இலாகா வேலைசெய்ய ஆரம்பித்து கொஞ்ச வருஷங்களாகின்றன. ஆனால் சர்க்கார் எதிர்பார்த்திருந்த தெல்லாம் நிறைவேறவில்லை. ஏற்கனவே கர்ணனின் வேலை கிராமபவும் பளுவானது தன் சொந்தக்காரியத்தைப்போல இந்தக் காரியத்தையும் அவன் கவனிப்பானென்று சர்க்கார் நினைத்தார்கள். அப்படிப்பட்ட மனிதர்கள் மிகவும் அரிது. நில ஆக்ரமிப்புகளைக் கண்டுபிடிப்பதிலும், பாய்ச்சல்வாரிக் கணக்குக் கொடுப்பதிலும், வழக்க விரோதமான சாகுபடிகளைக் கவனிப்பதிலும் அவனுக்குப் பூரா வேலை யிருப்பதுடன், அவைகளால் நிலக்காரர்களும் ஒருவாறு அவன் கைக்குள்ளிருக்கும்படி நேரிடுகிறது கெட்டுப்போன கற்களைத் திருப்பி வைப்பது அவனுக்கு அவ்வளவு லாபகரமானதில்லை. தானாக வேலை செய்யாதவிடத்தில் மேற்பார்வை கடுமையாக விருந்தால் வேலைசரியாய் நடக்குமென்றெண்ணக்கூடும். அதற்கு லாண்டு ரிகார்டு இலாகாவில் ஏற்பட்டிருக்கிற தாலூகாவுக்கு ஒரு இன்ஸ்பெக்டரும், ஜில்லாவுக்கு ஒரு தாசில்தாரும் போதவேபோதாது. சாதாரண ரிவின்யூ இன்ஸ்பெக்டரையே லாண்டு

ரிகார்டு இன்ஸ்பெக்டரின் வேலையைச்செய்து, கர்ணன் காரியத்தை மேற்பார்க்கச் சொல்லலாமென்று இப்பொழுது யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த யோசனையைக் கேட்டமாத்திரத்திலேயே அது உபயோகப்படாதென்று தோன்றுகிறது. ரிவின்யூ இன்ஸ்பெக்டருக்கு இப்பொழுதிருக்கிற வேலைகளே மிகவும் பொறுப்புள்ளவைகளாயிருக்கின்றன. அவைகளைக்கூடச் செய்யாமல் அசட்டைசெய்வது மிகுதியாய்க்கொண்டுவருகிறது. கற்களைக் காப்பாற்றவேண்டுமென்ற வேலையையும்ஏற்றினால் அந்தவேலை ஞாபகத்தில்கூட இராது. கர்ணன் வேலையைக் கொஞ்சம் குறைக்க வெண்ணி, காப்பாற்ற வேண்டிய கற்களை சிறிது குறைத்திருக்கிறார்கள். முதலில் உட்பிரிவுகளின் (சப்டிவிஷன்) கற்களைத் தள்ளிவிடலாம் என்று உத்தரவு செய்தார்கள். பின்னால் எதிர்மூலைகளைத் தவிர வயலின் மற்ற வளைவுகளைக் குறிக்கும் கற்களையும் ஒதுக்கிவிட்டார்கள். என்னவிதமாக இப்படியெல்லாம் தத்கால சாந்திகள் செய்தாலும், அந்தக் காரியத்தை அதற்குத்தகுந்த இடத்தில் பொறுப்புக் கட்டினாலொழிய காரியம் நடைபெறாதென்பது நிச்சயம் பஞ்சாயத்தார் மூலமாய் கிராமத்தார்களே அந்த வேலையை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒருதரம்செய்த சர்வேயைச் சாசுவதமாக்கி விடவேண்டுமென்று சர்க்கார் உத்தேசிக்கிறார்கள். இவ்வுலகத்தில் ஒவ்வொன்றும் மாறிக்கொண்டேயிருக்கிறதென்றவிஷயத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள்போலும். சாத்தியமில்லாத காரியத்தைச் செய்யவேண்டுமென்று முயலுகிறார்கள்.

## அத்தியாயம் 3.

---

கடைசி அத்தியாயத்தில் ரயத்துவாரி நிலங்களைச் சுத்தமாய்ச் சர்வேசெய்வதற்காகக் கவர்ன்மெண்டார் செய்த முயற்சிகளைப்பற்றிச் சொன்னோம். இனி அந்தநிலங்களின்மேல் ஒழுங்கான முறைப்படி தீர்வை விதிப்பதற்குச்செய்த முயற்சிகளைப்பற்றிக் கவனிப்போம். சுருக்கமாகச் சொன்னால், தீர்வை நிர்ணயிப்பதற்குமுன் செய்யுங்காரியங்களாவன:— மண்வளமைப்படி நிலங்களை வகுத்தல், அவைகளின் சாதாரண விளைச்சலைக் கண்டுபிடித்தல், அந்த விளைச்சலின் பண மதிப்பு என்னவென்று பார்த்தல் சாதாரணமாக நிலங்களை ஐந்து வகுப்புகளாகப் பிரிக்கலாம்=வண்டல், கரிசல், செவ்வல், சுக்கான், உப்புமண் வண்டல் என்ற வகுப்பு தஞ்சாவூர் ஜில்லாவில் முதலில் ஏற்பட்டது. காவேரி பாயும் பிரதேசத்திலுள்ள நிலங்கள் ஆற்று வண்டலால் கொழுமையடைந்து பல விடங்களிலிருந்தும் அடித்துகொண்டுவந்து சேர்க்கப்பட்ட பல மண்கள் கலந்திருப்பதால், அவைகளைக் கரிசல் செவ்வல் முதலிய வகுப்புக்களில் சேர்க்கவில்லை. மேற்சொன்ன ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று உட்பிரிவுகள் உண்டு. அதாவது களி, மணல், களியும்மணலும் கலப்பு. பெரும்பான்மை களியாயிருந்தால், அந்த மண்ணைக் 'களி' யென்றும், களியைக் காட்டிலும் மணல் மிகுந்திருந்தால் அந்த மண்ணை 'மணல்' என்றும், இரண்டும் கிட்டத்தட்ட சமமாயிருந்தால் அந்த மண்ணைக் 'கலப்பு' என்றும் கருதப்படும். முதலாவதாகிய வண்டல் என்னும் வகையில், 'களி' யென்றும் 'கலப்பு'

என்றும் இரண்டே பிரிவுகள்தான். மற்ற நான்கு வகைகளிலும், ஒவ்வொன்றிலும் மூன்று பிரிவுகள் உண்டு. ஆக நிலங்களின் பல பிரிவுகள் பின்வருமாறு:— 1. வண்டல் களி, 2. வண்டல் கலப்பு, 3. கரிசல் களி, 4. கரிசல் கலப்பு. 5. கரிசல் மணல், 6. செவ்வல் களி, 7. செவ்வல் கலப்பு, 8. செவ்வல் மணல், 9. சுக்கான் களி, 10 சுக்கான் கலப்பு 11. சுக்கான் மணல், 12 உப்புக்களி, 13 உப்புக் கலப்பு, 14. உப்பு மணல். இந்த வகைகள் ஒவ்வொன்றிலும் ஐந்து "தினுசுகள்" ஏற்பட்டிருக்கின்றன அவைகளில் முதல் தினுசு இரண்டாவதுக்கு மேற்பட்டது. இரண்டாவது மூன்றாவதுக்கு மேற்பட்டது, அம்மாதிரியே பின்னும் ஐந்தாவது தினுசுதான் எல்லாவற்றிற்கும் தாழ்ந்தது.

மேற்சொன்ன பதினாலு வகைகளில், ஒரு வகுப்புக்கும் மற்றொன்றுக்கும் வேற்றுமை கண்டுபிடிப்பது அதிக சிரமமானதல்ல. உற்றுப்பார்த்தாலே மண் கரிசலா, செவ்வலா, சுண்ணாம்பு கலந்ததா, கடற்கரை மணல்போல் உப்புத்தன்மையுள்ளதா என்று சொல்லி விடலாம். ஒரு மண்ணானது களியா, மணலா, அவையிரண்டின் கலப்பா, என்பதையும் சுலபமாய் அறியலாம். நிதானிப்பதில் ஏதேனும் சந்தேகமிருந்தால், ஒரு கையளவு மண் எடுத்து ஒரு பாத்திர ஜலத்தில் போட்டுக்கலக்கித் தெளிந்தபின் மணல் எவ்வளவு படிந்திருக்கிறது, களி எவ்வளவு படிந்திருக்கிறது என்று பார்த்து. மண்ணின் தன்மையைக் கண்டு கொள்ளலாம். ஆனால் மேலே "தினுசுகள்" என்று சொன்னோமே அவைகளை உற்றுப்பார்த்தோ அல்லது

சோதனை செய்தோ ஒன்றுக்கொன்று வித்தியாசம் சொல்லமுடியாது. அந்த தினுசுகளின் வித்தியாசம், மண்ணின் தன்மையைப் பொறுத்ததல்ல. அந்தப் பாகுபாடு மனோ நிதானத்தின்மேல் செய்கிற காரியம் தான். உதாரணமாக குடியிருப்புத் தெருவுக்கோ அல்லது பாய்வாய்க்கால் தலைப்பிற்கோ கிட்ட இருக்கும் வயல்களை உயர்ந்த தினுசாகவைத்து, தூரத்தில் இருப்பவைகளைத் தாழ்ந்த தினுசாகக் கருதப்படும். ஆதியில் நிலப்பாகுபாடு செய்தவர்களுக்கு இந்த விஷயம் நன்ருய்த்தெரியும் இக்காலத்தில் மறு செட்டில்மெண்டு நடக்கும்போது அந்த விஷயம் மறந்துபோயிற்று தினுசுகள் என்ற பிரிவுகள் மனதுக்குத் தோன்றும் நிதானத்தின்பேரில் ஏற்பட்டவை யென்பதற்கு இரண்டொரு உதாரணங்கள் கூறுவோம். தஞ்சாவூர் ஜில்லா செட்டில்மெண்டின் போது 2 வது வகுப்பாகிய வண்டல் கலப்பில் முதல் தினுசைச் சேர்ந்ததென்று சில ஸ்தலங்களைச் செட்டில்மெண்டு அதிகாரி தீர்மானம் செய்தார். பிறகு, திருவையாற்றுக்குச் சமீபத்திலுள்ள மிகவும் சிலாக்கியமான சில நிலங்களை மாத்திரம் முதல் தினுசாக வைக்கவேண்டுமென்று நினைத்து மேற் சொன்ன ஸ்தலங்களை இரண்டாவது தினுசாக்கமாற்றினர். இதற்கு ரெவின்யூ போர்டார் சம்மதிக்கவில்லை. அந்தநிலங்களுக்கு ஏகரா 1-க்கு ரூ 14 வீதம்போட உத்தேசித்து முதலில் தினுசு பிரித்திருந்தபடியே திரும்பவும் செய்துவிட வேண்டுமென்று செட்டில் மெண்டு அதிகாரிக்குக் கட்டளையிட்டார்கள். மேலும் கும்பகோணம் நன்னிலம் தாலூகாக்களில் தினுசுகள்

பிரித்திருந்தது சரியல்லவென்றும், செட்டில்மெண்டு ஆபீசர் உள்ளதற்குமேல் ஏற்றி நிலங்களைத் தினுசுகள் வகுத்திருக்கிருரென்றும், அந்த ஏற்றத்தைத்தாழ்த்த வேண்டுமென்றும், ரெவின்யூ போர்டாரே ஒப்புக் கொண்டிருக்கிருர்கள். தீர்வைமொத்தக் கணக்கு களைக் கடைசியாக அங்கீகரிக்கும்போது தினுசுகளைத் தாழ்த்தி விடலாமென்று உத்தேசித்திருந்தார்கள். மேலே கவர்ன்மெண்டாரும் அதே அபிப்பிராயமாயி ருந்தார்கள். செட்டில்மெண்டு ஆபீசர் செய்திருந்த நிலப்பாகுபாட்டை மாற்றவேண்டுமென்று பொதுவாய் உத்தரவு செய்ததுடன், மூன்று தாலூக்காக்களில் வண்டல் வகுப்புகளைப்பற்றி ஸ்பெஷலாக உத்தரவுகள் பிறப்பித்தார்கள். இந்த தினுசுகள் பிரிப்பதில் இன் னெரு விசேஷமுண்டு. ஏதாவதொரு கிராமத்தில் தினு சுகள் பிரித்துத் தீர்வைபோட்டபின், மொத்தத்தீர்வை அண்டை கிராமங்களின் சராசரித் தீர்வைமொத்தத் திற்குக் குறைவாயிருந்தால் அந்தக் கிராமத்தில் "தினுசுகள்" பிரித்திருந்ததை மாற்றி ஒருபடி ஏற்றி விடுவது வழக்கம்; அதிகமாயிருந்தால் ஒருபடி இறக் கிவிடுவது வழக்கம். இந்த வழக்கமுண்டென்று செட் டில்மெண்டு அதிகாரிகளுக்குள் நன்ருய்த்தெரிந்ததே. தீர்வைஇறக்கவோ ஏற்றவோ வேண்டுமானுல், அதற்கு வழி தினுசுகளை யிறக்குவது அல்லது ஏற்றுவது. இத ஞல், சாஸ்திர ஸித்தமான ஆதாரங்களைக்கொண்டு நிலப்பாகுபாடு ஏற்பட்டிருக்கிறதென்று அதிகாரிகள் சொல்லிக்கொள்வது வழக்கமாயினும், அக்காரியம் ஒரே மாதிரி மாருத ஒழுங்குடன் செய்யப்படவில்லை.

யென்றும், அவ்வப்பொழுது அதிகாரியாக இருக்கிற வருக்குத் தோன்றியபடி செய்வதற்கு ஏராளமாக இடமிருக்கிறதென்றும் விளங்கும்.

வகுப்புகளும் தினுசுகளும் எவ்வளவு இருக்கின்றனவோ அவ்வளவு தீர்வை வீதங்களும் இல்லை. தீர்வை சம்பந்தப்பட்ட மட்டில், சில வகுப்புக்களின் தினுசுகள் ஒரே மதிப்புள்ளவைகளாக இருக்கின்றன. முதலில் நஞ்சை நிலங்களை எடுத்துக்கொள்வோம். இதில் எல்லாவற்றிற்கும் உயர்ந்த மண் வண்டற்கலப்பில் முதல் தினுசு, அதாவது 2(1) அடுத்தபடி வண்டற்கலப்பில் இரண்டாம் தினுசும், அதாவது 2(2)ம், வண்டற்களியில் முதல் தினுசும், அதாவது 1(1)ம் ஒரு மதிப்புள்ளவை. இதேமாதிரி முறையே கீழ்க்கண்ட வரிசைகளில் ஒரு மதிப்புள்ள தினுசுகள் காண்பிக்ப்பட்டிருக்கின்றன.

* 2(2)=1(1)

1(2)=2(3)=1(1)

1(3)=2(4)=3(1)=4(2)=7(1)

1(4)=2(5)=3(2)=4(3)=5(1)=6(1)

7(2)=8(1)=12(1).

மேலே இரண்டாவது வரிசையின் அர்த்தமாவது வண்டற் களியில் இரண்டாம் தினுசும், வண்டற் கலப்பில் மூன்றும் தினுசும், கரிசற் கலப்பில் முதல் தினுசம்

---

* 2(2); இதில 2 என்பது 2-வது வகுப்பைக் காட்டுகிறது. அதாவது "வண்டற் கலப்பு". மேலே இந்த அத்தியாயத்தின் முதல் பாராவைப் பார்க்கவும். (2) என்பது தினுசைக்காட்டுகிறது அம்மாதிரியே, 1(1) என்றால் 1-வது வகுப்பு முதல் தினுசு.

ஒரு மதிப்புள்ளன. கீழே கட்டானிட்டுக் காட்டியிருப் பதைக் கவனித்துப் பார்த்தால், இந்த விஷயம் நன் ருக விளங்கும் ஒரு வரிசையிலுள்ள தினுசுகள் ஒரு மதிப்புள்ளன. அதாவது ஒரே கிஸ்தியுள்ளன.

| வகுப்புகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 12 | 13 | 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள (5) தினுசுகள். | (1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | (1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | ...<br>(1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | (1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | ...<br>(1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | ...<br>(1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | (1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | (1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | (1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | (1)<br>2)<br>3)<br>4) | (1)<br>2)<br>(3) |

இதிலிருந்து வண்டற்கலப்பில். முதல்தினுசானது எல்லாவற்றிற்கும் உயர்ந்த கிஸ்தி யுள்ளது என்று தெரிகிறது. வண்டற் களியில் முதல் தினுசு அடுத்து வருகிறது. பிறகு கரிசற் கலப்பில் முதல் தினுசும், அதாவது 4 1ம், கடைசியில் செவ்வல் கலப்பில் முதல் தினுசும், அதாவது 7 (1)ம், வருகின்றன. மண்களில் ஒரேமாதிரி தினுசுகள் எடுத்துக்கொண்டால், கலப்பு சிலாக்கியமென்றும், பிறகுகளியும், பிறகுமணலும் வரு கின்றனவென்றும் ஏற்படுகிறது அதாவது அந்தந்த வகுப்பில் கலப்பில் முதல் தினுசானது களியில் முதல் தினுசைக்காட்டிலும் சிலாக்கியமென்றும், களியில் இரண்டாம் தினுசானது மணலில் இரண்டாம் தினு

சைக்காட்டிலும் சிலாக்கியமென்றும் தெரிகிறது. கரிசல் வகுப்பில் முற்றிலும் இந்தப்படியே யிருக்கிறது. செவ்வல் வகுப்பிலோ களியும் மணலும் தினுசுக்குத் தினுசு சமமதிப்புள்ளன. உப்புமண் வகுப்பு தினுசுகள் செவ்வல் வரிசைகளைக் காட்டிலும் ஒருபடி தாழ்ந்தன.

மேலே வரைந்திருக்கும் கட்டான் நஞ்சைகளைப் பற்றினது. புஞ்சைகளில் கலப்பைக் காட்டிலும் களி சிலாக்கியம். அடுத்துவரும் கட்டான்களைப் பார்க்கவும்.

| வகுப்புகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 12 | 13 | 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (௫) தினுசுகள். | (1) | | | | | | | | | | |
| | (2) | (1) | | | | | | | | | |
| | (3) | (2) | (1) | | | | | | | | |
| | (4) | (3) | (2) | (1) | | | | | | | |
| | (5) | (4) | (3) | (2) | ... | ... | (1) | | | | |
| | | (5) | (4) | (3) | (1) | (1) | (2) | (1) | (1) | | |
| | | | (5) | (4) | (2) | (2) | (3) | (2) | (2) | (1) | |
| | | | | (5) | (3) | (3) | (4) | (3) | (3) | (2) | (1) |
| | | | | | (4) | (4) | (5) | (4) | (4) | (3) | (2) |
| | | | | | (5) | (5) | ... | (5) | (5) | (4) | (3) |

வகைகள் வகுத்தான பிற்பாடு அடுத்த காரியம் செய்யவேண்டுவது, பலதினுசான நிலங்களில் சாதாரணமாக விளையக்கூடிய விளைச்சல் எவ்வளவென்று தீர்மானிக்கவேண்டும். நஞ்சை நிலங்களில் சாதாரணமாக நெல் பயிரிடுவதாகவும், புஞ்சைகளில் கம்பு, சோளம், கேழ்வரகு, வரகு இவைகள் சாகுபடி செய்

வதாகவும் வைத்துக்கொள்ளப்படும். செட்டில்மெண்டு இலாகாவில் நேரே பரிசோதித்து நிலத்தின்விளைவைக் கண்டுபிடிக்கிறார்கள் இந்தக் காரியத்தைப்பற்றிப் பல விவாதங்கள் உண்டு. தஞ்சாவூர் ஜில்லாவில் இது விஷயமாக நடந்தது பின்வருமாறு:—1890௵ பிப்ரவரியிலும், அக்டோபரிலும், 1891௵ பிப்ரவரியிலும் ஆக மூன்றுசால்களில் விளைச்சற் பரிசோதனை செய்தார்கள். இம்மூன்று மகசூல்களில் முதலாவதும் மூன்றாவதும் ஐந்து மாதப்பயிரான சம்பா, இரண்டாவது மூன்று மாதப்பயிரான கார். அவ்வருஷம் செப்டம்பர் முதல் நவம்பர் வரையில் மழையில்லாததினால் முதல்சாலில் சரியான விளைவில்லை. ஆதலால் செட்டில்மெண்டு ஆபீசர் பரிசோதனையில் கிடைத்தவிளைச்சலுக்குமேல் 100-க்கு 25 அதிகம் சேர்த்துக்கொண்டார். அப்படிச் சேர்க்கக்கூடாதென்று நிலக்காரர்கள் ஆட்சேபித்தார்கள். தவிரவும், சம்பாவைக் காட்டிலும் காரில் அதிகம் விளையுமானதால், கார் மகசூலைக் கணக்கெடுத்துக் கொள்ளக்கூடாதென்றும் சொன்னார்கள். கலெக்டரும் அவர்கள் கட்சிக்குச் சார்பாயிருந்தார். ஆனால் ரெவின்யூ போர்டார் செட்டில்மெண்டு அதிகாரி தீர்மானத்தையே ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். 1891௵ பிப்ரவரி மாதத்திய மகசூல் சம்பந்தப்பட்டமட்டில் மழையில்லையென்ற ஆட்சேபம் செல்லாதென்று சொன்னார்கள். அதுமட்டுமில்லை. தென்னாற்காடு ஜில்லாவில் ஏகருக்கு 1100 பட்டணம் படியென்றும், மதுரையில் 1000 பட்டணம் படியென்றும், கோயம்புத்தூரிலும் வேறு நாலு ஜில்லாக்களிலும் பட்டணம் படி 1300 முதல் 1600 வரையில் என்றும் விளைச்சல் தீர்மானம் ஏற்பட்டிருக்கிறதாகவும்,

அந்தஜில்லாக்களின் நிலங்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் வண்டல் கலப்பு முதல் தினுசைக்காட்டிலும் மூன்று படி கீழேயுள்ளனவென்றும், அப்படியிருக்க, தஞ்சாவூர் ஜில்லாவில் வண்டல் கலப்பு முதல் தினுசு நிலத்துக்கு ஏகரா 1-க்கு 11.25 பட்டணம் படியென்று செட்டில்மெண்டு ஆபீசர் விளைச்சல் கணக்கிட்டிருப்பது சரியல்லவென்று சொல்லி, அதை மாற்றி, ஏகருக்கு 11.50 படியாக ரெவின்யூ போர்டார் உயர்த்திவிட்டார்கள். அடுத்த ஆறு தினுசுகளுக்கு மாத்திரம் செட்டில்மெண்டு ஆபீசரின் விளைச்சல் கணக்கை ஏற்றுக்கொண்டார்கள். அதற்கடுத்த ஏழு தினுசுகளில், ஒவ்வொரு வகையிலும் அவருடையகணக்குக்குமேல் 5 படி ஏற்றினார்கள். செட்டில்மெண்டு ஆபீசர் ஸ்தலத்தில் விஷயங்களை நேரே பார்க்கும் அதிகாரி. அவர் தனக்கு மேலுள்ளவர்களின் தயவை சம்பாதிக்க வேண்டியவராதலால், குறைந்த கணக்குப்போட்டிருக்க நியாயமில்லை. ஆனாலும், குளிர்ந்த கடற்காற்று வீசும் சென்னப்பட்டணம் போர்டாபீசில் உட்கார்ந்திருக்கும் மெம்பர்கள் ஸ்தலத்திலுள்ள அதிகாரியின் காரியங்களை மாற்றிவிட்டார்கள் நமக்குசுயாதிபத்தியம் இருந்தால் இது நடந்திருக்குமா?

---

## அத்தியாயம் 4.

ரயத்துவாரி நிலங்களுக்குத் தீர்வை போடுவதில் முக்கியமான காரிங்களாகிய (1) மண்ணுக்குத் தக்கபடி நிலப்பாகுபாடு, (2) நிலங்களின் சாதாரண விளைச்

சலைக் கண்டு பிடித்தால். இவைகளைப்பற்றிக் கடைசி அத்தியாத்தில் சொன்னோம் அதே மாதிரி முக்கியமான அடுத்த காரியமாகிய நில விளைச்சலுக்கு விலை மதிப்பிடும் காரியத்தைப்பற்றி இனிச்சொல்வோம். ஒரு காலத்தில் கவர்ன்மெண்டார் இருபது வருஷ காலத்தை யெடுத்துக்கொண்டு அதற்குள் தாழ்ந்து விற்ற விலையை ஆதாரமாய்க் கொண்டார்கள். அது நிலக்காரர்களுக்கு சௌகரியமாய் இருந்தது. முன்னேயே சொன்னபடி, அதை விட்டுவிட்டு, இப்பொழுது சராசரி விலையை எடுத்துக்கொள்ளுகிறார்கள். சராசரிக் கணக்கையனுசரிப்பதில் இயற்கையாய் அமைந்துள்ள கெடுதல்களெல்லாம் இதிலுமிருக்கின்றன சர்க்கார்போட்டிருக்கிற சராசரிவிலைக்குமேல் எந்தவருஷமாவது தூக்கிவிற்றால், எப்பொழுதுமே பசித்திருக்கும் ஏழை விவசாயி அதிகப்படி கிடைத்திருப்பதை அவாவுடன் விழுங்கிவிடுகிறான். சராசரிக்குக் குறைவாக விற்கிற வருஷங்களில் கஷ்டப்படுகிறான். ஏதோ அதிர்ஷ்டவசம் அநேக ஜில்லாக்களில் விலைகள் முன்னேபோட்ட சராசரிக்குமேல் தூக்கியே இருந்து கொண்டிருப்பதால் இந்தக் கஷ்டம் இன்னும் அதிகமாக வெளிக்குத்தெரியவில்லை.

எந்த விலைகளின் சராசரியை எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்று பார்ப்போம். அவ்விலைகள் விவசாயிகளுக்கு உண்மையாய்க்கிடைக்கும் விலைகளா, சாதாரணமாய் அவர்கள் எந்தமாதங்களில் விற்பது வழக்கமோ அந்த மாத விலைகளா என்றால், இரண்டுமில்லை. தாலூக்கா கச்சேரியில் ஒவ்வொரு நாளும் பதிவு செய்யப்படும். விலைகளையே கணக்கில் எடுத்துக்

கொள்ளுகிறார்கள். நெல் விளைந்து விற்பனையாகும் கிராமங்கள் பட்டணத்திலிருந்து பலவிதமாக தூரங்களிலிருக்கிறபடியால் பட்டண விலையைக் கணக்கெடுத்துக்கொள்வது கிராம மிராசுதார்களுக்கு நஷ்டந்தான். தவிரவும் கிராமத்தில் மொத்தமாய் வியாபாரிகள் பிடிக்கும் விலை பட்டணத்தில் வழங்கும் சில்லரை விலையைக் காட்டிலும் குறைவாக இருப்பதுடன், பட்டண விலையில் வாங்கிவிற்கும் வர்த்தகர்களின் லாபமும் அடங்கியிருக்கிறது. மேலும், தாலுக்கா கச்சேரியில் பதிந்திருக்கும் விலைகள் 12-மாதத்திற்கும் சேர்ந்த சராசரி விலைகள். சாதாரணமாக நெல் விலையாகும் மாதங்களின் விலைகளல்ல. விளைந்ததை விற்பதற்கும் அல்லது தின்பதற்கும் முன்னேயே வரியை வசூலித்து விடவேண்டுமென்று சர்க்கார் ஏற்பாடு செய்திருப்பதால், அறுவடையானவுடனேயே தான்யம் பெரும்பான்மை விலையாகிவிடுகிறது. விவசாயிகள் வருமுன் காக்கும் சுபாவம் உள்ளவர்களல்லவென்று தெரிந்தே சர்க்கார் கிஸ்திவசூலுக்கு கெடுக்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சராசரிக்கணக்கெடுக்கும் போது மாத்திரம் அந்த எண்ணம் எங்கேபோய் விட்டது? நிலக்காரர்கள் எல்லாருமே ஒரு வருஷம் அதிக விலை விற்றால் அதனால் ஏற்படும் மிகுதியை இன்னொரு வருஷத்துக்குக் காப்பாற்றி வைக்கவேண்டுமென்ற முன்யோசனை யுள்ளவர்களா? மிராசுதார்கள் சாதாரணமாய் தான்யம்விற்கும் மாதங்களில் விலை தாழ்வாயும் மற்ற மாதங்களில் ஏற்றமாயும் இருக்கிறது. எல்லா மாதத்துக்கும் சராசரி யெடுத்துக்கொண்டால் அவர்களுக்குக் கெடுதல்தான். அறுவடைக்கு அடுத்துவரும்

மாதங்களின் விலைகளையே முன்னே நிர்வைகிர்ணயிப்பதற்கு உபயோகித்தார்கள். இப்பொழுது அதுமாறி விட்டது.

ஆகவே, விலைவாசிக் கணக்கில் மூன்று விதப் பெருங்குறைகள் இருக்கின்றன. (1) தாலூக்கா ஸ்தானத்திலிருந்து கிராமங்கள் பலவாறாக தூரத்திலிருப்பதைக் கவனியாமை; (2) இடையில் நிற்கும் தரகர்களின் லாபத்தையும் வர்த்தகர்களின் லாபத்தையும் விட்டுவிடுவது; (3) அறுவடைக்காலத்து விலையை விட்டுவிட்டு, வருஷ மொத்தத்தின் சராசரி விலையையெடுத்துக்கொள்வது. சர்க்கார், முதலிரண்டு குறைகளை மட்டிலாவது அறிந்திருக்கிறார்கள். இவைகளுக்கென்றே 100க்கு இவ்வளவென்று தள்ளிவிடுகிறார்கள். தஞ்சாவூர் செட்டில்மெண்டில் 100-க்கு 15 குறைத்தார்கள். அது போதுமாவென்பதுதான் கேள்வி. இது விஷயமாக கலெக்டருக்கும் போர்டுக்கும் மேலும்கீழும் போய்வந்திருக்கும் கடிதங்களைப் பார்த்தால் அநேக விஷயம் வெளிப்படும்.

100-க்கு 15 தள்ளவேண்டுமென்று என்ன விதமாய்க் கணக்கிட்டார் என்று செட்டில்மெண்டு ஆபீசர் சொல்லவில்லை. அவர் ரிபோர்ட்டில், தாலூக்காவின் முக்கிய பட்டணத்திலிருந்து கிராமங்கள் சிரவலில் எவ்வளவு தூரத்திலிருக்கின்றன வென்றும், சர்க்காரில் உத்தியோகஸ்தர்களுக்கு கட்டைவண்டியில் போவதற்குப் பிரயாணச் செலவுகொடுக்கிற விதப்படி கணக்கிட்டால் கிராமத்திலிருந்து வண்டி வாடகை என்னவாகிறதென்றும்; மொத்த விலைகளுக்கும் சில்லரை விலைகளுக்கும் வித்தியாசம் எவ்வளவென்றும்; அறு

வடைக்காலத்து விலை வருஷசராசரி விலையைக்காட்டிலும் எவ்வளவு தாழ்ந்திருக்கிறதென்றும் ஒரு விவரமாவது இல்லை தென்னாற்காடு ஜில்லாவில் 100 க்கு 10 குறைத்திருப்பதாகவும், தஞ்சாவூரில் 15 குறைக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்திருப்பதாகவும், இவ்வளவுதான் ரிபோர்ட்டில் கண்டிருக்கிறது ஏன் அப்படிச் செய்தார்களாம்? ஏனென்றால், மாற்றுவிதம் கணக்கிடுவதில் "சமீப வருஷங்களின் விலைகளை யெடுத்துக்கொண்டிருப்பதால் சராசரி விலை ஏறியிருக்கும்" என்ற காரணமாம். இந்தக் காரணம் போதுமா? மிராசுதார்களும் ஆக்ஷேபித்தார்கள். கடற்கரைப் பட்டணங்களில்விற்கும் விலைகளைக் கணக்கில் சேர்த்திருப்பது சரியல்லவென்று முறையிட்டார்கள். துறைமுகப் பட்டணங்களிலிருந்து உள்நாட்டுக்குநல்ல ரஸ்தாக்கள் இருக்கின்றனவென்று ரெவின்யூ போர்டார் பதில் சொன்னார்கள். அப்படியே யிருக்கட்டும்; அது மிராசுதார்களுடைய ஆக்ஷேபனைக்கு சமாதானமாகுமா? ரஸ்தாக்கள் இருப்பது வாஸ்தவம் ஆனால் துறைமுகத்திலுள்ள விலை கிராமத்திலிருந்து அங்கே வருவதற்கு வண்டிச்சத்தமும் சேர்ந்ததாக இருக்குமல்லவா? வண்டிச்சத்தத்துக்கென்று எவ்வளவு தள்ளுபடி செய்யப்பட்டது? அது போதுமானதா? அறுவடைக்கால விலையை யெடுத்துக்கொள்ள வேண்டுமென்று மிராசுதார்கள் கேட்டதற்கு, கஷ்டமில்லாமல் விற்பதற்கு சௌகரியம்வைத்தே சர்க்கார் கிஸ்திவசூல் செய்கிறார்கள் என்று ரெவின்யூபோர்டார் பதில் சொன்னார்கள் இது யதார்த்தமல்ல சாதாரணமாய், பொங்கலானவுடன் அறுப்பு ஆரம்பிக்கிறது. அதா

வது ஜனவரி 15-ந் தேதி சுமார். ஜனவரி மாதம் 10-ந் தேதி சர்க்கார் கிஸ்தியில் முதல்பகுதி செலுத்தவேண்டிய கெடு. பிப்பரவரி, மார்ச்சு, ஏப்பிரல் மாதங்களில் அதேதேதிகளில் பிற்பட்ட மூன்று கெடுக்கள் ஜனவரி முதல் ஏப்பிரல் வரையில் என்பதைவிட்டு பிப்பரவரி முதல் மே மாதம் வரையில் கிஸ்தி கெடுக்களை மாற்ற வேண்டு மென்று பல முறை பாடுபட்டும் பயன்படவில்லை. லாபமான விலையைப்பார்த்து விற்பதற்குத் தகுந்த அவகாசமிருக்கும்படி கிஸ்தி வசூல் கெடுக்கள் அமைந்திருப்பதாகச் சொல்லவே முடியாது. ஜூன் மாதக்கடைசி வரையில் நெல் விலை தாழ்ந்திருக்கிறதென்றும் பிற்பாடு நெல்லிருப்பு குறையக்குறைய விலை ஏறுகிறதென்றும் இந்த ஜில்லாவாசி ஒவ்வொருவருக்கும் தெரியும். பின்னால் விலையேறுமென்று ஏப்பிரல்மாதத்தில் நெல்லை விற்காமல் நிறுத்தி வைக்கப்படுவதாக செட்டில்மெண்டு உத்தியோகஸ்தர் சொல்லி யிருக்கிறார். மொத்தமகசூலில் எவ்வளவு பாகம் அம்மாதிரி நிறுத்தப்படுகிறதென்று கண்டுபிடிக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றவில்லை "அறுவடையான உடனேயே விளைச்சலிற் பெரும்பாகம் ஜில்லாவை விட்டு வெளியேறிவிடுகிறது" என்றும், "ஏப்பிரல் மாதத்தில் ரயிலில் தான்யம் ஏற்றப்படுகிறதில்லை" யென்றும் அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். நல்ல உத்தியோகஸ்தர்கள்கூட யதார்த்தத்துக்கு மாறுபாடாக பலவிஷயங்களில் ஏமாந்துவிடுகிறார்களென்பதற்கு இதுஒரு உதாரணமாகும். இந்தஇடத்தில் ரெவின்யூ போர்டார் சொல்லியிருக்கும் இன்னொரு சங்கதியைப்பற்றிக் கூறுவோம். "16-வருஷங்களில், விவசாயிகள் விலைக்

குப் போடும் விலைதணிந்திருந்த மாதங்களிலுள்ள விலைப்படி கலெக்டர் கணக்கிட்டிருப்பதால்'' கலெக்டர் போட்டவிலை ரெவின்யூ போர்டார் கணக்குக்குக் கலத்துக்குக் காலணு குறைவாயிருக்கிற தென்று சொல்லி யிருக்கிருர்கள். போர்டார் கணக்கில் கட்டாயம ஏதோ பிசகிருந்திருக்க வேண்டும்; அது இன்னதென்று அவர்கள் கண்டுபிடிக்காமல் விட்டு விட்டார்கள்.

100-க்கு 15 தள்ளுபடி மிகவும் தாராளமான தென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டார்கள். தாம்குறிப்பிட்ட நானகு வருஷங்களையாவது விலக்கிக் கணக்கிடவேண்டும், அல்லது 100-க்கு இருபதாவது தள்ளுபடி செய்யவேண்டும் என்று மிராசுதார்கள் மன்ருடினுர்கள். அவ்விதம செய்திருந்தால், நெல்லைப் பணமாக மாற்றும்விதம் (Commutation rate) கலத்துக்கு ரூ 1—0—8 ஆகயிராமல், ரூ 0—15—8 ஆக இருந்திருக்கும் சொச்சம் எட்டுத்தம்படியையாவது தள்ளிவிட்டு மாற்றுவிதம் கலத்துக்கு ஒரு ரூபா விதமாக இருக்கட்டுமென்று தஞ்சாவூர் மகாஜன சபையார் கேட்டுக்கொண்டார்கள். இந்த அற்ப வேண்டுகோளுக்குக்கூடக் கிடைத்த உத்தரமாவது, "அப்படிச் செய்தால் 4-லக்ஷம் ரூபாய் நஷ்டமுண்டாகும். அவ்விதம் நாங்கள் இழப்பதற்கு யாதொரு நியாயமுமில்லை'' என்று சொனனுர்கள் "நஷ்டம்'' "இழப்பு'' என்ற பதங்களைச்சற்று கவனிக்கவேண்டும ஏதோ கவர்ன்மெண்டார் அந்த நாலு லக்ஷமும் சேர்த்து தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பாத்தியம் நிச்சயப்பட்டு விட்டது போலும், அந்தத்தொகை

ஏற்கனவே தங்களுடையதாகிவிட்டது போலும் பேசினார்கள். ஆனால் அந்த பாத்தியத்தையே ஒப்புக்கொள்ளாமல், நியாயத்திற்குமேல் அவர்கள் கேட்கிறதாகத்தான் விவாதம் இருந்தது. மிராசுதார்களின் நிலமையையே அவர்கள் சரியாக அறியவில்லை. மிராசுதார்கள் நியாயத்துக்கு மன்றாடினார்களா, அல்லது தயவு கேட்டார்களா? நியாயத்திற்காக மன்றாடினால், அவர்களுடைய கக்ஷிகளுக்குத்தகுந்த சமாதானம் சொல்லவேண்டியது அவசியம். சட்ட சபையில் ஜனப்பிரதிநிதிகளின் அபிப்பிராயத்திற்கு அடங்கி கவர்ன்மெண்டு நிர்வாககர்கள் நடக்கவேண்டியதென்ற சீர்திருத்தம் உண்டாகிறவரையில் மிராசுதார்கள் காரியம் பலிக்காது. கடைசி அத்தியாயத்தைப்போல் ஒரு கேள்வியுடன் இந்த அத்தியாயத்தையும் முடிப்போம். சுயாதிபத்திய கவர்ன்மெண்டின் கீழ் மேலே விவரித்திருக்கும் பிசகுகள் நடந்திருக்குமா?

---

## அத்தியாயம் 5.

---

பலவகுப்பு நிலங்களின் விளைச்சலுக்கும் பணமதிப்பிட்டாய்விட்டது. அதாவது வண்டி வாடகைக்கும் வர்த்தகர் லாபத்துக்கும் தள்ளுபடி செய்தபின், இருபது வருஷங்களில் விற்றவிலைகளுக்குச் சராசரி போட்டு தான்யத்துக்கு பணமதிப்பிடப்பட்டது இதற்கு மாற்றுவீதம் என்றுபெயர். 3200 பட்டணம் படிகள் கொண்ட ஒரு கரிசையின் விலை இவ்வளவு ரூபாய் என்று வீதம் சொல்லப்படும். இந்த வீதத்திலிருந்து

இன்னும் இரண்டுவிதத் தள்ளுபடிகள் உண்டு. ஒன்று காலவித்தியாசங்களுக்காக. அதாவது எல்லா வருஷங்களும் ஒருமாதிரியிராது, ஏதோ சில வருஷங்களி லாவது மழை முதலிய சௌகரியங்களிற் குறைவேற் படுமாதலால் அதற்காக ஒரு தள்ளுபடியுண்டு. மானம் பார்த்த நாடாகிய தெனனிந்தியாவில் எல்லாம் ஒத்து நன்றாய் விளைந்த வருஷத்தின் விளைச்சலை அப்படியே யெடுத்துக்கொள்ளாமல் கொஞ்சம் தள்ளுபடி செய் தால்தான் நிலக்காரர்களுக்கு நஷ்டமில்லாதிருக்கும். இனி, மேற்கண்ட தள்ளுபடிகள் போதுமானதாவெ ன்று விசாரிக்கவேண்டும். உதாரணம் ஒன்று கூறு வோம். தஞ்சாவூர் செட்டில்மெண்டில் நஞ்சைகளுக்கு 100-க்கு 15 தள்ளுபடி செய்தார்கள். சுபிக்ஷ வருஷத் தில்ஒரு வயலின் வரும்படி 100 ரூபாயாக விருந்தால், நல்லது கெட்டது எல்லாவருஷங்களுக்கும் சராசரி வரும்படி ரூ. 85-க்குக் குறையாதென்று எடுத்துக் கொண்டார்கள். இது இப்படியிருக்க, நாம் முன்னே சொன்னபடி விளைச்சல் கணக்குப் போடும்போது, 1890-ம் வருஷத்தில் விளைந்த விளைவை அப்படியே யெடுத்துக்கொள்ளாமல் அந்த வருஷம் மழையில்லாத வருஷமானதால் 100-க்கு 25 சேர்த்து சாதாரண விளைச்சல் என்னவாயிருக்கும் என்று செட்டில்மெண்டு ஆபீசர் கணக்கிட்டார். அந்த வருஷம் விளைந்தது 900படியென்றால், அதில் காலில் ஒன்று அல்லது 225படி சேர்த்து சாதாரண விளைச்சல் 1125 படியாயி ருக்கும் என்று வைத்துக்கொண்டார் இதைத் திருப் பிச்சொன்னால், சாதாரண விளைவு 1125 படியாயிருந் தால், குறைந்த விளைவுள்ள 1890-ம் வருஷத்தில் 900

படிதான் கண்டது. அதாவது 100-க்கு 8 வீதம் தேறிற்று. இப்படியிருக்க, குறைந்த வருஷங்களில் 100-க்கு 85 வீதம் சாதாரணமாய்த்தேறும் என்று எவ்விதம் சொல்லக்கூடும்? இதிலிருந்து என்ன ஏற்படுகிறதென்றால், சர்க்கார் வரிதீர்மானம் பண்ண கணக்குப் போடும்போது மாத்திரம் கெட்ட வருஷத்திற்கு 80 ஆக இருந்தால் நல்ல வருஷத்திற்கு 100 இருக்கலாம் என்றும், அந்த எட்டைத்திருப்பி வாசிக்கிறபொழுது, அதாவது மிராசுதார்கள் விஷயமாய் சுபிட்சமில்லாத வருஷங்களுக்குத் தள்ளுபடி செய்யும்போது, எப்படியானாலும் 100-க்கு 85-க்கும் கீழ் ஒருநாளும் போகாது என்றும் சொல்லுகிறார்கள் பையன்கள் விளையாட்டில் நான் உன் வீட்டிற்கு வந்தால் என்ன தருகிறாய், நீ என் வீட்டிற்கு வரும்போது என்ன கொண்டுவருகிறாய் என்று சொல்வதுண்டு. இது அந்த மாதிரிதான் இருக்கிறது.

இன்னும், இவ்விதம் 100 க்கு 15 தள்ளுபடி செய்தார்களே, அதில் சர்வே நம்பர்களுக்குள் அகப்பட்டும் சாகுபடிக்கருகமில்லாத ஸ்தலங்களுக்காகச் செய்ய வேண்டிய தள்ளுபடியும் அடங்கியிருக்கிறதாகச் சொன்னார்கள். இதற்காக எவ்வளவு தள்ளுபடி, நல்ல விளைவில்லாத வருஷங்களுக்காக எவ்வளவு தள்ளுபடி, என்று சற்றுப் பிரித்துப்பார்ப்போம். சர்வே நம்பரில் ஏற்பட்ட விஸ்தீர்ணத்திலிருந்து, அதிலுள்ள வாய்க்கால்களிருக்கும் ஸ்தலத்தை நீக்கித்தான் கணக்குப் போடுவதால், சாகுபடியாகாமல் கணக்கிலகப்படக் கூடியது வரப்புகள் மாத்திரந்தான் என்றும், அவைகளின் விஸ்தீர்ணம், ஜாஸ்தியாக வைத்துக்கொண்

டாலும், 100-க்கு 5-க்கு மேல் இராது என்றும் செட்டில்மெண்டு ஆபீசர் சொல்லியிருக்கிறார். இந்தக் கணக்குக்கு விவரங்கள் இல்லை யாயினும் அது சரியென்றே வைத்துக்கொள்வோம் அப்பொழுது காலக் கேடுகளுக்காகத் தள்ளுபடி 100-க்கு 10 ஆகத் தாழ்ந்துவிடுகிறது. காவேரி பாயும் பிரதேசத்தில் வருஷாவருஷம் சராசரி பெய்யும்மழை போதுமானதென்றும், சாதாரணமாய்க் காலக்கேடுகளுக்காக 100க்கு 5வீதம் தள்ளுபடி செய்தலே அதிகப்படி யென்றும், செட்டில்மெண்டு ஆபீசர் சொல்லுகிறார். மழைபெய்வதை ஒரு கணக்காக வைத்துக்கொள்ளக் கூடாதென்பதை அவர்மறந்துவிட்டார். சுபிட்ச விளைவுக்கு மழை நிறையப்பெய்தால் மட்டும் போதாது. காலத்திலும் பெய்ய வேண்டும். வேண்டுமென்ற சமயத்தில் மழை பெய்யாவிட்டால் பயிர் அழிந்துவிடும். பிற்பட்ட மழையால் வருஷாவருஷ சராசரிமழை மாத்திரம் சரிக்கட்டி விடக்கூடும். மழை பெய்யாமலும் கெடுத்து, பெய்தும் கெடுக்கக்கூடும் என்பது விவசாயிகள் அநுபோகத்தில் நன்றாய் அறிந்த விஷயம். பயிரிடும் தொழிலில் சிறிது பழக்கமுள்ளவர்களுக்குக்கூட இது நன்றாய்த் தெரியும். செட்டில்மெண்டு ஆபீஸர்களுக்கும் அவருடைய மேலதிகாரிகளுக்கும் மாத்திரம் இது தெரியவில்லை. வரிவசூல் பெருகவேண்டுமென்ற ஆசை அவர் கண்களை மறைத்துவிடுவதால் தெரியவில்லை. காவேரிப்பாய்ச்சலில் குறைவே உண்டாவதில்லை யென்று சொல்வது சரியல்ல. சென்ற பிங்கள வருஷ ஆடி மாஸத்தில் சுமார் பத்துநாளைக்குக் காவேரியும் அதன் கிளைகளும் முழுவதும் உலர்ந்திருந்தன. கட

வேண்டிய வயல்கள் காய்ந்து வெடித்துப்போய் நட்ட நடவுகளும் நலங்குலைந்துபோய் விட்டன. பிற்பட்டு வந்த வெள்ளத்தினால் முன்னேயே உண்டாய்விட்ட கேட்டிற்கு பரிகாரமுண்டாகுமா? காவேரிநதி ஒரேமாதிரியான பிரவாகமுள்ளதல்லவென்றும், நிதானிக்க முடியாதபடி வெள்ளம் பெருகவும் குறுகவும் கூடிய சுபாவமுடையதென்றும் செட்டில்மெண்டாபீசர் அறியார்போலும். அக்டோபர் மாதம் முதல் டிஸம்பர் மாதம் வரையில் ஆற்றில் தண்ணீர் விழுந்துவிடுவதால் அப்பொழுது பயிர்களுக்கு ஜீவனம் மழைதான். தவிரவும் காவேரியில் வரும் ஜலத்தில் ஒரு திவலைகூட வீணாகாமல் பாய்ச்சலுக்கு ஏற்பாடுகள் செய்திருப்பதுந்தவிர, வயல்களிலிருந்து வடியும் ஜலத்தைக்கூட வாய்க்கால்களில் சேர்த்து இரண்டாந்தரம்பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். ஜலத்தில் இவ்வளவு சிக்கனம்காண்பிப்பது ஆச்சரியந்தான். அது பப்ளிக் ஒர்க்ஸ் இலாகாவின் சாமார்த்தியத்தைக் காண்பிக்கின்றதாயினும், பயிருக்குஜலம் கிடைத்தமட்டில் தான், என்ற நிலைமையிலிருக்கிறது. வரத்து ஏராளமாயிருந்தால்அளந்து செலவிடுவதற்கவசியமில்லை. எல்லோருக்கும் போதுமோ போதாதோ வென்ற பயமிருந்தால் தான் எண்ணிச் செலவிடும்படி அவசியம் நேரிடுகிறது. செட்டில்மெண்டு ஆபீசர்சொல்லும் செல்லாக்கட்சி இன்னொன்றைக் கவனிப்போம். ஏதோ ஒரு வருஷசம்பந்தமாக விளைவு சராசரிக்கு 100-க்கு 25-க்கும்குறைவுபட்டிருந்தபோதிலும் விலையேறினதால் நிலக்காரர்கள் கஷ்டப்படவில்லை யென்று சொல்லுகிறார். இருக்கலாம். ஆனால் மாற்றுதல் விதம் கணிக்கும் காலத்தில் அந்த

வருஷத்தின் விலையைத்தான் கணக்கிலெடுத்துக் கொண்டாய் விட்டதே. இங்கு பார்க்கவேண்டியது நிலக்காரர்கள் காலக்கேடுகளுக்காக நியாயமாய் எவ்வளவு தள்ளுபடி வேண்டலாம் என்பதுதான். இது விஷயத்தில் கவனிக்கவேண்டியது தொடர்ச்சியாய் அநேக வருஷங்களில் உண்மையாய் விளைந்த விளைவின் அளவு என்ன வென்பது மாத்திரந்தான். செட்டில்மெண்டு ஆபீசர் மிராசுதார்களிடம் சரியான கண்டுமுதல் கணக்குகளில்லையென்று சொல்லியிருப்பது சரியாகாது. செட்டில்மெண்டு எப்பொழுதுவரும் என்று நன்ருய்த்தெரியும். அப்படித்தெரிந்திருந்தும் வருஷாவருஷம் கண்டுமுதல் சோதனைகள் செய்து எல்லாருக்கும் திருப்தி கொடுக்கும்படியான கணக்குகள் ஏன் எடுத்திருக்கக்கூடாது? செட்டில்மெண்டு ஆபீசருடைய கோணற்கட்சிகளுக்கு மேலேயுள்ள ரெவின்யூ போர்டும் கவர்ன்மெண்டும் யாதொன்றும் எதிர்சொல்லவில்லை. சர்க்கார் வரும்படியில் பெரும்பாகம் செலுத்தி வைக்கும் நிலக்காரர்களும் இந்த இராஜதானியில் பெரும் பான்மையான விவசாயிகளும் கஷ்டப்படுகிருர்கள். இவர்களைக் காப்பாற்றுவதற்கே தாமிருப்பதாக உத்தியோக வர்க்கத்தினர் சொல்லிக்கொள்ளுகிருர்கள். விவசாயிகளின் க்ஷேமத்தின் பொருட்டு இவர்கள் செய்வதென்னவென்ருல், அவர்கள் யாதொரு குறையுமின்றித் திமிர்த்திருக்கிருர்கள் என்று எப்பொழுது பார்த்தாலும் சொல்லிக்கொண்டிருப்பதுதான். சுயாதிபத்தியம் வேண்டுவதற்கு இது போதுமான காரணம் அல்லவா? சுயாதிபத்தியம் பெறும் வரையில் நிலக்காரர்கள் துன்பம் குறைவது அசாத்தியம்.

-20-

மானம் பார்த்த புஞ்சைகள் விஷயத்தில் காலக்கேடுகளுக்காகச்செய்த தள்ளுபடி 100-க்கு 20. இது நிற்க, சாகுபடியின்மேல் வரி யென்ற வழக்கத்தை விட்டு, பட்டாப்படி ஒருவன்வசத்திலுள்ள நிலங்களுக்கெல்லாம் வரி யுண்டென்ற விதி யேற்படுத்தின நிமித்தம் என்ன தள்ளுபடி செய்தார்கள்? நில விஸ்தீர்ணத்தில் 5-ல் ஒருபாகம் ஒவ்வொருவருஷமும் தரிசாய்க்கிடக்கின்றதே. வேண்டாமென்றால் விட்டுவிடட்டுமே யென்றுசொல்வது சரியன்று. சில நிலங்களை ஒவ்வொரு வருஷமும் சாகுபடி செய்வது சாத்தியமன்று. சில வருஷம் தரிசாகப்போட்டு சில வருஷந்தான் சாகுபடி செய்யமுடியும். இந்த விஷயத்தையும் நினைப்பில் வைத்துக்கொண்டு வரிபோடுவதுதான் நியாயம். அடுத்தது, சாகுபடிச் செலவுக்காச் செய்யும் தள்ளுபடி. இதை அடுத்த அத்தியாயத்தில் விவரிப்போம்.

---

## அத்தியாயம் 6.

---

நிலத்தின் விளைச்சலுக்குப் பெறுமானம் போட்டபின் காலக்கேடுகளுக்காகச் செய்த தள்ளுபடியைப் பற்றி இதற்கு முன்னத்தியாயத்தில் சொன்னோம். சாகுபடிச் செலவுகளுக்காகச் செய்யும் தள்ளுபடி இரண்டாவது. அந்தச் செலவுகளை எவ்விதம் கணக்கிடுகிறார்கள் என்று தெளிவாய் அறிவதற்கு ஒரு உதாரணம் எடுத்து விவரிப்பது அவசியம். தஞ்சாவூர் செட்டில்மெண்டையே மறுபடி யெடுத்துக்கொள்

வோம். செட்டில்மெண்டு ஆபீசர் எல்லாத் தாலூக்காகளிலும் ஜாக்கிரதையாக விசாரணை செய்தாராம். புஞ்சைகளின் விஸ்தீர்ணம் மிகுந்துள்ள தஞ்சாவூர் தாலூக்காவில் மிராசுதார்கள் கொடுத்த கணக்குகளை யெடுத்துக்கொண்டு கீழே காட்டியிருக்கிறபடி சில தள்ளுபடி செய்தார். புஞ்சைகளில் முதல் தரமாகிய கரிசல் களி முதல் தினுசு, 3 (1), நிலத்தில் ஒருவகாரா சாகுபடிசெய்யச் செலவுகள் கீழ்வருமாறு:—

| விவரம் | மிராசுதார்கள் கொடுத்த கணக்கு. | | | செட்டில் மெண்டுஆபீசர் மாற்றின படி. | | |
|---|---|---|---|---|---|---|
| எருதுகளுக்காக செலவு ரூ. | 1 | 0 | 4 | 1 | 0 | 4 |
| கலப்பைக்காக செலவு ... | 0 | 7 | 8 | 0 | 7 | 8 |
| உழவு கூலி ... | 1 | 12 | 5 | 1 | 6 | 0 |
| எருவின் விலை ... | 1 | 9 | 8 | 1 | 4 | 0 |
| விதை ... | 0 | 7 | 0 | 0 | 7 | 0 |
| களை யெடுக்க ... | 1 | 5 | 7 | 1 | 0 | 0 |
| காவலும் வெட்டியும் ... | 0 | 2 | 1 | 0 | 2 | 1 |
| அறுவடை ... | 0 | 13 | 9 | 0 | 13 | 9 |
| ஆக ரூ. | 7 | 10 | 6 | 6 | 8 | 10 |

மேலே முதல் பத்தியில் கண்டிருப்பது தஞ்சாவூர் தாலூக்காவுக்கு மாத்திரம்; இரண்டாம் பத்தியில் கண்டிருப்பது ஜில்லா முழுவதுக்கும். இரண்டையும் ஒத்துப்பார்த்தால் உழவு, எரு, களையெடுப்பு இந்த அம்சங்களில் மிராசுதார்கள் கொடுத்த செலவு திட்டங்களை ஒப்புக்கொள்ளாமல் குறைத்திருக்கிறதாகத் தெரிகிறது. மற்ற தாலூக்காக்களில் தஞ்சாவூர் தாலூக்

காவைக்காட்டிலும் ஆள்கூலியும் எருவிலையும்குறைவா யிருக்கலாமென்று நினைக்கக்கூடும். அப்படியிருக்க முடியாது. ஜில்லாவிலெங்கும் நல்ல ரஸ்தாக்களும் எல் லாப்பக்கங்களிலும் நல்ல ரயில் பாதைகளும் இருப்ப தால் கூலியாட்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் குப்போவது சுலபமாக இருக்கிறது. அநேக இடங்க ளில் காலையில் கிராமத்தைவிட்டுப்போய் வேலைசெய்து விட்டுக்கூலியாட்கள் சாயங்காலம் வீட்டிற்குத்திரும்பி விடுகிருர்கள். எரு அகப்படும் விஷயத்திலும், புஞ்சைக்காடுகள் ஏராளமாயுள்ள தஞ்சாவூர் தாலூக் காவில் நஞ்சைகள் மிகுந்துள்ள தாலூக்காக்களைக் காட்டிலும் சுலபமாகப் பசுந்தழையெரு கிடைக்கக் கூடும். தள்ளுபடி செய்ததற்குக் காரணங்களொன்றும் சொல்லாமல், மேற்சொன்ன இனங்களில் "தாராளத் துக்கும்மேல் அதிகமாகச் செலவுகள் ஏற்றுக்கொண் டிருப்பதாக" செட்டில்மெண்டு ஆபீசர் சொல்லி யிருக்கிருர். ரெவின்யூ போர்டாரும் அதே வார்த் தையைத் திருப்பிச் சொன்னதுமல்லாமல், புஞ்சை களுக்குச் சாகுபடிச்செலவு திட்டம் அவசியத்துக்கு மேல் தாராளமாக இருக்கிறதாகவும், அடுத்த ஜில்லாக் களின் திட்டத்துக்குமேல் அதிகமாக இருப்பதாகவும் சொன்னுர்கள். அடுத்த ஜில்லாக்களின் விவரங்களா வன:— தென்னுற்காடு ரூ 3—15—0, திருச்சினுப் பள்ளியில் கம்புக்கு ரூ 4--2—2-ம், கேழ்வரகுக்கு ரூ 4—0—4ம். அந்தஜில்லாக்களின் செட்டில்மெண்டு புஸ்தகங்களிலிருந்து ரெவின்யூ போர்டார் இந்த இலக்கங்களை எடுத்திருக்கிருர்கள்போலும். ஆனல் அந்தப் புஸ்தகங்கள் எழுதின காலத்துக்குப்பின்

சாகுபடிச் செலவுக்காகச் செல்லும் பணம் அதிகமாயிருக்கிற விஷயத்தை மறந்துவிட்டார்கள். அந்த ஜில்லாக்களில் செட்டில்மெண்டான காலம் தெரியவில்லை. ஆயினும் அதற்கு நெடுங்காலத்திற்குப்பிறகுதான் ரெவின்யூ போர்டார் மேற்கண்டவாறு ரிபோர்ட்டு எழுதினார்கள். அண்டை ஜில்லாக்களுடன் ஒத்துப் பார்ப்பதென்றால், விதை எவ்வளவு போடுகிறார்கள், எரு எவ்வளவு போடுகிறார்கள், எவ்வளவு ஆட்கள் வேலை செய்கிறார்கள் என்பதை மாத்திரம் கவனித்து, காலரீதிப்படி அவைகளுக்காக என்ன பணம் செல்லும் என்று கணக்கிடவேண்டும். இந்த நேர் வழியை சர்க்கார் அனுசரிக்கவில்லை. இன்னும் மேற்கண்டபடி ஒத்துப்பார்ப்பதில், தஞ்சாவூர் ஜில்லாவில் புஞ்சை சாகுபடிச்செலவு 'சந்தேகமே யில்லாமல் ரொம்பவும் கடுமை' என்று செட்டில்மெண்டாபீசரே ஒப்புக்கொண்டிருப்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். "கவனத்திற்கும் செலவிட்டதற்கும் தகுந்தபடி நிலத்திலிருந்து விளைவுண்டு" என்று சொல்லித் தன் நெஞ்சுக்குறுகுறுப்புக்குத் தானே சமாதானம் செய்துகொண்டார். இது பொருந்தாத வார்த்தை. நில விளைவைத்தான் முன்னேயே கணக்கிட்டாய் விட்டதே. இங்கே கவனிக்க வேண்டியது சாகுபடிச் செலவுகள் என்ன வென்பது மாத்திரந்தானே. மிராசுதார்களின் செலவு கணக்குகள் அவர் முன்னிருந்தன. அவைகளை ஒப்புக்கொள்ளாவிடில் தகுந்த காரணங்களாவது சொல்லவேண்டும். அவ்வாறு செய்யவில்லை ஆனால் ரெவின்யூ போர்டாருக்கு இவர் நல்லவர். இவருக்கு விவசாயிகள் நடுவில் நெருங்

கிப்பழகின நிமித்தம் அநியாயப்படியாய் குறைக்கக் கூடாது என்றதையை தோன்றிற்றுபோலும். அப்படி போர்டாரும் தாக்ஷிண்யப் படுவதற்கு யாதொரு காரணமும் இல்லை. செட்டில்மெண்டு ஆபீசர் ஏற்றுக் கொண்ட சாகுபடிச்செலவு ரூ. 6-8-11-ஐ ரூ. 5-8-0 ஆக போர்டார் இறக்கிவிட்டார்கள். இப்படி கிட்டத் தட்ட 6-ல் ஒரு பங்கு இறக்கினதை 'அற்பமாறுதல்' என்றும் சொன்னார்கள்.

வேறுவகை மண்களுக்கு சாகுபடிச் செலவு சோதனைசெய்து கணக்கிட ஒரு ஏற்பாடும் செய்யாமல் சுமாராக மதிப்பின்பேரில் போர்டார் போட்ட பின்வரும் ஜாப்தா கவனிக்கத்தக்கது.

| தரம் | நிலத்தின் மண். | செட்டில்மெண்டு ஆபீசர் ஒப்புக் கொண்டது. | ரெவின்யூ போர்டார் மாற்றினது. |
|---|---|---|---|
| 1 | 3(1) ... | 6 8 10 | 5 8 0 |
| 2 | 3(2) ம், 4(1) ம் ... | 6 8 10 | 5 6 0 |
| 3 | 3(3) ம், 4(2) ம் ... | 6 4 10 | 5 2 0 |
| 4 | 3(4) ம், 4(3) ம், 5(1) ம்... | 6 0 10 | 4 14 0 |
| 5 | 2(5) ம், 4(4) ம், 5(2) ம்... | 5 4 10 | 4 8 0 |
| 6 | 4(5) ம், 5(3) ம் ... | 4 10 10 | 4 0 0 |
| 7 | 5(4) ... | 4 0 10 | 3 6 0 |
| 8 | 5(5) ... | 3 4. 10 | 2 14 6 |

செட்டில்மெண்டு ஆபீசர் கணக்கில் 3, 4 தரங்களில் அவைகளின் மேல்தரங்களைக்காட்டிலும் நாலு அணா இறக்கமும், அப்படியே 5-ம் தரத்தில் பன்னிரண்டணாவும், 6, 7 தரங்களில் பத்தணாவும், கடைசித்தரத்தில் பன்னிரண்டணாவும் படிப்படியாய் இறங்கியிருக்கிறது. போர்டார் செய்த இறக்கங்கள் அதைக்காட்

டிலும் சற்று சமமாய் இருக்கின்றன. முறையே 2, 4, 4, 6, 8, 10, 8 அணுக்கள். இப்பொழுது இரண்டு வித நிலங்களுக்கு என்ன செலவாகிறதென்று சற்று விசாரிப்போம். கரிசல் களியில் முதல் தினுசுக்கு அதாவது 3 (1)க்கு ரூ 6—8—10ம், அதே வகுப்பில் கடைசித் தினுசுக்கு அதாவது 3 (5)-க்கு ரூ 5—4—0-ம் செலவு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எந்த அம்சத்தில் இந்த ரூ 1—4—0 வித்தியாசம்? உழும்மாட்டினால் ஏற்படும் செலவில் வித்தியாசமிருக்க முடியாது. அதின் அளவு உழப்படும் மண்ணைப் பொறுத்ததல்ல; கிராமத்தில் இருக்கும் அல்லது அகப்படும் மாடுகளைப் பொறுத்தது நல்ல மண்ணைக்காட்டிலும் கெட்ட மண்ணுக்கு விதைச் செலவிலும் குறைவிருக்க முடியாது. பார்க்கப்போனால் வளம் தாழ்ந்தநிலத்தில் காற்றை நெருக்கிநட வேண்டி யிருக்குமாதலால் விதை அதிகப்படியாகவே வேண்டியிருக்கும். இந்தப்படிக்கே தஞ்சாவூர் ஜில்லாக் கலெக்டராய் இருந்து பின்பு போர்டு மெம்பர், நிர்வாக சபை மெம்பர் ஸ்தானங்களையும் வகித்து, ஆக்டிங் கவர்னராகவுமிருந்த ஸர் ஜேம்ஸ் தாம்ஸன் என்பவர் நன்றாய் ஒப்புக்கொண்டிருக்கிறார் நிலத்தின் சாரம் குன்றக் குன்ற விதை அதிகம் செல்லும். நல்ல நிலத்துக்கு 7 கலம் முதல் கெட்ட நிலத்துக்கு 15 கலம் வரையில் ஒரு வேலிக்குச் செல்லும், என்று சொல்லி யிருக்கிறார். இது நஞ்சை நிலங்களைக் குறித்துச் சொன்னது. புஞ்சைநிலங்கள் விஷயத்திலும் இது உண்மைதான். இது நிற்க, காவற்காரனுக்கும் வெட்டியானுக்கும் கொடுக்கும் சம்பளத்தில் உயர்ந்த நிலம் என்றும் தாழ்ந்த

நிலம் என்றும் வித்தியாசம் பார்ப்பதில்லை அம்மாதிரியே அறுவடை செய்வதிலும் செலவு வித்தியாசம் கிடையாது. முற்காலத்தில், கண்டுமுதலான தான்யத்தின்மேல் இவ்வளவில் ஒரு பாகம் என்று அறுப்புக்கூலி கொடுப்பதுண்டு. அது இப்பொழுது மாறிவிட்டது. எத்தனை விளைந்தாலும், தலைக்கு இவ்வளவுமரக்கால் என்று கூலிகொடுக்க வேண்டியிருக்கிறது. இனி மூன்றே அம்சங்கள் பாக்கி. உழுதல், எருப்போடுதல், களை யெடுத்தல். இவைகளில் தான், சொன்னால், ஏதாவது குறைந்த செலவுகள் போதுமென்று சொல்லக்கூடும். மட்ட நிலங்களில் கொஞ்சமாய் உழுது கொஞ்சமாய்எருப்போடலாம் என்ருவது, அல்லது கொஞ்ச ஆட்கள் களையெடுத்தால் போதுமென்ருவது யாருந்துணிந்து சொல்லமுடியாது. இது வெறும்அபிப்பிராயத்தைமாத்திரம் பொறுத்தல்லவே. உள்ளபடி எவ்வளவென்று சோதித்துப்பார்த்துக் கண்டுபிடிக்கக்கூடுமே. விவசாயம் செழிக்க வேண்டுமென்றநோக்கம் நிறைவேறும் பொருட்டு, எல்லாமிராசுதார்களும் தம் தம் அனுபோகத்தில் ஏற்பட்ட கணக்குகளை யாவரும் அறிய வெளியிடும்படி வேண்டுகிறோம்.

நஞ்சைநிலச் சாகுபடிச் செலவுகளையும் இதே முறையில் தான் கணக்கிடுகிறார்கள். வண்டல் கலப்பு நிலத்தில் முதல் தினுசை யெடுத்துக்கொண்டு ரூ 14 செலவாகுமென்று திட்டம் போட்டு, படிப்படியாய் கடைசியான திட்டம் ரூ 5—4—0 ஆக செட்டில்மெண்டு ஆபீசர் ஒரு ஜாப்தா போட்டார். இந்தக் கடைசியான ரூ 5-4-0 விதமும் அதற்கடுத்த மேல்பட்ட விதமும், படுபாழாய் இருப்பதாக போர்டா

ரவர்களுக்கே இரக்கம்தோன்றி, அவர்கள் கீழ்க் காட்டியிருக்கிறபடி மாற்றினார்கள்.

| தரம். | நிலத்தின் மண். | | செட்டில்மெண்டு ஆபீசர் ஒப்புக் கொண்டது. | | | ரெவின்யூ போர்டார் மாற்றினது. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2(1).. | ... | 14 | 0 | 0 | 13 | 0 | 0 |
| 2 | 1(1)ம், 2(2)ம், | ... | 13 | 8 | 0 | 12 | 4 | 0 |
| 3 | 1(2)ம், 2(3)ம், 4(1)ம் | ... | 12 | 4 | 0 | 11 | 0 | 0 |
| 4 | 1(3)ம், 2(4)ம், 4(2)ம் | ... | 11 | 0 | 0 | 9 | 12 | 0 |
| 5 | 1(4)ம், 2(5)ம், 4(3)ம் | ... | 9 | 12 | 0 | 8 | 8 | 0 |
| 6 | 1(5)ம், 4(4)ம் | ... | 8 | 8 | 0 | 7 | 8 | 0 |
| 7 | 4(5)ம், 5(3)ம் | ... | 7 | 4 | 0 | 7 | 0 | 0 |
| 8 | 5(4) | ... | 6 | 0 | 0 | 6 | 8 | 0 |
| 9 | 5(5) | ... | 5 | 4 | 0 | 6 | 0 | 0 |

ரெவின்யூ போர்டார் ரூ. 14 வீதம் சாகுபடிச் செலவை ஏகரா 1க்கு கிஸ்தியும் ரூ. 14 விதிக்கப்பட்ட திருவையாற்று நிலங்களுக்கு மாத்திரம் ஏற்றுக் கொண்டார்கள். அதேமாதிரி 2-வது வகுப்பு வண்டல் கலப்பு முதல்தினுசாக வேறு இடங்களில் ஒப்புக் கொண்ட நிலங்களுக்கு அதே வீதம் ஏற்றுக்கொள்ளாமல் ஒரு ரூபாய் தணித்து விட்டார்கள். இன்னும் கீழ்த்தரங்களுக்கு அப்படியே, ரூ. 1—4—0ம், ரூ. 2-ம் குறைத்து கடைசி இரண்டு தரங்களுக்கு 8 அணாவும் 12 அணாவும் ஏற்றினார்கள் தென்னாற்காடு ஜில்லாவில் கண்டுமுதலுக்கும் சாகுபடிச்செலவுக்கும் உள்ள தாமாஷாவைக்காட்டிலும் தாம் ஏற்றுக்கொண்டிருக்கும் வீதங்கள் அதிகப்படியாயிருக்கிறதென்றும், திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் இருப்பதைப்பார்க்கப்போனால் தாம் செய்திருக்கிறதே வெகுதாராளம் என்றும், ரெவின்யூ போர்டார் மேற்கண்ட மாதிரி

கைவந்தபடி மாற்றினதற்குக் காரணம் சொன்னார்கள். அந்த ஜில்லாக்களின் நடவடிக்கைக்கும் இந்த ஜில்லாவின் நடவடிக்கைக்கும் இடையில் நீண்டகாலமிருக்க அவ்விதம் ஒத்துப்பார்ப்பது சரியாயிராது என்று முன்னேயே சொல்லி யிருக்கிறோம். இந்த சங்கதிகளெல்லாம் மேலே கவர்ன்மெண்டாரிடம் சென்றபோது, போர்டார் போட்டிருக்கும் கணக்கு “சாதாரணமாய்ப் போதுமானதாகவே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது” என்று சொன்னார்கள். அப்படி யார் ஒப்புக்கொண்டார்கள்? மிராசுதார்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்பது நிச்சயம். அவர்கள் என்றும் முறையிட்டு, இன்றும் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். “ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது,” என்று அர்த்தம் கவனிக்காமல் சொன்னார்கள்போலும். என்னதான் நல்லெண்ணங்களிருந்தாலும் கவர்ன்மெண்டாரும் எல்லாரையும்போல் ஆசாபாசமுள்ள மனிதர்களாய் இருப்பதால், நிலவரியிலிருந்து சர்க்காருக்குக் கிடைக்கும் மொத்த வரும்படி வருஷாவருஷம் அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்ட அவர்கள், நிலக்காரர்கள் விஷயத்தில் நடுநிலைமை தப்பாதிருப்பார்கள் என்று எண்ணுவது மதியீனமாகும். நமது சட்டசபை சீர்திருத்தப்பட்டு, இன்னும் சற்று நியாயமாய் நிர்மிக்கப்பட்டுச் செவ்வையாக ஆனபின்தான், இந்த விஷயம் அது ஆலோசிப்பதற்குத் தகுந்ததாகும்.

# அத்தியாயம் 7.

தீர்வைகள் என்னவிதமாய்க் கணிக்கப்படுகின்றன வென்று இனிச்சொல்வோம். முன்மாதிரியே, தஞ்சாவூர் செட்டில்மெண்டு ரிகார்டுகளைப்பார்த்து நஞ்சை நிலங்கள் புஞ்சை நிலங்கள் இரண்டு வகைகளையும் கவனிப்போம் ஸ்பெஷலாய் ரூ 14 விதம் போடப்பட்ட நிலங்களைத் தனியாக விட்டுவிட்டால், வண்டல் கலப்பு முதல்தினுசு மற்றெல்லாவற்றிற்கும் உயர்ந்த நிலம். இந்த வகை நிலத்தின் சாதாரண விளைவு ஏகருக்கு 1150-படி வண்டி வாடகை, வர்த்தகர் லாபம் எல்லாம் கழித்த பின்பு, ஒரு கரிசைக்கு ரூ 121 விதம் 1150-படியின் விலை ரூ 43-7-9 ஆகிறது. இத்தொகையிலிருந்து கூலக்கேடுகளுக்காக 100-க்கு 15, அதாவது ரூ 6-8-5ம், சாகுபடிச் செலவுக்காக ரூ 13ம், ஆக ரூ 19-8-5 கழிக்கவேண்டியிருக்கிறது. பாக்கி ரூ 23—15—4; அதில் பாதி கவர்ன்மெண்டுக்குச் சேரவேண்டியது ரூ 11-15-8. இதில் சில்லரையைநீக்கி முழுத்தொகையாக ஏகருக்கு ரூ 12 ஆக கிஸ்திவிதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அடுத்தது, புஞ்சை நிலங்களைக்கவனிப்போம். கேழ்வரகு, கம்பு, வரகு, இம்மூன்று புஞ்சை தான்யங்களும் இந்த ஜில்லாவில் சமஅளவில் பயிரிடப்படுகின்றன. முதல்தரக் கரிசல்கனியில், ஒருஏகருக்கு 400படி கேழ்வரகு விளைகிறது. ஒருகரிசைக்கு ரூ. 130 ஆக, அதன் விலை ரூ. 16-4-0 ஆகிறது. அதேநிலத்தில் கம்பு 320படி விளைகிறது. கரிசைக்கு ரூ. 134 விதம் விலை ரூ 13-1-5 ஆகிறது. அப்படியே வரகு விளைவு 550 படி. கரிசை

க்கு ரூ 76 வீதம் விலை ரூ 13-1-0 ஆகிறது. இந்த மூன்று தொகைகளையும் கூட்டினதொகை ரூ 42-11-5; அதை மூன்றால் வகுத்து சராசரி யெடுத்தால் ஒரு ஏகரின் விளைச்சலின் பெறுமானம் ரூ 14—3—10 ஆகிறது. முன்மாதிரி, காலக்கேடுகளுக்காக 100-க்கு 20, அதாவது ரூ 2—13—7ம், சாகுபடிச் செலவுக்கு ரூ. 5—8—0ம் ஆக ரூ 8—5—8 கழிக்கவேண்டியது. பாக்கி ரூ 5—14—3. அதில் பாதி கவர்ன்மெண்டுக்குச் சேரவேண்டியது ரூ 2—15—2.

மேற்கண்ட வீதங்களை எல்லாநிலங்களுக்கும் சமமாக விதித்தால் சரியாகாது. எல்லா விடங்களிலும் பாய்ச்சல் சௌகரியங்கள் ஒரு மாதிரியாய் இருப்பதில்லை. எல்லாப் பாய்ச்சற் கால்களும் தட்டில்லாமல் ஜலமிருக்கக் கூடியவைகளல்ல; பின்னும், காவேரியிலிருந்தும் அதன் கிளைகளிலிருந்தும் நேரே பாயும்ஜலம் வளங்கொடுக்கும் வண்டலுள்ளது; வடிவாய்க்கால்களிலிருந்து மறுதரம் பாய்ச்சலுக்கு உபயோகப்படும் ஜலமோ வண்டல் இல்லாததால், தாழ்ந்த தன்மையுள்ளது. ஆகையால், பாய்ச்சற் கால்களை மூன்று வகுப்பாகப் பிரித்திருக்கிறார்கள். இதை விவரிக்க இரண்டொரு உதாரணங்கள் கூறுவோம். கும்பகோணம் தாலூக்காவில் வடகிழக்கு மூலையில் மண்ணியாற்றுப் பாய்ச்சலுக்குட்பட்ட 28 கிராமங்களைத் தவிர, பாக்கி தாலூகா முழுமையும் முதல் வகுப்பாகப் பிரித்தார்கள். மண்ணியாற்றுப் பாய்ச்சலைத் தாழ்ந்ததாக மதித்து, இந்த 28 கிராமங்களையும் இரண்டாம் வகுப்பில் வைத்தார்கள். மாயவரம் தாலூக்காவில் கொள்ளிடத்திலிருந்து பிரியும் இராஜன் வாய்க்காற் பாய்ச்சலுள்ள 8 கிராமங்களை முதல் வகுப்பிலும், கடற்கரைக்கடுத்

துள்ள 6 கிராமங்களை மூன்றும் வகுப்பிலும் வைத்தார்கள். மற்ற எல்லாக் கிராமங்களும் இரண்டாம வகுப்பில் சேர்ந்திருக்கின்றன. மேற்சொன்ன வகுப்புக்களில் நிலம் எந்த வகுப்பில் விழுகிறதோ அதற்குத் தகுந்தபடி வரிவிகிதங்கள் ஏற்படுத்தும் முறை பின் வருமாறு:—

| நிலத்தின் மண். | 1-வது வகுப்பு | 2-வது வகுப்பு | 3-வது வகுப்பு |
|---|---|---|---|
| 2-(1) | ...12 0 0 | 10 0 0 | 9 0 0 |
| 1-(1) ம், 2-(2) ம் | ...10 0 0 | 9 0 0 | 8 0 0 |
| 1-(2) ம், 2-(3) ம், 4-(1) ம் | ... 9 0 0 | 8 0 0 | 7 0 0 |
| 1-(3) ம், 2-(4) ம், 4-(2) ம் | ... 8 0 0 | 7 0 0 | 6 0 0 |
| 1-(4) ம், 2-(5) ம், 4-(3) ம், 5-(1) ம் | ... 7 0 0 | 6 0 0 | 5 0 0 |
| 1-(5) ம், 4-(4) ம், 5-(2) ம் | ... 6 0 0 | 5 0 0 | 4 8 0 |
| 4-(5) ம், 5-(3) | ... 5 0 0 | 4 8 0 | 4 0 0 |
| 5-(4) | ... 4 8 0 | 4 0 0 | 3 8 0 |
| 5-(5) | ... 4 0 0 | 3 8 0 | 3 0 0 |

இதிலிருந்து 11 தீர்வைவிகிதங்களிருக்கின்றனவென்று தெரிகிறது. ஸ்பெஷலாய்ப் போடப்பட்ட 14 ரூபாய் விதத்தையும் சேர்த்துக்கொண்டால் மொத்தம் 12 விதங்களாகின்றன. இவைகளுக்குத் தரங்கள் என்று பெயர். ஒருவகை மண்ணும் ஒரே தினுசுமாயுள்ள நிலங்களில் முதல்வகுப்புக்கு 2-வது வகுப்பை ஒரு தரம் குறைவாயும் 2-வதுவகுப்புக்கு 3-வது வகுப்பை ஒருதரம் குறைவாகவும் விதங்கள் ஏற்படுத்தியிருக்கிறதாகத் தெரிகிறது. இப்படிச் செய்திருப்பது மட்டநிலங்களுக்குப் பெருத்தசௌகரியந்தான். கவர்ன்மெண்டாரும் அப்படியேயெண்ணினார்கள். "காவேரிப் பாய்ச்சலுக்கு ஒருநாளும் குறைவில்லை யென்ற சொல் வழங்குகிறது ஆனாலும் இந்த மாகாணத்திலுள்ள

மற்றப்பெரியநதிகளைக்காட்டிலும் காவேரிநதியானது பிரவாகத்தில் மிகவும் ஏற்றந்தாழ்வுள்ளது. அதன் நீர்ப்பரிமாணமும் சிறிதாய் இருப்பதுடன், பூர்ணபிரவாகம் மற்ற நதிகளைக்காட்டிலும் குறைந்த காலந்தான் ஓடுகிறது. அதன் பாய்ச்சலில் அடங்கின விஸ்தீர்ணமும் மற்ற நதிகளோடொத்துப் பார்த்தால் மிகுந்ததாகவே இருக்கிறது. காவேரிநதிக்கு மார்ச்சு முதல் ஆகஸ்டு வரை மேற்குக்கடற்கரையில் பெய்யும் மழைதான் ஆதாரம். செப்டம்பர் மாதத்தில் நீர் தாழும்பொழுது பிற்பட்ட மாதங்களில் வடகிழக்கேயிருந்துவந்து சாதாரணமாய் வருஷா வருஷம் ஏராளமாய்ப் பெய்யும் மழையால் பயிர்கள் முற்றுகின்றன. தஞ்சாவூர் ஜில்லாவில் நல்லவிளைச்சலிருக்க வேண்டுமானல் இரண்டு காலங்களில் இரண்டு இடங்களில் நல்ல மழையிருந்தால்தான் உண்டு; இல்லாவிட்டால் ஜில்லாவின் விளைவு குறைந்துவிடும்.” பின்னும், கவர்ன்மெண்டார் சொன்னதாவது, “ஜில்லாமுழுமையையும் மூன்று பெருந்தாக்குகளாகப் பிரித்து ஒவ்வொரு தாக்கையும் ஒரு வகுப்பாகபிரித்ததுபோதாது; ஒரு தாக்கில் எல்லாவிடங்களிலும் பாய்ச்சலுக்கும் வடிவுக்கும் ஒருமாதிரியான வசதிகள் இராதாகையால், கிராமங்களைத் தனித்தனியாகவோ, அல்லது இரண்டு மூன்றைச் சேர்த்துச்சேர்த்தோ, ஒன்றுக்கொன்று உள்ள வேற்றுமைகளுக்குத் தக்கபடி வகுப்புகள் பிரிக்கவேண்டியது அவசியம்.” இந்த விஷயத்தில் எந்தமட்டில் ஒழுங்காகவும் விவரமாகவும் விசாரணைகள்செய்து ஏற்பாடுகள் நடந்ததோ, அந்தமட்டில்தான் நிலக்காரர்களுக்கு க்ஷேமமுண்டாகக்கூடும்.

புஞ்சை நிலங்களுக்கு ஜலம் கொடுக்க சர்க்கார் கட்டுப்படவில்லை. ஆகையால் வேறுமுறையை அனுசரித்து அவைகளுக்கு வரி விதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. போக்கு வரவுக்குரிய சாதனங்கள் எவ்வளவிருக்கின்றன, தான்யமுண்டாகும் இடம் விலையாகும் ஸ்தலத்திலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கிறது, என்ற இந்தமாதிரி சௌகரியங்களைப் பார்த்துக் கிராமங்கள் குப்பல் குப்பலாக வகுக்கப் படுகின்றன. இந்தப்படியாக விதங்கள் தீர்மானிக்கும் வகை கீழ் வரைந்திருப்பதிலிருந்து விளங்கும்.

| நிலத்தின் மண். | | முதல் வகுப்பு | | | இரண்டாவது வகுப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1-(1) | ... | 5 | 0 | 4 | 0 | 0 | 0 |
| 1-(2)ம், 2-(1)ம் | ... | 4 | 0 | 0 | 3 | 0 | 0 |
| 1-(3)ம், 2-(2)ம், 3-(1)ம் | ... | 3 | 0 | 0 | 2 | 8 | 0 |
| 1-(4)ம், 2-(3)ம், 3-(2)ம், 4-(1)ம் | ... | 2 | 8 | 0 | 2 | 0 | 0 |
| 1-(5)ம், 2-(4)ம், 3-(3)ம், 4-(2)ம் | ... | 2 | 0 | 0 | 1 | 8 | 0 |
| 2-(5)ம், 3-(4)ம், 4-(3)ம், 5-(1)ம் | ... | 1 | 8 | 0 | 1 | 4 | 0 |
| 3-(5)ம், 4-(4)ம், 5-(2)ம் | ... | 1 | 4 | 0 | 1 | 0 | 0 |
| 4-(5)ம், 5-(3)ம் | ... | 1 | 0 | 0 | 0 | 12 | 0 |
| 5-(4) | ... | 0 | 12 | 0 | 0 | 8 | 0 |
| 5-(5) | ... | 0 | 8 | 0 | 0 | 4 | 0 |

இதில் ஒன்று கவனிக்கத்தக்கது. போக்குவரவுசாதனங்கள் இல்லையென்று போட்டிருக்கும் குறைந்த விதங்கள், அடுத்த செட்டில்மெண்டுக்குள் அந்த சாதனங்கள் உண்டாய்விட்டால் மாறிவிடும். நஞ்சை நிலங்களிலுங்கூட பாய்ச்சல் வடிகால்களில் புதுசௌகரியங்கள் ஏற்பட்ட நிலங்களை உயர்ந்த வகுப்புக்கு மாற்ற அதிகாரமுண்டு. சாதாரணமாய் ஒரு செட்டில்மெண்டு ஆனபின் அடுத்த செட்டில்மெண்டுக்குள்

இப்படிச்செய்வதில்லை. ஆனால் சில சமயங்களில் அந்த மத்தியகாலத்திற்கூட அப்படிச் செய்வதுண்டு. உதாரணமாக, மதுரை ஜில்லாவில் பெரியாறு வேலைகள் முடிந்தவுடன் அவ்விதம் செய்தார்கள். இதற்கு எதிரிடையாக நேரும்பக்ஷத்தில், அதாவது ஏரிமுதலானது தூர்ந்துபோய் பாய்ச்சல் சௌகரியங்கள் குறைந்தால் நிலங்களை ஒரு வகுப்புத்தாழ்த்த வேண்டியும் வரும். அப்படி நேரிட்டால், அசௌகரியமடைந்த நிலக்காரர் புது செட்டில்மெண்டில் அவ்விதம் செய்யும்படி நெருக்கவேண்டும். வரி வசூல் குதித்துக் கிளம்பிக்கொண்டேயிருக்க வேண்டுமென்ற எண்ணமுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அதைச் சற்று மறந்து விடுவார்கள்.

கவர்ன்மெண்டு இன்னொரு சிறு நன்மையும் செய்கிறார்கள். கிஸ்தி திடீரென்று அதிகமாய் உயர்ந்து விட்டால் நிலக்காரன் செலுத்த சிரமப்படுவான். ஒருவன் கொடுக்கவேண்டிய கிஸ்தி 100 ரூபாயிலிருந்து ரூ. 150 ஆய்விட்டால், அந்த ஏறுபடித் தொகையை நான்கு கெடுக்களாகப்பிரித்து உயர்த்துகிறார்கள். அதாவது, முதல் வருஷத்தில் செலுத்தவேண்டிய கிஸ்தி ரூ. $112\frac{1}{2}$; இரண்டாவது வருஷத்தில் ரூ. 125; மூன்றாவது வருஷத்தில் ரூ. $137\frac{1}{2}$; நாலாவது வருஷத்தில் முழுத்தீர்வை ரூ. 150-ம் செலுத்தவேண்டும். இந்தப்படி முதல் வருஷத்தில் ரூ. $37\frac{1}{2}$-யும், இரண்டாவது வருஷத்தில் ரூ. 25-ம், மூன்றாவது வருஷத்தில் ரூ. $12\frac{1}{2}$-யும் சர்க்கார் இழந்து விடுவதற்கு ரெவின்யூ இலாகாவில் "வரியேற்ற வஜாக்கள்" என்று பெயர். புதிதாய் ஏற்பட்ட கிஸ்தி முன்னிருந்ததைக் காட்டி

னும் ஒன்றுக்கு ஒன்றரைக்குமேல் இரண்டு வரையில் ஏறிவிட்டால், இந்த ஏலுப்படித்தொகையை 8 கெடுக்களாகப்பிரித்து ஏற்றுகிறார்கள். கிஸ்தி ஒன்றுக்கிரண்டாகவோ, அல்லது அதற்கும் மேலாகவோ மாறிவிட்டால் 12 கெடுக்கள். இந்த சௌகரியம் குறித்திருக்கும் கெடுக்கள் வரையில் தான்; பிற்பட்டு முழுத்தீர்வையும் செலுத்தவேண்டும்.

மேலே சொன்ன தீர்வை விதங்கள் ஒருபோக சாகுபடிக்கு. நஞ்சை நிலங்களில் ஒரு தரம் விளைந்த பின் ஜலம் பாய்ச்சிக்கொண்டு இரண்டாம்பயிர் விளைந்தால், அதிகப்படித்தீர்வையுண்டு. சாதாரணமாய் இது ஒருபோக கிஸ்தியிற் பாதி. திருநெல்வேலி ஜில்லாவில் இது மூன்றில் இரண்டு பாகம். நிலத்தைச் சேர்ந்தாற்போல் ஐந்து வருஷங்களுக்கு இருபோக சாகுபடி செய்தால் செட்டில்மெண்டு இலாகாவில் அதை இருபோக நிலமாக ரிஜிஸ்டர் செய்து, ஒருபோகத் தீர்வைபோல் ஒன்றரை மடங்கு விதித்து விடுகிறார்கள். இந்த இரண்டாவது போகத் தீர்வைக்குச் "சேர்த்துவிட்ட தீர்வை" என்று பெயர். இரண்டாவது சாகுபடிக்கு ஜலம் கிடைப்பது சந்தேகமாயிருக்கும் பக்ஷத்தில், நிலக்காரர்கள் சர்க்காரோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, ஒருபோகத் தீர்வையில் மூன்றில் ஒன்றோ, நான்கில் ஒன்றோ, அல்லது ஐந்தில் ஒன்றோ சேர்த்துச் செலுத்தி இருபோக சாகுபடி செய்யலாம். அப்படி ராஜியின்பேரில் ஏற்படும் தீர்வைக்கு ஒப்பந்தத்தீர்வை யென்று பெயர். சேர்த்துவிட்ட தீர்வைக்கும் ஒப்பந்தத்தீர்வைக்கும் என்ன வித்தியாசம் என்றால், முன் சொன்னதில் இரண்டாம் பயிர்

சாகுபடியாகாவிட்டாலும், விளையாவிட்டாலும், வஜாக்கேட்கலாம். பின்சொன்னதில், ஒப்பந்தப்படி தடைப்பட்டிருப்பதால்; வஜாக்கேட்க முடியாது.

புஞ்சை நிலங்களில் எவ்வளவு தடவை வேண்டுமென்றாலும் சாகுபடி செய்யலாம். அதற்காக அதிகத்தீர்வை கிடையாது. சர்க்காருக்குச் சொந்தமான தண்ணீரை யெடுத்துக்கொண்டால் மாத்திரம் தண்ணீர்த் தீர்வை யுண்டு. பொதுவாய் நடைபெறும் முறைகள் இவைகளே. ஆயினும், மேலும் மேலும் வேண்டுமென்ற ஆசையால் வேறு விதங்களில் கிடைத்தமட்டில் பார்ப்பதும் உண்டு. தண்ணீர்த் தீர்வை என்ற தலைப்பின் கீழ் அவைகளைப்பற்றிச் சொல்லுவோம்.

செட்டில்மெண்டு முறைகள் நிலையும் ஒழுங்குமுள்ளவைகளல்லவென்று இம்மட்டில் வியாஸங்களை உற்று வாசித்துக்கொண்டு வந்தவர்களுக்குத் தானாகவே விளங்கியிருக்கும். உத்தியோகஸ்தர்கள் என்னதான் நல்லெண்ண முள்ளவர்களாயிருந்தாலும், வேறு நோக்கங்களால் தூண்டப்பட்டு, நிலக்காரர்கள்மேல் விழும்பாரத்தை எல்லாப்படியாலும் உயர்த்துவதற்குப் பலவிதமாய் அவகாசங்களிருக்கின்றனவென்று புலப்பட்டிருக்கும். நிலக்காரர்கள் பொறுக்கவேண்டியது எவ்வளவென்று தீர்மானிப்பதில் அவர்கள் வார்த்தையையும் கேட்டுத்தான் செய்யவேண்டுமென்ற முறை அனுஷ்டானத்துக்கு வரும் வரையில் அவர்கள் நிலைமை கீழ்ப்பட்டதாய்த் தானிருக்கும்.

# அத்தியாயம் 8.

நிலத்தீர்வை விதிப்பதில் அனுசரிக்கும் முறைகளைப்பற்றி இதுவரையில் விசாரித்தோம். மறுசெட்டில்மெண்டு செய்யும் விதத்தை இனி கவனிப்போம். இதுவரையில் சொல்லிய செட்டில்மெண்டு சாசுவதமாக அப்படியே இருக்கிறதென்று செய்யப்படுவதல்ல; அது முப்பது வருஷ கெடுவுக்குத்தான் செல்லுபடியுள்ளது. ஆகையால் அதற்கு "டெம்பரரி செட்டில்மெண்டு" என்று பெயர். சாசுவத செட்டில்மெண்டிலோவென்றால், நிலக்காரன் செலுத்தவேண்டிய வரியை எக்காலத்திலும் மாற்றக்கூடாது. இரண்டு செட்டில்மெண்டுகளுக்கும் இந்த ஒரு வித்தியாசம் மட்டுமல்ல. டெம்பரரி செட்டில்மெண்டில் ஒவ்வொரு வயலுக்கும், ரெவினியூரிஜிஸ்டர்களில் பதிவு செய்திருக்கும் ஒவ்வொரு சப்டிவிஷனுக்கும், தீர்வையின்னதென்று தனியே விதித்திருக்கும். தீர்வை வீதம் தெரிந்திருப்பதால், ஏதாவது ஒரு வயலுக்கோ, சப்டிவிஷனுக்கோ, தீர்வையின்னதென்று அதன் விஸ்தீர்ணத்தை அந்த விதத்தால்பெருக்கிக் கண்டுபிடித்து விடலாம். சாசுவத செட்டில்மெண்டில் ஒரு பட்டாவிலுள்ள எல்லா நிலத்துக்கும் சேர்த்துக் கிஸ்தி விதித்திருக்கும். அதில் சப்டிவிஷன்கள் ஏற்பட்டு, ஏதாவது ஒரு சப்டிவிஷனுக்குக் கிஸ்தி கண்டுபிடிக்கவேண்டுமென்றால், அந்த சப்டிவிஷனிலிருந்து கிடைக்கும் வரும்படி மொத்த நிலத்தின் வரும்படியில் எவ்வளவில் ஒரு பங்கென்று பார்த்து, மொத்தக்கிஸ்தியிலும் அப்படியே அவ்வளவில் ஒரு பங்கென்றுபாகித்து சப்டிவிஷனுக்குக் கிஸ்தி கண்டுபிடிக்கவேண்டும்.

மறுசெட்டில்மெண்டில் செய்யும் காரியங்கள் என்ன? முதல் செட்டில்மெண்டில் செய்த எல்லாக் காரியங்களையும் திருப்பிச்செய்கிறதா? இல்லை. முன்னே தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறபடியுள்ள வயல்களின் விளைச்சலுக்குப் புது மதிப்பிடுதல் ஒன்று தான் மறுதரம் செய்யப்படும் என்று கவர்ன்மெண் டார் சொல்லியிருக்கிறார்கள். பின்னால், லார்டு கர்ஸன் கவர்னர் ஜெனரலாயிருந்தபோது நிலத்தீர்வை முறை களைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் அனுசரிக்கும் கிரமத்தை வெளியிட்டதில், இன்னவிதத்தான் மறு செட்டில்மெண்டு நடக்குமென்று சொல்ல இயலாது என்றும், அவ்வப்பொழுது அந்தந்த இடங்களில் இருக்கும் வர்த்தமானங்களுக்குத் தகுந்தபடி செட் டில்மெண்டு முறைகளை மாற்றுவதற்குச் சர்க்கா ருக்குச் சுதந்திரமுண்டென்றும் சொல்லியிருக்கிறார். ஆயினும், காரியத்தில் என்ன நடக்கிறதென்றால், இது வரையில் நடந்து வந்திருக்கும் மறுசெட்டில்மெண்டு களில் விளைச்சல்களுக்குப் புதுமதிப்பிடும் காரியம் ஒன்றுதான் திருப்பிச் செய்கிறார்கள். அதற்காக "மாற்றுவிதம்," அதாவது இருபது வருஷ காலத்தில் விற்றசராசரி விலையிலிருந்து வண்டி வாடகைமுதலான தைக் கழித்தபின் ஏற்படுவது இன்னதென்று, முன் சொல்லியிருக்கிற முறைப்படி கண்டுபிடிக்கிறது வழக் கம். முன்னே நிலங்களின் மண்வகைகள் பிரித் ததையோ, விளைச்சல் திட்டம் போட்டதையோ, இப்பொழுது தொடுகிறதில்லை. காலக்கேடுகளுக்காக உள்ள தள்ளுபடியையும் மாற்றுவதில்லை. முப்பது வருஷங்களுக்குள் ஒரு ஜில்லாவின் இயற்கைக்கூறுகள்

மாறக் கூடியனவல்ல. இவை யெல்லாம் சரிதான். ஆனால் சாகுபடிச் செலவுகளுக்கு மாத்திரம் மறுதரம் கணக்குப் போடவேண்டியது அவசியமென்று நாம் சொல்லுகிறோம். உணவு தானியங்களும் ஒவ்வொருநாளும் உபயோகத்துக்குத் தேவையான இதர பொருள்களும் விலையேறியிருக்கும்போது சாகுபடிச்செலவும் அதிகந்தான் ஆகும். அதை மறுதரங் கணக்கிட்டாலொழிய நிலக்காரர்களுக்கு நீதியேற்படாது. அதைப் பற்றிச் சென்னைச் சட்டசபையில் வாக்குவாதம் நடந்தபோது, செட்டில்மெண்டு இலாகாத் தலைமை வகிக்கும் போர்டு மெம்பர் மறுகணக்குப் போட வேண்டியது அவசியந்தான் என்று ஒப்புக்கொண்டார். நிலக்காரர்கள் தங்கள் பிரதிநிதிகளையனுப்பி, அவர்கள் சொல்லும் வார்த்தையை அனுசரித்து சர்க்கார் மறுசெட்டில்மெண்டு பண்ணும் பட்சத்தில் எல்லாம் சரியாய் நடக்கும். சர்க்கார் நோக்குமுகமோ ஜனங்கள் நோக்குமுகத்தைக் காட்டிலும் வேறாயிருக்கிறது.

உதாரணம் ஒன்று சொல்லுவோம். வட ஆற்காட்டில் நடந்த மறுசெட்டில்மெண்டில் நிலச்சுவான்தாரான் ஒவ்வொருவனும் தன் நிலத்தைத் தானே சாகுபடி செய்வதுதான் வழக்கமும் நியாயமும் போல் கருதி எல்லாக் கணக்குகளும் போடப்பட்டன. அதாவது நிலக்காரனும் அவன் பெண்சாதி பிள்ளைகளும் நிலத்தில் உழைத்தால் அதற்கு யாதொருகூலியும் கிடையாதாம். வெளியிலிருந்து கூலிக்காரன் வேலைசெய்தால்தான் கணக்கில் சேருமாம். இது நியாயமா? இதைக் கவர்ன்மெண்டாருக்குச் சொன்னோம். முற்கால செட்

-30-

டில்மெண்டு அதிகாரிகள் அப்படிச் செய்யவில்லையென்று எடுத்துக் காண்பித்தோம். கவர்ன்மெண்டார் அந்தக்கட்சியை அப்பொழுது ஒப்புக்கொள்ளாமல் தள்ளி விட்டுப் பின்னொருசமயம் ஒப்புக்கொண்டார்கள்.

சமீபத்தில் மதுரைஜில்லா மறுசெட்டில்மெண்டில் இதைப்பற்றிக் கேள்வி வந்தபோது, கவர்ன்மெண்டார் புதிதாய் ஒரு குறுக்கு வழியிற் பாய்ந்தார்கள். அப்படிச் செய்ததற்குக் காரணம் என்னவென்று எளிதாய்க் கண்டுபிடிக்க முடியவில்லை. சட்ட சபையில் ஜனப்பிரதிநிதிகள் வாதாடின மூலமாக அந்த மாறுதல் ஏற்பட்டிருந்தாலுமிருக்கலாம். மதுரை செட்டில்மெண்டு ஆபீசர் அநுசரித்த வழியைக் குறிப்பிடுவோம். முதலில், புதுக் கணக்குகள் போட்டு ஒரு ஏகர் நிலத்தின் விளைச்சலுக்கு 50 ரூ. பெறுமானம் ஏற்படுத்தினர். பிறகு ஒரு ஏகருக்கு ரூ. 8—8—0 வீதம் இருந்த பழைய தீர்வை வீதத்தையெடுத்துக்கொண்டு, அதோடு 100-க்கு 25 சேர்த்துத் தீர்வையை உயர்த்த வேண்டுமென்று தானாக ஒரு நினைப்பு நினைத்துக்கொண்டார். அதாவது ரூ. 8—8—0யுடன் ரூ 2—2—0 சேர்த்துப்புதுத்தீர்வை ரூ. 10—10—0 ஆக ஏற்றிவிட்டால், நிலக்கான் ஸ்திதி எப்படி யிருக்கும் என்று யோசிக்க ஆரம்பித்தார். சர்க்கார்ப்பாதி ரூ10—10—0என்றால், நிலக்காரனுக்கு எச்செலவும்போக ஒரு ஏகருக்கு ரூ. 10—10—0 பாக்கியிருக்க நியாயமுண்டு. ஆகவே ஒரு ஏகர் வரும்படி ரூ.50-இல் சர்க்கார்கிஸ்தி ரூ. 10—10—0-ம், தனக்குக் கிடைக்கவேண்டியது ரூ. 10—10—0-ம், அதாவது

ரூ. 21—4—0போக, சாகுபடி வகையராச்செலவுக்காக ரூ 28—12—0 மிகுந்து விடுகிறதல்லவா? என்னதான் உயர்த்திவைத்தாலும் ரூ 28—12—0-க்குமேலே சாகுபடிச்செலவு ஆகக்கூடுமா? என்று செட்டில்மெண்டு ஆபீசர்சொன்னார். இந்தக் கட்சியைக் கவனிக்கவேண்டியது அவசியம் எல்லாச் செலவுகளும்போக, கடைசியாகநிலக்காரருக்கு லாபமாகப் பாக்கிநிற்பதில் சர்க்காருக்குப்பாதி யுண்டென்று சொல்வது வாஸ்தவம். சாகுபடிச் செலவை உள்ளபடி கணக்கிட்டுக் கழித்தபின் தானே, அந்தப் பாக்கிவரும்படி கண்டுபிடிக்க முடியும்? அப்படிச் செய்யாமல் நிலக்காரனுக்கு மிகுந்திருப்பது போதுமென்று சொல்வதற்கு எவருக்கும் வாயில்லை கவர்ன்மெண்டாரே வைத்து நடத்திவருகிற விவசாயப் பண்ணைகளில் சாகுபடிச்செலவு கண்டு பிடிப்பதற்கு வேண்டுமான சௌகரியங்களிருக்கின்றனவே. அந்தப் பண்ணைகளில் வெகு வருஷங்களாய் வைக்கப்பட்டிருக்கிற கணக்குகளை ஏன் கவர்ன்மெண்டார் ஜனங்கள் பார்க்கும்படி வெளிப்படுத்தக்கூடாது?

இது நிற்க, 100-க்கு 25 கூட்ட வேண்டுமென்றது எந்தக் கணக்கைக்கொண்டு? அதற்கு ஏதாவது ஆதாரமுண்டா? அல்லது மனதில் தோன்றினதுதானா? ரயத்துவாரி நிலங்களில் மொத்தவரும்படியில் ஐந்தில் ஒன்றுக்குமேல் கிஸ்தி போடக்கூடாதென்று காலஞ்சென்ற இராமசந்திர தத்தரும் வேறு சிலரும் கேட்டுக்கொண்டிருந்ததை அனுசரித்துக் கவர்ன்மெண்டார் அவ்வாறு சொல்லுகிறார்கள் என்று ஒருவாறு ஊகிக்கலாம். ஏனெனில், புதுத்தீர்வை வித

மான ரூ. 10—10—0 ஆனது, ஒரு ஏகரின் மொத்த வருமானம் ரூ 50ல் கிட்டத்தட்ட ஐந்தில் ஒன்றாகிறது. நாம் யூகித்தது சரியானல், லார்டு கர்ஸன் எது செய்யக்கூடாதென்று கடுமையாய்க் கண்டித்திருந்தாரோ அதை நமது மாகாண கவர்ன்மெண்டார் கைக்கொண்டிருக்கிறார்கள். அவர் செலவுபோக மிகுந்தவரும்படியைப் பாகிப்பதுதான் நியாயமென்றும், மொத்த வரும்படியின்மேல் கணக்கிடுவது மிராசுதார்களுக்கு நஷ்டமாய்முடியுமென்றும்சொல்லியிருக்கிறார். மதுரைஜில்லா செட்டில்மெண்டைப்பற்றி விவகாரங்கள் நேர்ந்தபோது, கனம் கே. இராம ஐயங்கார் வெளிப்படுத்தின சாகுபடிச்செலவுகளை ஆதாரமாய் வைத்துக்கொண்டு கணக்குப்போட்டால், லார்டு கர்ஸன் துரை சொன்னது வாஸ்தவமேயென்று அற்புதமாய்வெளியாகிறது. கனம் இராம ஐயங்கார் கணக்குகளைச் சர்க்கார் எவ்விதத்திலும் ஆட்சேபிக்கவில்லை. அவர் கணக்குப்படி, புது செட்டில்மெண்டில் ரூ 8—8—0 விதம் விதித்திருக்கிற நிலத்தில், ஒரு ஏக்கர் சாகுபடி செய்யச் செலவு சுமார் ரூ 34—0—0 ஆகிறது. 50ரூ.-யிலிருந்து 34 ரூ. போனல் ரூ. 16—0—0 பாக்கியாகிறது; அதில் பாதி ரூ. 8—0—0; அதாவது விதித்திருக்கிற தீர்வையைக்காட்டிலுங் குறைவு. இதனல் தெரிகிறதென்ன? தானியங்கள் விலையேறியிருந்தாலும், அந்த அளவுக்குமேல் சாகுபடிச் செலவுகளும் அதிகமாய் ஏறியிருக்கின்றன. நடுமனதுடன் பார்க்கும் எவரும் இதுசரியென்று ஒப்புவார்கள். ஆட்களுக்குத்தேவை மிக் மிக, அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய கூலியும் அதிகமாய்க் கொண்டே வருகிறது. சுமார் 10 வரு

ஷங்களுக்கு முன் கிராமங்களில் ஒரு நாள் கூலி அணு இரண்டரைக்குத் தேவையான ஆட்கள் கிடைக்கும். இப்பொழுது 5 அணு அல்லது 6 அணு வீதமாக உயர்ந்திருக்கிறது. கும்பகோணம் பட்டணத்தில் சாதாரணமாய் ஒரு நாள் சம்பளம் 8 அணு கொடுக்க வேண்டியிருக்கிறது முனிசிபல் கவுன்சில் திட்டங்களில் 6 அணு வீதம்தான் போட்டிருந்தாலும், அடிக்கடி முனிசிபல் வேலைகளில் 8 அணு வீதம் கொடுக்கும்படி நேரிடுகிறது. வருஷாவருஷம் எவ்வித தடங்கலுமின்றி ஆட்கள் அயல் நாடுகளுக்குப் போய்க்கொண்டேயிருப்பதால், சம்பளமும் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. பிழைப்பைத்தேடி வெளியே செல்லும் ஆட்களின்மேல் ஒருவருங் குற்றங் கூறவில்லை. இருக்கிற வித்தியமானங்கள் எல்லாவற்றையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பது தான் நிலக்காரர்களின் கட்சி. சாகுபடி பாவப்பரவ எருவுக்குக் கிராக்கி உண்டாகிறது. அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. மாடுகளின் விலையும் ஏறியிருக்கிறது. காடுகளெல்லாம் சர்க்கார் வசப்பட்டு நிர்ப்பந்தங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் மேய்ச்சல் சௌகரியங்கள் குறைந்துவிடுகின்றன. மேலும் இந்நாட்டில் அடிக்கடி உலாவுகின்ற கொள்ளைநோய்களால் மாடுகள் நாசமடைகின்றன. தானாகவே ஏற்படும் இம்மாதிரிச் சம்பவங்களையெல்லாம் பரிசோதித்துச் சாகுபடிச் செலவுகளையும் தகுந்தபடி மாற்றவேண்டும்.

இதுவரையில் சொன்னதிலிருந்து மதுரைஜில்லா புதுசெட்டில்மெண்டானது மிராசுதார்களுக்கு கஷ்ட

முண்டாகும்படி நடந்திருக்கிறதாகத் தெரிகிறது. இதே விஷயத்தைத் அடுத்த அத்தியாத்திலும் தொடருவோம்.

---

## அத்தியாயம் 9.

கடைசி அத்தியாயத்தில் சாகுபடிச் செலவுகள் எவ்வளவாகின்றன வென்று நன்ருய்க் கணக்கிட்டுக் கொள்ளாமல் தீர்வை வீதத்தை மாற்றுவது நிலக்கா ரர்களுக்கு அநீதியாய் முடிகிறதென்று சொன்னோம். அவர்கள் இரண்டு பக்கங்களிலிருந்து இடிபடும் நிலைமையில் இருக்கிறார்கள். ஒரு பக்கம் தங்களால் தாங்கமுடியாத அளவு சர்க்காருக்குக் கிஸ்தி செலுத்த வேண்டியிருக்கிறது. இன்னொரு பக்கம் சாகுபடிக்கு ஒத்தாசை செய்யும் ஆட்களுக்கு மேலும்மேலும் அதிகமாகிக்கொண்டுவரும் கூலியும் கொடுக்கவேண்டியிருக்கிறது. இருபக்கமும் இடித்துச் சரிந்தது போக, அவர்களுக்கு மிகும் நிலவருமானம் குறைந்து கொண்டே வருகிறது. நிலம் வைத்துக்கொண்டிருப்பவனுக்கு வேறுவித பலம் ஏதாவது இல்லாத பட்சத்தில், வயிற்றை ஒடுக்கியோ, சௌகரியமான வாழ்வுக்கு வேண்டிய அவசிய வஸ்துக்களில்லாமலோ, காலந்தள்ளுகிறான். வேறு முதல் உள்ளவனாயிருந்தாற் கூட, புதிது புதிதாய்க் கவர்ன்மெண்டார் செட்டில் மெண்டு முறைகளை மாற்றிக்கொண்டு வருவதனால் அவன் நிலத்திற்போட்ட பணத்துக்குத்தகுந்த வரும்படி யடையாமற்போகிறான். முதலில் நிலம் வாங்கும் போது, அப்பொழுது வழங்கிவரும் செட்டில்மெண்டு

விதிகள் அப்படியே யிருக்குமென்று நம்பி, என்ன விதம் வரும்படி கிடைக்குமென்று கணக்குப்பார்த்துக் கொண்டு, நிலத்திற்பணத்தைப் போடுகிறான். தகுந்த படி முன்னேயே தெரிவிக்காமல் புதுக் கோட்பாடுகள் உண்டுபண்ணி கவர்ன்மெண்டார் மறுசெட்டில்மெண்டு கள் செய்வதால், அவன் பாடு திண்டாட்டமாகி விடுகிறது. கவர்ன்மெண்டார் சாதாரண மனிதர்களைப் போல் தோன்றினபடி யெல்லாம் மாறுவது சரியல்ல. ஸ்திரமான ஒழுங்குகளின்படி நடக்கவேண்டும். இதை உத்தேசித்துத்தான் செட்டில்மெண்டு முறைகளையெல் லாம் ஒழுங்குபடுத்திச் சட்டமாக ஏற்படுத்திவிட வேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டு வருகி றோம். கவர்ன்மெண்டார் அதற்குச் சம்மதப்படாமல் தாம்பிடித்த பிடியிலேயே நிற்கிறார்கள்.

இதற்கு முன்னத்தியாயத்தில் சாகுபடிச் செல வை நிர்த்தாரணம் செய்யாமல் தீர்வை விதித்தால், அது நிலக்காரன் தாங்கமுடியாத அளவு ஏறிவிடக் கூடுமென்று சொன்னோம். சட்டசபையில் இது விஷ யமாகப் பின்வருமாறு வாக்குவாதம் நடந்தது:—புது செட்டில்மெண்டானவுடன், வரிமாத்திரம் உயர்கிற தே யல்லாமல், முன்னைக் காட்டிலும் மேற்பட்ட வரத்து மாத்திரம் கிடையாது. இந்த வார்த்தை சிறு மிராசுதார்களை, அதாவது ரூ 50, 60, அல்லது அதற்கும் குறைவாகவோ கிஸ்தி செலுத்துகிறவர்க ளைக் குறித்துச் சொல்லுகிறோம். சாதாரணமாய்ச் செட்டில்மெண்டு விதிப்படி, சர்க்கார்ப் பாதி ரூ 50 அல்லது அதற்குக் குறைவாகவோ இருந்தால், கிஸ்தி செலுத்துபவன் வரும்படியும் ரூ. 50 அல்லது அதற்கு

-33-

குறைவாகவேதானிருக்கும் ரூ. 50 கிஸ்திசெலுத்தும் ஒருவன் நிலைமையைப் பரிசோதித்துப் பார்ப்போம். "செட்டில்மெண்டு விதி யெப்படி யேற்பட்டிருந்தாலும், உள்ளபடி பார்க்கப்போனால், எவ்வளவு கிஸ்தி செலுத்துகிறனே அதைப்போல் ஐந்து மடங்குக்குக் குறைவில்லாமல் நிலத்திலிருந்து வரும்படி வருகிறது," என்று கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள். அப்படியே வைத்துக்கொள்வோம். அப்பொழுது நிலத்தின் மொத்த வரும்படி ரூ. 250 ஆகிறது. கிஸ்தியைக் கழித்துவிட்டால் தனக்கு மிகுவது ரூ. 200 ஆகிறது. அதாவது தானும், தன் பெண்ஜாதியும், ஒரு குமாரக இரண்டு குழந்தைகளும் பிழைப்பதற்கு மாதம் 1-க்கு ரூ. 16-10-8 வீதம் கிடைக்கிறது. இது நிற்க, ரூ. 250 வரும்படி எப்படி யேற்பட்டதென்று பார்ப்போமாகில், விலைகள் உயர்ந்திருக்கிற நிமித்தம் மாற்றுவீதமும் ஏற்றப்பட்டு, அவ்வளவு வரும்படி யென்று ஏற்பட்டது. சென்ற தஞ்சாவூர் செட்டில்மெண்டில் கலம் 1-க்கு ரூ. 1-0-8 என்று மாற்றுவீதம் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது விலை அதைப்போல் இரண்டு மடங்காகி யிருக்கிறது. நில விளைவுக்கு இப்பொழுது ஏறியிருக்கிற விலைப்படி பணமதிப்பிட்டால், கிஸ்தியைப்போல் இரண்டு மடங்குக்கு மேல் மூன்று அல்லது நான்குமடங்கு வரையில் இருக்கும். தவிர, செட்டில்மெண்டில் ஏற்பட்ட சராசரிவிளைவுக்குமேல் திட்டப்படி விளைந்த வருஷத்தில், மேற்சொன்னபடி ஏறின விலைப்படிக்கே வரும்படியைப் பார்த்தால், கிஸ்திக்கும் வரும்படிக்கும் தாரதம்மியம் இன்னும் அதிகமாகும். இந்தப்படியே எல்லாவர்க

விலும் எல்லா வருஷங்களிலுமிருக்குமா? ஆகையால் கிஸ்தியைப்போல் வரும்படி ஐந்து மடங்கு என்று கவர்ன்மெண்டார் சொல்லுவது பொதுவாய் உண்மையாயிருக்கமுடியாது. கட்சிக்காக அதுவும் சரியென்றே வைத்துக்கொள்வோம். ஒருவன் ரூ. 50 கிஸ்தி செலுத்தினால், தான் அடைவது மாதம் 1-க்கு சுமார் ரூ. 16 தான் ஆகிறது. அது போதாது என்று சொல்லவும்வேண்டுமா? இப்படித் தனக்கு விளையும் தானியம் அனைத்தும் தனக்கே சாப்பிடப் போதாத நிலைமையிலிருக்கும் ஒருவனுக்கு, விலை யேறினதினால் என்ன பயன்? அவன் என்னத்தை விற்பது? அவன் சம்பந்தப்பட்ட மட்டில் கலம் ரூ. 1 வீதம் விற்றாலென்ன? ரூ 2 வீதம் விற்றாலென்ன? ஆகையால் முன்னைக்கு இப்பொழுது அவனுக்கு வரும்படி மாத்திரம் அதிகமில்லை. சர்க்காருக்குக் கொடுக்கவேண்டியது மாத்திரம் அதிகமாயிருக்கிறது.

மேற்சொன்ன கட்சிக்குக் கவர்ன்மெண்டார் ஒருவாறு உத்தரம் சொன்னார்கள். "விளைந்ததில் ஏதோ ஒரு பாகத்தை விற்றுத்தானே புது செட்டில்மெண்டுக்கு முன் நிலக்காரன் வரி செலுத்தி வந்தான். அதே அளவு தானியத்தை இப்பொழுது விற்றால் முன்போல் இரண்டு மடங்கு விலை கிடைக்குமல்லவா? அதிலிருந்து உயர்த்தப்பட்ட கிஸ்தியும் கொடுத்து அவனுக்கும் கொஞ்சம் மிகக்கூடும், என்று சொன்னார்கள். இதைக்காட்டிலும் குறுகலான யோசனை காண்பதரிது. தானியத்தின் விலை ஏறியிருப்பதைப் பார்த்தால் மாத்திரம் போதுமா? முன் அளவே தானியம் விளைவதற்குச்செலவு என்ன செய்யவேண்டியிருக்கிற

-34-

தென்று பார்க்கவேண்டாமா? மாட்டுவிலையும், எரு விலையும், ஆட்கள் கூலியும், ஏறி யிருக்கவில்லையா? இவனிடம் மிகுதியிருப்பதற்கு இடம் எங்கே? கையிலிருப்பதெல்லாம் அதிகப்பட்டிருக்கிற செலவு களுக்கே காணுமல் கடனும் கொஞ்சம் வாங்கவேண்டி யிருக்குமல்லவா?

அநேக இடங்களில் பொதுவாய் நெல்லையோ, புஞ்சைத் தானியத்தையோ விற்றுக் கிஸ்தி செலுத் துவதில்லை. அது சாப்பாட்டுக்கு வேண்டியிருக்கிறது. நிலம் வைத்துக்கொண்டிருப்பவனுக்கு மகனே உடன் பிறந்தவனே, சம்பாதிக்கிறவன் ஒருவன் இருந்தால், கிஸ்தி செலுத்தும் பாரம் அவன் தலையில் விழுகிறது. சாப்பாட்டுக்குங் கண்டு கிஸ்தியும் செலுத்துவதற்குப் போதுமான அளவு அவன் சம்பாதிக்காவிட்டால், அவன்பாடு கஷ்டந்தான். 'நிலம் வைத்துக்கொண்டி ருக்கிறவன் இதர கூலிவேலையும் செய்து பிழைப்புப் பண்ணிக்கொள்ளுகிறான்' என்று கவர்ன்மெண்டார் தயை தோன்றிய காலத்தில் சொல்லுகிறார்கள். கூலி வேலே யேது? அறுவடையானபின் மறுசாகுபடி ஆரம் பிக்குமுன் இடையிலே சொற்ப காலத்தவிர. மற்ற வேளைகளில் அண்டைப் பட்டணத்தில் வேலைக்குப் போக முடியாது. சாகுபடி காலத்திலோ தன் கவன மெல்லாம் தன்னிலத்திலேயே செலுத்தவேண்டியிருக் கும். சாதாரணமாய் அவனவன் வயலை அவனவன் உழும்பொழுது, அயலில் வேலை செய்து கூலி சம்பா திப்பது பெரும்பாலும் கிடையாது. நடவுக்காலத் திலும் அறுவடைக்காலத்திலும் கூலிக்குச் சிறிது தேவையுண்டு. கிஸ்தி செலுத்துவதற்கு வேறுவகை

யேதேனும் தேடினால்தான் உண்டு. கைப்பாடு பட்டுக் கறிகாய் ஏதாவது பயிரிட்டு அண்டைப்பட்டணத்தில் விற்றுச் சிறிது சம்பாதிக்கமுடியும். சக்தியிருந்தால் நிலத்தில் கிணறு ஒன்றும் வெட்டிக்கொண்டு கோடைக்காலத்தில் மிளகாயோ புகையிலையோ ஏதாவது பயிர் செய்யலாம். இவைகளுக்கெல்லாம் இருக்கும் சௌகரியங்கள் மிகக் குறைவே. சாதாரணமாய்க் கிஸ்தி செலுத்துவதற்குக் கடன் வாங்கித்தான் ஆகிறது. கடனுக்கு நாளுக்குநாள் வட்டி யேறி விவசாயி தாங்கமாட்டாமல் சுமந்து போகிறது. கடைசியாய் நிலத்தை விற்றுத்தான் கடன் தீர்க்கவேண்டியாகிறது. சாதாரணமாய்ச் சிறு விவசாயி ஒவ்வொருவனும் கடனில்லாமலிருப்பது அரிது. எங்கேயாவது சேவகம் பண்ணியோ அல்லது ஏதாவது ஒரு தொழிற் பண்ணியோ சம்பாதித்த பணத்தை நிலத்தில் போட்டு ஒருவன் மிராசுதார் ஆகிறான். சற்று முன்யோசனை யுள்ளவனாயிருந்தால் கையிலிருக்கும் எல்லாவற்றையும் நிலத்திற் போட்டுவிடாமல், வட்டியைக்கொண்டு கிஸ்தி செலுத்துவதற்கு வேண்டிய அவ்வளவாவது வட்டிக் கிட்டிருப்பான். அப்படி வட்டி கிடைக்கும்படி பணத்தைக்கொடுத்து வைக்கத் தகுந்த இடம் கிடைப்பதும் எளிதன்று. ஆகையால் பொதுவாய்க் கையிலிருக்கும் யாவற்றையும் நிலம் வாங்குவதிலேயே செலவழித்து விடுகிறான். அவன் கஷ்டங்களெல்லாம் நிலம் வாங்கியபின் தான் ஆரம்பிக்கின்றன. தானும் சாப்பிட்டுக்கொண்டு வருஷா வருஷம் கிஸ்தியும் செலுத்த அவனால் முடிகிறதில்லை. உடனே கடன் வாங்குகிறான். கடன் சிறுக ஆரம்

பித்து, காளளவில் வளர்ந்து, கடைசியில் நிலக்காரனை நசுக்கி விடுகிறது. எவ்வளவு மனதாகாமலிருந்தாலும், கடைசியாய் நிலத்தை விற்றுத்தான் கடனைத் தீர்க்க வேண்டியிருக்கிறது. நிலம் வாங்கிக் கடன்பட்டு, கடனினின்றும் மீளமுடியாமல் அழுந்தி, கடைசியாய் நிலத்தை விற்றுவிடுவதென்ற இம்மாதிரிக் காரியங்கள் கோர்வையாய்ச் சுழன்று வருவதற்கு நீண்ட காலம் பிடிக்கின்றமையால், அது சாதாரணமாய்ப் பார்ப்பவர்களுக்குப் புலப்படுவதில்லை. ஒருவன்முறை முடிந்தவுடன் மற்றொருவன் அகப்பட்டுக்கொள்ளுகிறான். இப்படிச் சக்கிரம் சுழன்றுகொண்டே யிருக்கிறது. நம் நாட்டில் அபிமானமுள்ளவர்கள் ஒரு காரியம் செய்யலாம். மேலே சொல்லியிருக்கிறபடி, எங்கெங்கே யார் யார் நிலம் வாங்கிக் கெட்டுப்போயிருக்கிறார்களென்று நன்றாக விசாரித்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பினால், தகுந்த ஆதாரங்களுடன் கவர்ன்மெண்டாரிடம் சென்று, இது விஷயத்தைப் பற்றிப் பரியாலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ள இடமுண்டாகும்.

இதுவரையில் செட்டில்மெண்டு செய்யும் முறைகள் இன்னின்னவென்று வகுத்துப் பரிசோதித்தோம். இனிப் பொதுவாய் மறு செட்டில்மெண்டுகளில் கிஸ்தி யேற்றினால் தாங்கக் கூடும்படி ஜனங்களுக்குப் பொருள்வலிமை யிருக்கிறதா வென்பதைப் பற்றி விசாரிப்போம்.

---

# அத்தியாயம் 10.

இந்த அத்தியாயத்தில் செட்டில்மெண்டுகளில் கிஸ்தி யேற்றுவதை ஜனங்கள் தாங்கக்கூடிய நிலைமையிலிருக்கிறார்களாவென்று விசாரிப்போம். நமது இராஜதானியில் 1903-04 வருஷத்திய கணக்குப்படி, 3,300,000 ரயத்துவாரி மிராசுதார்கள் இருந்தார்கள். அதில் ரூ. 50-ம் அதற்குமேலும் கிஸ்தி செலுத்துபவர்கள் 1,61,000 பேர்கள்தான். அதாவது, மிராசுதார்களின் மொத்த சங்கியையில் 100-இல் கிட்டத்தட்ட $4\frac{3}{4}$ வீதமாகிறது. அந்த வகுப்பு மிகவும் சிறிதாயிருப்பதால், இந்த விசாரணையிலிருந்து அந்த வகுப்பார்களை விலக்கிவிடுவோம். மொத்த வரும்படியிற் கிஸ்தி சுமார் ஐந்தில் ஒன்று தான் ஆகும் என்று கவர்ன்மெண்டார் சொல்லுகிறபடியே வைத்துக்கொண்டாலும், ரூ. 50 கிஸ்தி செலுத்தும் ஒருவனுக்கு தனக்கென்று மிகுவது ரூ. 200 தான் ஆகும். அதைப் பன்னிரண்டு மாதங்களுக்கு வகுத்தால், மாதம் 1-க்கு வரும்படி ரூ. 16-10-8 ஆகிறது. ஜெயிலிலிருக்கும் கைதிக்குச் சாப்பாடு வகையராவுக்காக சர்க்கார் விதித்திருக்கும் விதப்படிகூட மேற்கண்ட தொகையானது, நிலக்காரன், அவன் பெண்சாதி, இரண்டு குழந்தைகள், ஆக நான்கு பேர்களுக்கும் போதுமோ போதாதோ வென்றிருக்கும். நிலத்தைத் தவிர வேறு விதமாக வரும்படி யிருக்கக்கூடுமென்று எண்ணுவது சுத்தப் பிசகென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ரூ. 50-க்கும் கீழ்ப்பட்டு கிஸ்தி செலுத்து

-36-

வோர்களின் சராசரி வருமானம் இன்னும் குறைவான தாய்த் தானிருக்கும்.

மேற்கண்ட வகுப்பைச்சேர்ந்த ஜனங்கள் பொருள் வலியற்று, மிகவும் நிராபையான நிலைமையி லிருக்கிறார்களென்று நாம் சொல்லுகிறோம். இதன் உண்மை கிராமங்களிற் போய்ப்பார்த்தால் தெரியும். அங்கே ஜனங்கள் மண்சுவர்களின் மேல் கூறையிட்டுக் குடிசைகளில் வசிக்கிறார்கள். உள்ளே பெஞ்சு, மேஜை முதலியன யாதுமிராது. மிகவும் அற்பமான உடை தரித்திருப்பார்கள். ஆகாரமும் வேண்டுமளவு கிடைப்பதில்லை. அக்குடிசைகளில் வளரும் குழந்தை களை உற்றுநோக்கினால், உண்ணும் உணவு போதாத காரணத்தால் இளைத்திருப்பதாக விளங்கும். இப் படித் திடங்குன்றி யிருப்பதால் அவர்களுக்கு வியாதி வருவது வெகு சுலபம். கவர்ன்மெண்டாரோ இதை ஒப்புக்கொள்வதில்லை. ஜனங்களுக்குப் பலவித மாயும் வருவாய் மிகுந்து சௌக்கியம் பெருகிக் கொண்டிருக்கிறதென்று நினைக்கிறார்கள். செட்டில் மெண்டு ஆபீசர் ரிபோர்ட்டுத்தான் அவர்களுக்கு ஆதாரம். அந்த உத்தியோகஸ்தர் சொல்வதும் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளுகிறதுமான கட்சி கள் என்னவென்று சிறிது பரிசோதிப்போம்.

கிஸ்திபாக்கிக்காக எவ்வளவு நிலங்கள் ஜப்தி யாகி ஏலம் போகின்றனவென்று ஒரு பரிட்சை பார்க்கிறார்கள். கிஸ்தி பொதுவாய் நாலு [illegible]க் களில் செலுத்தவேண்டியது. சில விடங்களி[illegible]டிசம் பர் மாதத்திலும், சில விடங்களில் ஜனவ[illegible] மாதத்தி லும் முதல் கெடு ஆரம்பிக்கிறது. [illegible]வரு மாத

மும் 10-ந் தேதிக்குள் செலுத்தவேண்டும். அப்படிச் செலுத்தத் தவறினல், செலுத்தவேண்டியவன் "தவறினவ" னுகி விடுகிருன். செல்லாகவேண்டிய தொகைக்குக் "கிஸ்திபாக்கி" யென்றுபெயர் 1864-ம் வருஷத்து 2-வது ஆக்டுப்படி கிஸ்திபாக்கிகளை வசூல் செய்ய ரெவின்யூ உத்தியோகஸ்தர்களுக்கு ஏராள மான அதிகாரமிருக்கிறது. கிஸ்திபாக்கியுள்ளவ னுடைய ஜங்கம சொத்துக்களை ஜப்திசெய்து, நோட் டீஸ் கொடுத்து ஏலம்போட்டு, கிஸ்திபாக்கி, அதற்கு வட்டி, ஜப்தி ஏலச்செலவுகள், இவைகளையும் வசூல் செய்துவிடலாம். இந்தக் காரியம் செய்வதற்கு சர்க் காருக்கு ஏஜண்டாய் இருப்பவர் கிராம பட்டா மணியக்காரர். அவரோ எல்லா உளவும்தெரிந்து, கிரா மத்திலேயே இருப்பவர். அவரை ஏய்க்க முடியாது. எந்தச் சாமான்களை யெடுத்துக்கொண்டு போய்விட் டால்பெருந்துன்பம் உண்டாகுமோ அவைகளைத்தான் அவர் ஜப்திசெய்வார் வீட்டு வாசற்கதவைப் பிடுங்கி விடுவார்; அல்லது ஜலம் கொண்டுவரும் குடத் தைக் கொண்டுபோய்விடுவார் இது சம்பந்தமான அநியாயம் கவர்ன்மெண்டாருக்கே தாங்காமல், ஒரு கலப்பையும் ஒரேர் மாடுமாவது ஜப்தி செய்யா மல் விட்டு விடவேண்டுமென்று ஒரு விதி ஏற்படுத்தி னர்கள். கிஸ்தி வசூல் செய்வதற்கு இது ஒருவழி. பாக்கி போட்டவருடைய நிலத்தைத் தொடருவது இரண்டாவது வழி. இது அதிகச் சுற்றும் தாமத மும் [illegible]கக்கூடியது. ஜப்திக்கு ஜங்கமசொத்து ஒன் றும் அ[illegible]படாவிட்டால் தான் இந்த வழியைத்தேடு வது. கிஸ்[illegible] செலுத்தாததற்காக ஜெயிலிலும் போட

லாம். ஆனால் அந்த வழக்கம் நின்று அநேக வருஷங்களாய் விட்டன. வாயிதாக் கொடுக்கத் தவறினவர்களை வெயிலில் நிறுத்திக் கசையடி அடிப்பதுண்டென்று பழையகாலக் கதைகளிற் கேட்டிருக்கிறோம். இதெல்லாம் 1864-ம் வருஷத்து ஆக்டுக்கு முன்னால் நடந்திருக்கவேண்டும். வருஷா வருஷம் ரெவின்யூ போர்டார் ஜமாபந்தி ரிபோர்ட்டு ஒன்று வெளியிடுகிறார்கள். அதில் மொத்தக் கிஸ்தி வரவேண்டியிருந்தது என்ன, வசூலானது எவ்வளவு, பாக்கிகள் எவ்வளவு, வசூலாவதற்குச் செய்த முயற்சிகள் என்னென்ன, என்ற விவரங்கள் காண்பித்திருக்கின்றன. தொடர்ச்சியாய் சில வருஷங்கள் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு வருஷமும் ஜங்கம சொத்துக்கள் ஜப்தியாகி ஏலம் போன இனங்கள் எவ்வளவென்றும், நிலங்கள் எவ்வளவு ஜப்தியாகி ஏலம்போயின வென்றும் ஒரு அட்டவணை போட்டு, நிர்ப்பந்தத்தின் பேரில் கிஸ்தி வசூலான கேசுகள் வெகு குறைவாயிருப்பதாகக் காண்பித்து, இதிலிருந்து கஷ்டமேயில்லாமல் நிலக்காரர்கள் கிஸ்தி செலுத்துகிறார்களென்று செட்டில்மெண்டு ஆபீசர் அனுமானம் செய்கிறார். இது சரியா? கிஸ்தி வசூலுக்காக ஏற்பட்டிருக்கும் சட்டமானது மிகக் கண்டிப்பாயும் தயவற்றதாயும் இருக்கிறதென்றும், ரெவின்யூ இலாகாவின் வலையினின்றும் தப்பவே முடியாதென்ற எண்ணம் நிலக்காரன் ஒவ்வொருவன் மனதிலும் நன்றாய்ப் பதிந்திருக்கிறதென்றும் சொல்லலாமே யொழிய, ஏராளமாய் இருக்கிறதினால் எளிதாய்க் கொடுக்கிறானென்று சொல்ல முடியுமா? விதியை நினைத்துக்கொண்டு, வீண் தாமதம் செய்வதிற் பயனில்லை யென்று கொடுத்து விடுகிறான்.

பிறகு, முன்செட்டில்மெண்டு பண்ணும்போது இருந்த ஜனத்தொகையைக் காட்டிலும் மறுசெட்டில் மெண்டுக்குள் ஜனத்தொகை அதிகமாயிருக்கிறதாகக் காட்டி, அதிலிருந்து ஜனங்கள் சௌகரியப்பட்டுச் செழித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது எப்படி? உணவுப்பொருள்கள் உண்டாவது அதிக மாகாமல் ஜனங்கள் மாத்திரம் அதிகமானால், எல்லோ ரும் வயிற்றை ஒடுக்கவேண்டி நேரிட்டுத் துன்பந் தானே மிகுதியாகும்? பிரஜைகள் பெருகுவதோடு சாகுபடியும்பரவிப் புதிதாய் உழவின் கீழ்ப்பட்ட நிலங் களும் பழைய நிலங்களைப்போல் செழிப்புள்ளவை களாயிருந்தால், ஜனசௌகரியத்திற்குக் குறைவில்லை யென்று எண்ணக்கூடும். ஜனத்தொகை விருத்தி யாவதால் எல்லா ஜனங்களும் க்ஷேமப்படாவிட்டா லும், நிலம்வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்குத் தானியங்களின் விலையேற்றத்தால் லாபந்தானே உண்டாகும் என்று சொல்லக்கூடும். உணவுப்பொருள் கள் மாத்திரம் விலையேறி, இதரசாமான்கள் விலை மாறுதிருந்தால் அப்படிச் சொல்வது சரிதான். இந்த விஷயத்தைப்பற்றி ஒரு விசாரணையும் செய்கிற தில்லை.

புது ரஸ்தாக்கள், ரயில்பாதைகள், இது போன்ற போக்குவரத்துக்குரிய சாதனங்கள் அதிகமாகிக் கொண்டு வருவதால் ஜனங்கள் சுகப்படுகிறார்க ளென்று சொல்லப்படுகிறது. போக்குவரத்து சாதனங் கள் அதிகமாவதால் விளைபொருள்கள் எளிதில் விற்பனைக்கு வெளியேபோய், தேவை மிகுந்த விடங் களில் விளைத்ததை உயர்ந்த விலைக்கு விற்க நிலக்கா

னுக்கு சௌகரியம் ஏற்படுகிறது. ஆயினும், அவன் வாங்கவேண்டிய சாமான்களும் அதிக விலை கொடுத்துத்தானே வாங்கவேண்டியிருக்கிறது? ஆகையால் நிலக்காரன் என்ன விற்று எவ்வளவு அடைகிறான் என்று மாத்திரம் கணக்கிடாமல், அவனுக்குள்ள எல்லாச் செலவுகளும்போக அவனிடம் ஏதேனும் பாக்கி நிற்க இடமுண்டா, அல்லது கடன் வாங்கிக் காலந்தள்ளுகிறானா என்று பார்க்கவேண்டும். தம் நிலத்தில் விளைவதைத் தாமே சாப்பிட்டு, விற்பதற்கு ஒன்றுமில்லாதவர்களுக்கு, ஜனத்தொகை மிகுந்தாலும், ரயில்பாதைகள் ரஸ்தாக்கள் புதிதாய் உண்டானாலும் எவ்வித லாபமும் கிடைக்கக் கூடியதில்லையென்று அறியவேண்டும். ஏராளமாய் நிலம் வைத்துக் கொண்டு, விளைந்ததைக் கட்டி, விலையேறின சமயத்தில் விற்று லாபமடையும் பெருத்த மிராசுதார்களைப் பற்றி இப்பொழுது நாம் பேசவில்லை. இன்றைக்கு அகப்பட்டதை இன்றைக்கே உண்ணும் ஏழை ஜனங்களைப்பற்றி மாத்திரம் சொல்லுகிறோம். எளிய நிலக்காரன்கூட ஏதேனும் சிறிதாவது விற்பதுண்டாவென்பதைப்பற்றி முன்னமேயே சொல்லியிருக்கிறோம்.

ஆதலால், ஜனங்களின் பொருளாதாய நிலைமையைப்பற்றி செட்டில்மெண்டு ஆபீசர் பண்ணும் விசாரணையானது சரியானதல்லவென்று தெளிவாகிறது. அதற்குக்காரணம், தாம் செய்யப்புகும் வேலைக்கு வேண்டிய யோக்கியதை அவரிடமில்லாதது தான். ஏதோ தன்புத்தியில் தோன்றும் வெறுந்தோற்றத்தையெல்லாம் வெளியிடுகிறார். இருக்கும் ஸ்திதியை இருக்கிறபடி அறியவேண்டுமென்றே நாம் வேண்டு

கிறோம். புது செட்டில்மெண்டில் கிஸ்தியை ஏற்றினால் தாங்கக்கூடும்படி எளிய நிலக்காரர்களுக்குக் கூடச் சக்தியிருக்கிறதென்று தெளிவாய்த் தெரிந்தாலொழிய கவர்ன்மெண்டார் யோசித்துச் சற்றுப் பொறுத்துத் தான் செய்யவேண்டும். சக்தி யுள்ளவர்களிடத்தி லிருந்து அதிகப்படி வரி வாங்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால் அதற்குச் சுலபமாக ஏற்பாடு செய்யலாம். வருமான வரிபோடுவதில், வரும்படி உயர உயர வரிவீதமும் உயரும் என்ற முறை அனுச ரணையிலிருந்து வருகிறது. அதே முறையை நிலத் தீர்வை போடுவதிலும் அனுசரிக்கலாம். ஒரு வரம்பு ஏற்படுத்தி, அதற்குமேலுள்ள வரும்படிகளுக்கு உயர்ந்த விதமாய் வரி போடலாம்.

---

## அத்தியாயம் 11.

---

மறு செட்டில்மெண்டுகளில் தீர்வையை உயர்த்து வதற்கு வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு விதமான முகாந்திரங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளைச் சிறிது பரிசோதிப்போம். முதலாவது, நில விலை உயர்ந்துகொண்டே வருவதால் நில வரும்படியும் உயர்ந்துகொண்டே வருகிறதென்று சொல்லப்படு கிறது. சென்னை ராஜதானியில் நில விளைவின் பெறு மானத்தைகொண்டு தீர்வை வீதம் ஏற்படுவதால், நாம் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டியது நிலத் தின் வரும்படி மாத்திரந் தான். நிலம் விற்கும் விலையைப்பற்றி விசாரிக்கவேண்டிய அவசியமேயில்லை.

-39-

செட்டில்மெண்டு ஆபீசரோ சப்ரிஜிஸ்டிரார் ஆபீசிலிருந்து நிலங்கள் சாசனமாகும் விலைகள் என்னவென்று கேட்டு வாங்கிக்கொள்ளுகிறார்.

நிலங்கள் பலவகைப்படும். புன்சை நிலம் நஞ்சையைக் காட்டிலும் தாழ்ந்த விலையுள்ளது. ஒரு போகம் விளையும் நஞ்சை இருபோகம் விளையும் நஞ்சையைக்காட்டிலும் குறைந்த விலைக்குப்போகும். தாழ்ந்த மானியக் கிஸ்திக்குட்பட்ட இனாம் நிலம் கடுமையான ரயத்துவாரி தீர்வைக்குட்பட்ட நிலத்தைக்காட்டிலும் மிகவும் உயர்ந்த விலைக்கு விற்கும். சில நிலங்கள் இருக்கும் இடவிசேஷத்தால் உயர்ந்த விலைக்குப் போகக்கூடியதாயிருக்கும். ஆகையால், எப்படிப்பட்ட நிலம், எந்த விடத்திலுள்ளது என்பது தெரியாமல், பொதுவாக நில விலைகளைக்கொண்டு ஒரு அனுமானமும் செய்யமுடியாது. நிலத்துக்கு விலை மதிப்பிடும்போது அதன் வருஷா வருஷ வரும்படியென்னவென்று பார்ப்பது வழக்கந்தான். வேறு காரணங்களால் போட்டி மிஞ்சாதிருந்தால் அவ்விதமெண்ணலாம். நிலத்திலிருந்து கிடைக்கும் வரும்படி அதிகமாவதால்தான் நிலவிலையும் ஏறுகிறதென்று சொல்லமுடியாது. நிலவிலை யேறுவதற்குப் பல விடங்களில் பல காரணங்களுண்டு. பணமாகச் சம்பாதித்து முதல் வைத்திருப்பவர்கள் பணத்தைக் கிடத்த நிலம் தேடுவதால் நிலவிலை உயருகிறது. நாட்டில் அமைதி யில்லாமலிருந்த முற்காலங்களில் ஜனங்கள் கையில்மிகுந்த பணத்தைப் பூமியில் புதைத்து வைத்தார்கள். இப்பொழுது அப்படிச் செய்வதில்லை. நிலம் வாங்குவதில் செலவிடுகிறார்கள். சொற்பகாலத்

துக்குமுன் பணம் நிலத்தை நாடாமல் இதரவழிகளில் அமர்ந்திருந்தது. ஜனங்கள் தம் நாட்டினரைக் கூட நம்பாமல் ஐரோப்பியக் கம்பெனிகளில் பணத்தை வட்டிக்கிட்டிருந்தார்கள். அந்தக்காலம் ஐரோப்பியரைச்சேர்ந்த எதுவும் மேலானதென்ற மூட அபிப்பிராயம் நம் தேசமெங்கும் மூடியிருந்த காலம். 1906-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ஆர்பத்நட் கம்பெனி அடியோடு சாய்ந்தபின் ஜனங்களுக்குப் புத்திவர ஆரம்பித்தது. தம் நாடு, தம் காரியம் என்ற பற்றுண்டாகி, இந்திய வியாபாரிகளிடத்திலும் கம்பெனிகளிடத்திலும் அதிக நம்பிக்கை வைக்கத் தொடங்கினார்கள். இந்த சமயத்தில் தான் சென்னை இந்தியன் பாங்கும். அது மாதிரியே வேறிடங்களில் வேறு கம்பெனிகளும் ஆரம்பிக்கப் பட்டன. பிற்பாடு பம்பாயிலிருந்த இந்தியன் ஸ்பீஷி பாங்கும் லாகூரில் பீபில்ஸ் பாங்கும் நஷ்டமுண்டாகிக் கலைந்து போனபோது மறுபடியும் நம்பிக்கைக் குறைவு உண்டாகிவிட்டது. இவைபோன்ற காரணங்களால் குறைந்தவிதம் வட்டி கிடைத்தாலும் நிலத்தைத் தேடி வாங்கும் வழக்கம் அதிகமாய்க்கொண்டு வருகிறது. தவிரவும், உழுது பிழைக்கும் விவசாயிகள் கையில் பணமிருந்தால் அதற்கும் நிலம் வாங்கி அதில் தாமே பாடுபடலாமே என்று நினைக்கிறார்கள். பணத்துக்கு வட்டி வாங்குவது பாபமென்பது மகம்மதியர் கொள்கை. ஆகையால் இந்த ஜில்லாவிலுள்ள மகம்மதியர்கள் வெகு ஆவலுடன் நிலம் வாங்கப் போட்டி போடுகிறார்கள். இவைகளிலிருந்து நிலத்துக்குப் போட்டி அதிகமாவதால் நிலவிலையும் அதிகமாகிறது.

விலையேற்றத்திலிருந்து வரும்படியும் ஏறுகிறதாகச்
சொல்லமுடியாது. சாகுபடி முறையில் மேன்மை
யுண்டானால் விளைவு மிகுந்து வரும்படியும் அதிகப்
படும். சொற்ப காலத்திற்கு முன் நாற்றை ஒற்றை
அலகுகளாக நட்டால் விரை குறைவாகச் செலவழியு
மென்று விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள்
கற்பித்துக் கொண்டிருந்தார்கள். சில விடங்களில்
இந்த முறையைக் கைக்கொண்டதினால் நன்மையும்
ஏற்பட்டிருக்கிறது. விவசாய இலாகாவின் ஊக்கந்
தான் குறைந்துவிட்டதோ, அல்லது ஜனங்
களுக்குத்தான் பிடித்தமில்லையோ, அதைப்பற்றி
இப்பொழுது ஒரு பேச்சுங் காணோம். அந்த முறை
யால் ஏதோ சில விடங்களில் சௌகரியமுண்டாகி
யிருந்தாலும், விரையில் அதிக லாபமிருக்கிற
தாய்த் தெரியவில்லை. தானியங்களின் விலையேற்றத்
திலிருந்து, நில வரும்படியை ஜாஸ்தியாக மதிக்க
இன்னொரு காரணமேற்படுகிறது. நிலத்தின் வரும்
படிக்கும் நில விலையின் ஏற்றத்திற்கும் சம்பந்தமே
யில்லையென்று முன்னும் பின்னுமுள்ள விளைச்சலைப்
பரிசோதித்தால் நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இதைத் தவிர இன்னொரு புதுமையான
வார்த்தை சொல்லப்படுகிறது. நிலக்காரன் கையில்
ஏதாவது மிகுந்தால் அது கள்ளுக்கடைக்கும்
சாராயக்கடைக்கும் போய்விடுமாம். இதுஉண்மையா?
இந்த வார்த்தை சொல்லுகிறவர்களுக்கு மிராசுதார்
களுக்கும் வயலில் வேலைசெய்யும் கூலியாட்களுக்கும்
வித்தியாசம் தெரியாது போலும். கூலிப் பிழைப்
புள்ளவர்கள் குடிக்கிறார்கள் என்பது யாவரும்

அறிந்த விஷயம். அம்மாதிரியே மிராசுதார்களும் குடிக்கிறார்களென்று சொல்லலாமா? முதலில் கூலிக்காரர்களாயிருந்து பிறகு நிலம் வாங்கி அந்தஸ்துவந்த பின்னுங்கூட குடியை விடாமல் அங்குமிங்கும் சில பேர் இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் நிலம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் குடிப்பதில்லை யென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். பிராம்மணர்களும், உயர்ந்த வகுப்புகளைச் சேர்ந்த பிராம்மணரல்லாதார்களும் குடி யென்பதைக் கனவிலும் நினைக்கமாட்டார்கள். ஒன்றிரண்டு அப்படியில்லாமல் இங்கிலிஷ் படித்து நாகரீகப்பாங்கில் குடிக்கிறவர்கள்கூட சிமைச்சாராயத்தை வாங்கி வீட்டிற்கொண்டு போய்க் குடிக்கிறார்கள். ஆகையால் பொதுவாய் எல்லா நிலக்காரர்களும் குடிக்கிறார்களென்று சொல்வது சுத்தப் பிசகு. ஏதாவது அங்குமிங்கு மிருப்பதைக்கொண்டு பொதுப்படையாக எல்லாரும் குடிக்கிறதாகச் சொல்லிவிடுகிறார்கள். இது இருக்கட்டும். அது உண்மையென்றே வைத்துக்கொள்வோம். அதற்கும் மறு செட்டில்மெண்டுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? உடம்பும் உயிரும் விலகிப்போகாமலிருக்க எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மாத்திரம் நிலக்காரனுக்கு வைத்துவிட்டு, பாக்கி யெல்லாம் சர்க்கார் உறிஞ்சிவிடுவதாக உத்தேசமா? அப்படியானால், சர்க்கார் பின்வருபவைகளுக்கும் உடன்படவேண்டும். விவசாயிகளை எவ்விதக் கைத்தெம்புமில்லாத கூலியாட்களாக ஆக்கி விட்டபின், மழையில்லாமற் பஞ்சம் நேரிட்டால் அவர்கள் எங்கே போவார்கள்? வயிற்றுக்கில்லாமல் சர்க்காரைத் தானே சரணமடைய வேண்

டும்? தவிரவும், அவர்களுக்கு விருத்தாப்பியத்திலும் வியாதி வந்த காலத்திலும் காலக்ஷேபத்திற்கு வகை செய்ய சர்க்கார் தயாராயிருக்கவேண்டும். அவர்களுடைய குழந்தைகள் படிப்புக்கும் பெண் பிள்ளைகள் கலியாணங்களுக்கும் வேண்டிய செலவுகளும் செய்யவேண்டும். இவ்வளவெல்லாம் ஒருவன் மற்றொருவனுக்குச் செய்தால், அம்மாதிரி உதவி பெற்றுக் கொள்பவனுக்கு என்னவென்று பெயர்? இப்படி இந்தியாவில் வசிப்பவர்கள் எல்லாரையும் அடிமைகளாக்கி விட்டால், இங்கிலாந்தில் உற்பத்தியாகும் சரக்குகள் தான் இங்கு விலையாகுமா? தங்கள் நாட்டிலுண்டாகும் சரக்குகள் ஏராளமாக விற்பனையாக இடங்கள் வேண்டுமென்று ஒரு தேசத்தார் இன்னொரு தேசத்தாருடன் யுத்தத்துக்குக்கூடப் போகிறார்களே!

ஜனங்களுக்குள் குடி பரவுவதற்குக் காரணமென்ன? மீளமுடியாத் துன்பத்தில் அகப்பட்டவன் ஏக்கங்கொண்டு குடியைத் தேடுகிறான். வீட்டில் துக்கங்கள், வியாபாரத்தில் நஷ்டம் இது போன்ற காரணங்களினால் ஒருவனுக்குத் துன்பமுண்டாகக் கூடும். எல்லாத் துன்பத்திற்கும் மேற்பட்டது நிலவரி செலுத்தும் துன்பம். பெய்த வருஷம் பாதி, காய்ந்த வருஷம் பாதியாக விருக்கும் இந்நாட்டில், நிலம் விளையவேண்டுமேயென்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்போது, தாங்கக்கூடாத வரியும் செலுத்த வேண்டுமென்றால் நிலக்காரன் என்னதான் பண்ணுவான்? வரியை உயர்த்தி அவனிடம் இன்னும் அதிகமாக வாங்குவதென்றால் என்னவாகுமென்று சொல்ல

வும் வேண்டுமா? இப்பொழுதிருக்கும் முறையை மாற்றிப்பார்த்தால் உண்மை எதுவென்று விளங்கும். என் கருத்தை விளக்கக்கூடிய என்னுடைய சொந்த அனுபோகமொன்று கூறுகிறேன். சுமார் 10 வருஷங்களுக்கு முன் என் நிலங்கள் வார சாகுபடியில் இருந்தன. முதலில் மாவுக்கு இவ்வளவு கலம் வீதமென்று குத்தகைக்கு விடுவதாகச் சொன்னேன். குடியானவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. பிறகு ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனியாக அதற்குத் தகுந்தபடி இவ்வளவு கலமென்று விதித்து, மேலே என்ன விளைந்தாலும் ஒரு நெல் கூட நான் கேட்பதில்லை என்று ஒப்புக்கொண்டேன். எல்லா வயல்களுக்கும் சேர்ந்தாற்போல் ஐந்து வருஷங்களுக்கு எருவும் போட்டுக்கொடுத்தேன். ஒவ்வொரு குத்தகைக்காரனும் தன்னாலான மட்டிலும் உழைத்து, உழவு கடவு எல்லாம் நன்றாய்க் கவனித்துப் பார்த்து, எனக்குக் கொடுத்தது போகத் தானும் போதுமான அளவு அடைகிறான். சில பேர்கள் வண்டியும் வைத்துக்கொண்டு தம்வண்டியிலேயே எருக்கொண்டு போவதுடன், ஒழிந்த காலங்களில் வண்டியை வாடகைக்கு விட்டும் சிறிது சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். சில பேருக்குத் தானே நிலம் வாங்கும் சக்தியும் உண்டாயிருக்கிறது. நான் செய்த மாதிரியே கவர்ன்மெண்டாரும் நிலத்தின்மேலுள்ள வரியை நிலையாக ஏற்படுத்தி மாற்றுவதில்லையென்று வாக்குத்தத்தம் செய்தால் நிலக்காரர்களுக்கு நன்மையுண்டாகும். அவர்கள் தம்மாலானமட்டில் உழைக்க இடமுண்டாகும். சர்க்கார்க்கிஸ்தியும் செலுத்தித்தயங்கு மிகுவ

-42-

த்தையும் அதிகமாக்கிக்கொள்ள முயற்சி செய்வார்கள். வயலில் வேலை யில்லாத காலத்தில் சிறு கைத்தொழில்கள் ஏதாவது செய்து தமக்கு வேண்டிய சில சாமான்களும் செய்து கொள்வார்கள். இப்பொழுது போல் வீண்பொழுது கழிக்காமல் பயன்படும் வேலைகளில் அமருவார்கள். நிலத்திலிருந்து விளையும் பொருள்கள் முன்னைக்காட்டிலும் அதிகமாகும். அவைகளை விற்று அந்தப் பணத்தைக்கொண்டு ஜனங்கள் இன்னும் அதிகமாகப் பலவித சாமான்களை வாங்குவார்கள். கையில் பணம் ஊற ஊற அவர்கள் வாங்கிப் புழங்கும் சாமான்களும் பலவகைப்படும். இத்தேசத்திற்கும் இங்கிலாந்து தேசத்திற்கும் மற்றோர் நிகரில்லாப் பற்றுண்டாகும். ஆங்கிலேயரை இந்நாட்டிற்கு வரச் செய்த ஈசனது திருவுளமும் நிறைவேறும். எந்த வழி மேம்பட்டது? இங்கு காட்டியிருக்கும் வழியா? அல்லது குறுகல் நோக்கமுள்ள ஜில்லாவின் சிற்றதிகாரிக்குத் தோன்றும் வழியா? நாம் காட்டியிருக்கும் வழியே மேலானதென்று நினைப்பவர்கள் யாவரும், அதற்கனுகூலமான வார்த்தைகளைக் கவர்ன்மெண்டாருக்கு வற்புறுத்திச் சொன்னால், அவர்களுக்கு நேர் நோக்கம் வந்து ஜனங்கள் மனதுக்கொத்தபடி நடப்பார்கள்.

## அத்தியாயம் 12.

மறு செட்டில்மெண்டுகளில் கிஸ்தி உயர்த்துவதற்கு இன்னொரு சாக்குச் சொல்லப்படுகிறது. நிலச்

சுவான்தாரன் "இடையிற்பிழைப்பவ" னென்றும், அயலானை அடித்துத் தின்று பிழைப்பவனென்றும் சொல்லப்படுகிறது. இந்த வார்த்தைகளின் கருத்தென்னவென்று யோசிப்போம். "இடையில் பிழைப்பவன" என்பதிலிருந்து, நிலத்தில் பாத்தியப்பட்டவர்கள் மூன்று பேர் இருப்பதாக ஏற்படுகிறது. முதலாவது கிஸ்தி வசூலிக்க பாத்தியமுள்ள கவர்ன்மெண்டார் இரண்டாவது செலவு செய்து, நிலம் சாகுபடியாக ஏற்பாடு செய்யும் மிராசுதார். மூன்றாவது நிலத்தை உழும் கூலியாள். இம்மூவரில் கடைசியிற் சொன்னவனுக்கு நிலத்தில் எவ்வித பாத்தியமும் கிடையாது. மிராசுதாரின் அனுமதியின்பேரில் அவன் நிலத்தில் உழைக்கிறான். ஆகையால் உண்மையில் நிலத்தில் சம்பந்தப்பட்டவர் இருவரே; அதில் ஒருவரை "இடையிற்பிழைப்பவன்" என்று சொல்வது பொருந்தாது. உள்ளபடி பார்க்கும்பட்சத்தில் முக்கால்வாசி நிலக்காரர்கள் தம் நிலத்தைத் தாமே சாகுபடி செய்வதால், பேருக்குக்கூட நிலத்தில் மூன்று பேருக்கு சம்பந்தமிருப்பதாய்ச் சொல்ல முடியாது.

சட்டசபை மீட்டிங்கு ஒன்றில் மிஸ்டர் பட்டர் வோர்த் நிலக்காரர்களை பாரஸைட்ஸ் (parasites) என்று சொல்வதின் கருத்து இன்னதென்று விளக்கினார். சில கொடிகள் ஒரு மரத்தை அண்டி அதைச்சுற்றி வளர்ந்து, அந்தமரத்திற்காக ஏற்பட்டிருக்கும் சாரத்தையெல்லாம் உறிஞ்சி வளர்கின்றனவாம். அப்படிப்பட்ட கொடிகளுக்கு பாரஸைட்ஸ் என்று பெயராம். பிரகிருதத்தில், நிலத்தையுழுபவன் மரத்தின்ஸ்தானத்

திலிருப்பதாகவும், தாழ்ந்த கிஸ்தி விதித்து மிகுந்ததை உழுபவன் உண்ணும்படி சர்க்கார் தாராள சிந்தையுடன் விட்டிருப்பதாகவும் கருத்து. நிலத்துக்குச் சுவான் தாரனும் சர்க்காருக்குக் கிஸ்தி செலுத்துபவனுமான மிராசுதார் இடையில் நின்று உறிஞ்சுபவனும். கவர்ன்மெண்டார் கருணைகூர்ந்து உழுபவன் அடையும்படி விட்டிருக்கிற நிலவரும்படி யெல்லாவற்றையும் மிராசுதாரன் உறிஞ்சிச் சாப்பிட்டுவிட்டு, உழைப்பவனுக்கு உயிரும் உடம்பும் ஒட்டியிருக்க எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மாத்திரம் கொடுக்கிறானும். இது சரியான வார்த்தையா? சாகுபடி செய்பவன் மிராசுதாரனாகவே யிருக்கலாம், அல்லது கூலியாளாகவுமிருக்கலாம். அன்றன்று கூலி வாங்குகிறவனாகவுமிருக்கலாம், அல்லது வருஷா வருஷம் சாகுபடி செய்து விளைந்ததில் வாரமாகத் தானொருபாகம் பெறுகிறவனாகவுமிருக்கலாம்; அல்லது குத்தகையாக இவ்வளவு கொடுக்கிறதென்று ஒப்புக்கொண்டு அதிகமாக விளைத்ததை அடைகிறவனாகவுமிருக்கலாம். அது எப்படியிருந்தாலும், கூலிக்கு வேலை செய்பவன் பேரில் தான் எங்களுக்குத் தயையுண்டு, மிராசுதார் கதி என்னவானாலும் எங்களுக்கு அக்கரையில்லை யென்று கவர்ன்மெண்டார் சொல்வது மிகக் குறுகலான யோசனையைக் காட்டுகிறது. கவர்ன்மெண்டார் எல்லா வகுப்பாருடைய க்ஷேமத்தையும் சமமாய்க் கருத வேண்டியவர்களென்பது சரியே. ஆயினும், இம்மாதிரி ஒரு வகுப்பாரைக் கெடுத்து, இன்னொரு வகுப்பாருக்கு நலம் செய்ய எண்ணுவது சரியாகாது.

தம் நிலத்தில் தாமே யார் உழைக்கிறார்களோ

அவர்களைப்பற்றி மாத்திரம் கவர்ன்மெண்டார் கவனிப்பது நியாயந்தான் என்று வைத்துக்கொள்வோம். "இடையில் பிழைப்பவன்" என்ற ஒருவன் எப்படி உண்டாகிறான்? தன் நிலத்தைத் தானே உழுபவனொருவன் கடனாளியாகப்போய் நிலத்தை விற்பதாக வைத்துக்கொள்வோம். அந்த நிலத்தை வாங்குபவன், விற்பவனைத் துறத்திவிட்டு. அவன் ஸ்தானத்தில் தானே உழுதால், அவன் அப்பொழுது சர்க்கார் தயவுக்குப் பாத்திரனாகிறான். விற்றவன் விற்றபிற்பாடுங்கூட வாங்கினவனுக்குக் கீழ்ப்பட்டு நிலத்தை உழுதால், அப்பொழுது மாத்திரம் விலைகொடுத்துவாங்கினவன் அன்னியனுடைய சாரத்தை அபகரிக்கிறவனாய்விடுகிறான். இம்மாதிரி சேரிடுவதை எவ்விதம் தடுக்கக்கூடும்? தாமே நிலத்தை யுழுபவர்களுக்கல்லது மற்றவர்களுக்கு விற்கக்கூடாதென்று ஒரு சட்டம் பண்ணிவிடலாம். அப்படியே, நிலத்தைச் சாஸனம் வாங்கிய பிற்பாடு வாங்கினவன் அதைத் தானே சாகுபடி செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் சாஸனம் ரத்தாகிவிடுமென்றும் விதியேற்படுத்தி விடலாம். இதெல்லாம் இனிமேலுக்குச் செய்யலாம். இதுவரையில பணம் போட்டு நிலம் வாங்கி, பிறர் சாகுபடி செய்து அனுபவிப்பவர்களை என்ன செய்யலாம்? அவர்களுக்கு நிலத்திலுள்ள பாத்தியத்தை இல்லையென்று சொல்லி, ஒருபாடாய் அவர்களை ஒழித்துவிடலாம். ஆனால் அப்படிச் செய்யுமுன் அவர்களுக்கு நிலத்திலிருந்து எவ்வளவு வரும்படி வருகிறதோ அவ்வளவு வட்டி மூலமாகக் கிடைக்கும்படி அவர்களுடைய நிலங்களுக்கு விலைவைத்துக் கொடுத்து ஈடுசெய்தால்தான் தர்மமாகும். அப்படி

ஈடுசெய்வதற்கு வேண்டிய தொகையை யார் கொடுக்கிறது? சர்க்காரா, கூலிக்காரர்களா? அந்த விஷயத்தைச் சர்க்காரும் கூலிக்காரர்களும் தமக்குள் எப்படியாவது ஏற்பாடு செய்து கொள்ளட்டும். ஈடுசெய்துவிட்டு மிராசுதார்கள் இப்பொழுது அனுபவிக்கும் எல்லாவற்றையும் வாங்கினபின், அந்த நிலத்தைத் தாமே சாகுபடி செய்பவர்களுக்கு சௌகரியமாகத் துண்டுகள் போட்டுப் பிரித்துக்கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தாய் விட்டால், அப்புறமும் ஒரு கஷ்டமிருக்கிறது. யாராவது ஒரு சாகுபடிக்காரன் தன்னுடைய திறமையான சாகுபடியினாலோ, அல்லது சிக்கனத்தினாலோ கொஞ்சம் பணம் சேர்த்துவிட்டால் அதைக்கொண்டு அவன் நிலம் வாங்கலாமா? வாங்கும் புது நிலத்தையும் தானே உழமுடியுமானால் வாங்கலாம், என்று சொல்லலாம். தானே உழமுடியாவிட்டால் என்ன பண்ணுகிறது? அப்பொழுது அவன் நிலம் வாங்கக்கூடாது என்று சொல்லவேண்டும். ஏனெனில், தானே சாகுபடி செய்யாத நிலம் சம்பந்தப்பட்டமட்டில், அவன் அன்னியரை உறிஞ்சுகிறவனாக ஆய்விடுவான். அதுதான் உதவாது ஆகையால் அவன் பணத்துக்கு வேறு வழிகள் தேடவேண்டும். தன்னைப்போல நிலத்தில் உழைக்கும் இன்னொருவனுக்குக் கடன் கொடுக்கலாமோவென்றால், அதுமுடியாது. ஏனெனில், ஒருவேளை கடன் திரும்பாவிட்டால், அவனுடைய நிலத்தை இவன் வாங்கிக்கொள்ள நேரிட்டு, இவன் சாகுபடி செய்யமுடியாத அளவு இவனிடத்தில் நிலம் வந்துவிடும் கைத்தொழில் விருத்தி செய்யும் வழிகளிலும் தன் பணத்தைச் செலுத்த முடியாது. எல்லாரும் அன்று கிடைத்ததை அன்றே சாப்

பிட்டுக்கொண்டு காலங்கழிக்கும் சிறு விவசாயிகளா யிருக்கும் தேசத்தில், கைத்தொழில்களாலுண்டாகும் சாமான்கள் விலையாவதற்கு இடமேது? ஒரு சாகு படிக்காரன் தானே மூன்று அல்லது நான்கு ஏகராக் கள்தான் உழக்கூடும். அவன் உழுவது நஞ்சையானல், ஒரு வருஷத்தில் (வரும்படியிற் பாதி சர்க்கார்க்கிஸ்தி என்ற கணக்குப்படி) 30ரூ, அல்லது 40ரூ கிடைக்கும மொத்த வரும்படியில் 5-ல் ஒன்று சர்க்கார்க்கிஸ்தி யென்று வைத்துக்கொண்டாலும், அவனுக்குக் கிடை ப்பது வருஷத்தில் 120 ரூ. அல்லது 160 ரூபாயாகும். இது அவன்குடும்பத்தின் சாப்பாட்டிற்கே போதாது. கைத்தொழில்களினல் உண்டாகும் நானவித உயர்ந்த சாமான்களை அவன் வாங்குவதெப்படி? கையில் மிகு ந்த பணத்தைச் சிறு வியாபாரிகளுக்குக்கூட கடன் கொடுக்கமுடியாது. ஏனெனில், கொடுத்த கடன் திரும்புவது துர்லபம். ஆகையால், உழைப்பாளியான ஒரு விவசாயிகையில் சிக்கன வாழ்தலால் மிகும் பண மெல்லாம் டம்பச்செலவுகளில் செலவழிய நேரிடும். அல்லது கையில் பணமே நிற்காமல் அப்பொழுது கிடைத்ததை அப்பொழுதே செலவழிக்கும் வழக்கம் உண்டாகிவிடும்.

இன்னொரு விதமான கஷ்டமும் உண்டாகலாம். சாகுபடி செய்பவனுக்கு வயது மிகுந்து சக்தியில்லா மையினலோ, அல்லது வேறுவிதசம்பாத்தியமிருப்பதி னலோ, தன்னிலத்தைத்தானே உழுவதைவிட்டு அயலா னிடம் அடைத்தால் என்ன பண்ணுகிறது? அப்பொ ழுது அவன் அயலானை உறிஞ்சிப் பிழைப்பவனுகி விடுகிறனல்லவா? முதலில் அவன் ஊமாக இருந்தது

-45-

வாஸ்தவந்தான். இப்பொழுது மரத்தின் சாரத்தை யுறிஞ்சும் கொடியாய் விட்டானல்லவா? இவனை ஒழிக்க என்ன பண்ணுவது? இங்கே சாஸனம் ஒன்றுமில்லை; ஆகையால் மேற்சொன்ன மாதிரி சட்டம் உபயோகப் படாது. சட்டசபையில் ஆனரபிள் மிஸ்டர் பட்லர் வோர்த் வெளியிட்ட யோசனைப்படிதான் செய்யவேண் டும். அதாவது, கிஸ்தியைக் கூடியமட்டில் உயர்த்தி; நிலம் ஒருகை விட்டு மறுகை மாருமல் செய்துவிட வேண்டும். உழுகிறவனுடைய சாப்பாட்டுச் செலவிற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு மாத்திரம் ஒதுக்கி விட்டு, பாக்கி யெல்லாவற்றையும் கிஸ்தியாக வாங்கி விடவேண்டும் லாபமொன்று மில்லாவிட்டால் நிலம் வாங்க ஒருவரும் முன்வர மாட்டார்கள்.

பின்பு, கவர்ன்மெண்டார் உத்தேசப்படி சாகு படிக்காரர்கள் க்ஷேமமடைவதுதான் நிச்சயமா? கிஸ் தியைக் கூடியமட்டில் உயர்த்தி ஒருவரும் நிலத்தை நாடாமல் செய்துவிட்டபின், சாகுபடிக்காரனுக்தான் கஷ்டப்பட நேரிடும். இடையில் மிராசுதார் வரக்கூடா தென்ற எண்ணத்துடன் கிஸ்தியை உயர்த்திவிட்டு, கொஞ்ச காலத்துக்கெல்லாம் மறுபடி யிறக்கிவிடலாம் என்றாலோ, அதுவும்முடியாது. ஏனெனில், வேண்டா தவர்கள் இறங்கின சமயம் பார்த்து இடையில் வந்து விடுவார்கள். ஆகையால், ஏற்றின கிஸ்தியையும் அப் படியே வைத்துக்கொண்டு, சாகுபடிக்காரனும் சுகப் படவேண்டுமென்ற எண்ணமிருந்தால், கவர்ன்மெண் டார் ஏகருக்கு இவ்வளவென்று கிஸ்தியில் தள்ளுபடி செய்து கொடுக்கவேண்டும். தன் நிலத்தைத் தானே சாகுபடி செய்பவனுக்குத் தான் அந்த மாதிரி தள்ளு

படி பண்ணவேண்டும் அப்படி யார் செய்கிறார்கள், யார் செய்யவில்லை யென்று கவனமாய்ப்பார்த்து அறிய வேண்டும் அந்தக்காரியத்தைக் கிராமக்கணக் கனிடம் ஒப்புவித்தால், அவனுக்கு கொண்டாட்டந் தான். அந்த வேலையைச் சரிவரமேற்பார்ப்பதற்கு இப் பொழுதிருக்கும் தாசில்தார் ரெவின்யூ இன்ஸ்பெக் டர்களின் சங்கியையை எத்தனையோ மடங்கு அதி கப்படுத்தவேண்டும். இந்த மாதிரி மேற்பார்வைக் கஷ்டத்தை விலக்கவேண்டித்தான் முன்னே கவர்ன் மெண்டார் சாகுபடியின்மேல் வரியென்ற முறையை விட்டு, பட்டாப்படி வரிசெலுத்த வேண்டுமென்று மாற்றினார்கள்.

அதனாலுண்டாகும் சிரமத்தை நினைத்து, தன்னு படி கொடுக்கும் வழக்கத்தைக் கைக்கொள்ளமாட் டார்கள். கிஸ்தியைக் கூடியமட்டில் ஏற்றி விதித்து விட்டால், மிஸ்டர் பட்டர்வொர்த் எதிர்பார்த்தபடி சர்க்கார் கஜானுக்களில் பணம் கொள்ளமாட்டாமல் பொங்கும். அந்தப் பணத்தைக்கொண்டு என்னெ ன்னதான் செய்யமுடியாது? முன் சொன்ன மாதிரி சாகுபடி செய்பவர்களுக்கு வியாதிவந்த காலங்களி லும் கிழவயது வந்தபோதும் இனமாகச் சாப்பாடு கிடைக்கும். அவர்கள்பெண்கள்பிள்ளைகள் கலியாண ஙக்கு வேண்டிய செலவும் சர்க்காரிலேயே செய்வார் கள். இப்படி யெல்லாம் நடந்தால் சாகுபடிக்காரர் கள் நிலைமை எவ்வாறிருக்கும் என்று சிறிதுயோசிக்க வேண்டும். தன் கையுழைப்பால் தான் விருத்தியடைய வேண்டுமென்ற எண்ணம் போயே போய்விடும். எல் லாம் கவர்ன்மெண்டாரால் ஆகவேண்டு மென்று

எண்ணி ஜனங்கள் அவரையே தஞ்சமடைவார்கள். ஆடுமாடுகளைப்போல் வாயில்லாப் பிராணிகளாகி விடுவார்கள். தம்முடைய ஹிதத்தையோ, தம் தேசத்தின் மேன்மையையோ கருதித்தேட முடியாதவர்களாகிவிடுவார்கள். இப்படியெல்லா மாய்விட்டால், அதிலும்ஒரு நன்மையுண்டு. 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிஸ்டர் தாக்கரே என்ற ஒரு கம்பெனி உத்தியோகஸ்தர் விரும்பியபடி தேசமெங்கும் "அற்ப விவசாயிகள்" தழைத்துப் பரவுவார்கள். "தூரதேசத்திலிருந்து சில அன்னியர்கள் வந்து இவ்வளவு ஜனங்களை யாளும் இந்நாட்டில், குடிகளிடத்தில் கர்வமும், மேன்மையான எண்ணங்களும், பெருங்காரியங்கள் சாதிக்கவேண்டுமென்ற ஆசைகளும் உண்டாகாவண்ணமிருப்பதற்கு ரயத்துவாரி செட்டில்மெண்டு நன்றாய் அமையப்பெற்றது. இங்கிலாந்திலோ, பூமியினின்று கிடைக்கும் வரும்படியிற் பெரும்பாகம் சில குடும்பத்தார் மாத்திரம் அடைந்து, ஐசுவரியத்திலிருப்பதால், அக்குடும்பங்களிலிருந்து புத்திமான்களும், போர்வீரர்களும், ராஜதந்திரிகளும் தோன்றித் தம் நாட்டின் நலமும் பலமும் ஓங்கச்செய்கிறார்கள். ஏராளமாக நிலங்கள் வைத்துக்கொண்டு, பெரும் வரும்படி பெறுகிறவர்களுக்கு, பெருங்கருமங்கள் துணிய நேரமும், சுயேச்சை விருப்பமும், மேலான தோற்றங்களும் இருக்குமாதலால், அவர்கள் தம் நாட்டைக் கீர்த்தியாம் மலையின் சிகரத்தை அடையச் செய்திருக்கிறார்கள். அவர்கள் பெருமை எந்நாளும் பொங்கட்டும்! இங்கே இந்தியாவிலோ, தனம்மிகுந்தவர்களிடம் காணப்படும் மடங்கா மனவெழுச்சியும், ஆழ்

ந்த யோசனையும், அன்னியருக்கு அடங்கா ஆண்மையும், ஓரிடத்திலும் சிறிதும் தோன்ருமல் தடுக்கவேண்டியதவசியம். நமது அக்கரைக்கும் ஆட்சிக்கும் அவை முற்றிலும் விரோதமானவை," என்று மிஸ்டர் தாக்கரே என்பவர் தெளிந்த யோசனையுடன் எதிர்பார்த்தபடியெல்லாம் அநேகமாய் நடந்துவிட்டது. மேற்சொன்னபடி கிஸ்தியை உயர்த்தி நிலத்தை ஒருவரும் நெருங்காமல் செய்துவிட்டால் மிஸ்டர் தாக்கரேயின் எண்ணமும் முற்றிலும் நிறைவேறிவிடும்

இனி, ஜமீன்தார்களை இப்பொழுதிருக்கும் நிலைமையிலேயே விட்டுவிடலாமா? உயர்ந்தெழும் உற்சாகமும், சுயேச்சை விருப்பமும், ஆழ்ந்த யோசனையும் எங்கும் தலைகாட்டாமல் அமுக்கவேண்டியது அவசியமல்லவா? ஏதோ நல்லதிர்ஷ்டத்தால் இவ்விராஜதானியிலுள்ள ஜமீன்தார்கள் இதுவரையில் சர்க்காருக்கு யாதொரு இடஞ்சலும் செய்யவில்லை. டம்பச்செலவுகளிலும், வியாச்சியச் செலவுகளிலும் தம் பணத்தையெல்லாம் செலவழித்துக் கொண்டிருந்தனர். அகம்பாவமிருந்த எண்ணம் சிலரிடம் இருக்கலாம்; ஆயினும் சுயேச்சை விருப்பமும், ஆழ்ந்த எண்ணங்களும் அவரிடம் இன்னும் காணவில்லை. ரயத்துவாரி மிராசுதார்களைக் களைந்துவிட்டதுபோல ஜமீன்தார்களுடைய எஸ்டேட்டுகளையும் விலை கொடுத்து வாங்கி விடுதல் பொருத்தமாயிருக்கும். ஜமீன்தார்களின் கீழ்ப்பட்ட குடிகள் நிலத்தைச் சாகுபடி செய்வார்கள். தேசமெங்கும் சமமானநிலை யுண்டாய்விடும். இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் ஒரு நெருக்கமான பந்தம் ஏற்படும். அந்தந்த தேசத்தின் சுபாவயோக்கியதைக்குத்

தருந்தபடி வெவ்வேறு காரியங்களும் அமையும். இங்கிலாந்தோ, பூமிமுழுவதும் ஞானவொளி பரவச் செய்துபுகழ்பெற்று, உலகெங்கும் படர்ந்திருக்கும் தன் ஏகாதிபத்தியத்தை ரக்ஷிக்கும். இந்தியாவோ, பிரிட்டிஷ் இராஜாங்கத்துக்குட்பட்டு, மற்றெல்லாநாடுகளும் உபயோகிப்பதற்கு வேண்டிய பொருள்கள் யாவையும் உண்டு பண்ணும்படி உழைத்து, யாவருக்கும் தொண்டுபட்ட விதியைப் பூணும்.

---

## அத்தியாயம் 13.

மறுசெட்டில் மெண்டுகள் விஷயமாய் இன்னும் ஒரு சமாசாரம் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. இங்கிலாந்தில் சாகுபடிக்குக் கீழ்ப்பட்ட நிலங்களெல்லாவற்றையும் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்கி, எல்லாஜனங்களும் பொதுவாயும் சமமாயும் பூமியிலிருந்து கிடைக்கும் பொருள்களை அனுபவிக்கும்படி இராஜாங்கத்தார் வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சிறிதுகாலமாக அநேக புத்திமான்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிறார்களென்றும், அது அப்படியிருக்க, இங்கே இந்தியாவில் மாத்திரம் அதற்கெதிரான காரியம் செய்வது பொருந்தாதென்றும் சிலசமயம் சொல்லப்படுகிறது. நிலங்களை யெல்லாம் இராஜாங்கத்தார் வசப்படுத்திக் கொள்வதென்றாலென்ன? இங்கிலாந்து தேசத்திலிருக்கும் நிலமெல்லாம் சிலர் கைக்குள், சுமார் 60, 70 பேர்களுக்குள்ளடங்கியிருக்கிறது. நிலம் பிரிந்து, கைவிட்டுக் கைமாறாமல், சில பிரபுக்களி

டத்தில் மாத்திரம் மடங்கியிருக்கிறது. சில சமயங்களில் மேற்சொன்ன பிரபுக்களின் சௌகரியத்திற்காக ஏராளமாய்ச் சாகுபடிக்குக் கீழ்ப்பட்ட நிலங்களைக்கூட வேட்டையாடும் காடாகவோ மேய்ச்சற்றரையாகவோ மாற்றி, அநேக கிராமங்களிலுள்ள குடிகளை அப்புறப்படுத்தி விடுவதுமுண்டு அங்கேகுடிகளுக்கு நிலத்தில் யாதொரு விதமான பாத்தியமும் கிடையாது. குத்தகைக்குக் கேட்கும் குடியானவர்கள் மிகுந்திருப்பதால் நிலங்களின் பகுதி வீதங்களும் மிகவும் உயர்ந்திருக்கின்றன. ஆகையால் அங்கே நிலங்களில் குடிகளுக்கு நிலையான பாத்தியமும் நேரான பகுதிகளும் ஏற்படுத்த வேண்டுமென்று ஜனங்கள் முறையிடுகிறார்கள். ஸ்காட்லண்டு தேசத்தில் இவ்விஷயத்தில் நியாயம் கிடைக்கும் பொருட்டுத் தனியாக கோர்ட்டுகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தவிர, இங்கிலாந்தில் இன்னொரு பேச்சும் கிளம்பியிருக்கிறது அதாவது, "நாட்டிலுள்ள நிலம் இவ்வளவு தான் என்று ஒரு அளவுக்குட்பட்டிருப்பதால், ஏதோ சிலர் மாத்திரம் நிலமனைத்தையும் தம் வசத்தில் அடக்கிக் கொள்ளும்படி விட்டுவிடுவது சரியல்ல. எவனொருவனும் நிலம் தனக்குச் சொந்தமென்று சொல்லும் பாத்தியத்தை இல்லாமல் செய்து விடவேண்டும். நிலமெல்லாம் பொதுவாய் இராஜாங்கத்துக்குச் சொந்தமாயிருக்கவேண்டும். இப்பொழுது நிலச்சுவான்தார்களாய் இருப்பவர்களுக்கு ஆயுசுவரையில் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த வரும்படியைச் சர்க்காரில் கொடுக்கும்படி ஏற்பாடு செய்துவிடலாம். அவர்கள் குழந்தைகளை நிர்கதியாக விடக்கூடா

48-

தென்று தோன்றும் பட்சத்தில் அக்குழந்தைகள் ஆயுசுவரையிலும் மேற்சொன்னபடி கொடுத்து விடலாம். அப்படி நிலமெல்லாம் இராஜாங்கத்தார் வசத்தில் வந்துவிட்டால், பிறகு சௌகரியமாய்த் துண்டுகளாக வகுத்து, குடிகளுக்கு அடைமானம் செய்து, ஸ்திரமான பாத்தியமும் நியாயமான பகுதியும் ஏற்படுத்திவிடலாம். இதைத்தான் "நிலத்தைப் பொதுப்படுத்தி விடுதல்" (Nationalisation of Land) என்று சொல்லுகிறார்கள்.

இம்மாதிரி இந்தியாவிலும் செய்ய வேண்டுமா? அந்த தேசமும் இந்த தேசமும் ஓரே நிலைமையிலிருக்கின்றனவா? அங்கு பயனுண்டாகும் காரியத்தை இங்கு செய்வது அவசியமா? இங்கே சென்னை இராஜதானியில் 33 லக்ஷம் ரயத்துவாரி நிலக்காரர்களிருக்கிறார்கள். இன்னும் சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலம் ஏராளமாக இருக்கிறது. இங்கிலாந்திலிருப்பது போல் இங்கே நிலமெல்லாம் சிலரிடத்தில் மாத்திரம் சிக்கிக்கொண்டிருக்கவில்லை. ஏதாவது இங்குமங்கும் ஒருபெருத்த வியாபாரியோ, அல்லது பணம் படைத்த உத்தியோகஸ்தனோ, பலரிடமிருந்து நிலம் வாங்கிச் சேர்த்து, சில பெரும் எஸ்டேட்டுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அந்த எஸ்டேட்டுகள் அடுத்த இரண்டொரு தலைமுறைக்குள் பிள்ளைகளுக்குள் சமபாகப்பட்டு உடைந்து போய்விடும். மேலும், பட்டாதார்களிற் பெரும்பான்மையோர் தமக்குள்ள சிறிது நிலத்தைத் தாமே சாகுபடி செய்கிறார்கள். அவர்கள் விஷயத்தில், ஸ்திரமான பாத்தியத்தைப் பற்றியாவது, சீரான பகுதியைப்பற்றியாவது பேசுவதற்கிட

யில்லை சிறுபான்மை நிலக்காரர்கள் பகுதிக்குவிட்டு அனுபவிக்கிறார்களே, அவர்களுடைய குடிகள் இராஜாங்கத்தார் ஒத்தாசையை வேண்டும்படி அவ்வளவு கஷ்டப்படுகிறார்களா? இக்கேள்விகளுக் கெல்லாம் தகுந்தபதில்கிடைத்தபிற்பாடு, மேற்சொல்லிய கோட்பாடுகள் எம்மட்டில் நம்தேசத்திற் பய்ன்படுமென்று யோசிக்கலாம்.

இரண்டு தேசங்களிலுமுள்ள வர்த்தமானங்களை நன்றாய் ஆராய்ந்து பார்த்து, வழங்கும் வார்த்தைகளின் வித்தியாசத்தை ஒதுக்கி, விஷயத்தை மாத்திரம் உற்று நோக்கினால், இங்கிலாந்தில் எது செய்ய வேண்டுமென்று முயலுகிறார்களோ அது இந்தியாவில் இப்பொழுதே அமைந்திருக்கிறதென்று தெரியவரும். இங்கிலாந்தில் நிலமெல்லாம் சில பெரும்மிராசுதார்களிட மிருப்பதை மாற்றி. சாகுபடி செய்யும் குடிகளை மிராசுதார் நினைத்த மாத்திரத்தில் நிலத்தைவிட்டுத் துறத்த முடியாமலும், பகுதியை நேர் நீதியில்லாமல் உயர்த்த முடியாமலும் செய்யவேண்டுமென்று பாடுபடுகிறார்கள். இங்கே இந்தியாவிலோ ஜனங்களிற் பெரும் பான்மையோர் நிலச் சொந்தக்காரர்கள். தம் நிலத்தில் ஸ்திரமான பாத்தியமுள்ளவர்கள். அவர்கள் விஷயத்தில், சர்க்காருக்கு அவர்கள் எவ்வளவு கிஸ்தி செலுத்த வேண்டியது நியாயம் என்ற ஒரே கேள்வி தான் உண்டு. இப்படியிருக்க, நிலம் இராஜாங்கத்துக்குச்சொந்தமென்றும், மிராசுதார்கள் பகுதிக்காரர்களென்றும் சொல்வதால் என்ன பயனுண்டாகக் கூடும்?

இனிமேல்; இங்கிலாந்தில் நடந்துகொண்டிருப்ப

-49-

தற்கு எதிரான காரியம் இங்கே நடக்கிறதாவென்று பார்ப்போம். அங்கே நிலமெல்லாம் இராஜாங்கத்துக்குச் சொந்தமாகவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்கு எதிரிடையாக இங்கே இராஜாங்கத்துக்குச் சொந்தமான நிலத்தைக் குடிகளுக்கு பாத்தியப்படுத்துவது சரியல்லவென்று சொல்லத் துணிபவர்கள், இந்தியாவிலுள்ள நிலமெல்லாம் சர்க்காருக்கே சொந்தமானது, என்ற அபிப்பிராய முடையவராய் இருக்க வேண்டும் அந்த அபிப்பிராயம் நன்றாய் விஷயத்தை ஆலோசித்தபின் கொண்ட அபிப்பிராயமா? அல்லது ஆராய்ந்து பார்த்தால் நிற்கமாட்டாத வெறும் மனத்தோற்றத்தால் உண்டாகும் பேச்சா? சற்றுப் பார்ப்போம். தேசத்தை ஜயித்தபாத்தியத்தால் நிலமெல்லாம் இராஜாங்கத்துக்குச் சொந்தமாய்விட்டதென்று சொல்லமுடியாது. போரில் வெற்றிபெற்ற காரணத்தால் இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்யம் ஏற்படவில்லை இத்தேசத்தை பலத்தால் வென்றதாகவும், பலத்தாலேயே அடக்கியாளவேண்டுமென்றும், இங்குமங்கும் சில பிரிட்டிஷ்காரர்கள் வெறும் டம்பப்பேச்சுப் பேசிக்கொண்டிருக்கலாம் அவர்கள் புரோபஸர் ஸீலி எழுதியிருக்கும் "எக்ஸ்பான்ஷன் ஆப் இங்கிலாண்ட்" (Expansion of England) என்ற புஸ்தகத்தை வாசித்தால் நலம் பெறுவார்கள். மேற்சொன்ன பாத்தியத்தை இந்து ராஜ்யங்களிலிருந்தும் அடைந்ததாகச் சொல்லமுடியாது. நிலம் இராஜாங்கத்துக்குச் சொந்தமென்று இந்து ராஜாக்கள் ஒருநாளும் பாத்தியங் கொண்டாடினதில்லை. பொதுவாய்க்கிடந்த நிலத்தில் முதல் முதல் எவனொருவன் புகுந்து எமமட்டில் தன்னுடையதாக்கிக் கொள்ளுகிறானோ அயமட்

டில் அவனுக்குச் சொந்தமாகிறது. பிற்பாடு அவன் மூலமாகவே மற்றவர்களுக்குப் பாத்தியமுண்டாகக் கூடும். கிடைக்கும் வரும்படியில் ஒருபாகம் கேட்க மாத்திரம் அரசனுக்குப் பாத்தியமுண்டு. நிலங்களின் மேல் ஏற்பட்டவரி தானியமாகச் செலுத்தப் பட்டதைக்கொண்டு, மிராசுதார் பகுதி செலுத்துவதாக ஆழ அறியாதவர்கள் சொல்லுகிறார்கள். மகம்மதிய ராஜ்யங்கள் நடந்தபோது முன்னிருந்த பாத்தியம் மாறவில்லை. வரியைமாத்திரம் ஆறில் ஒன்றிலிருந்து இரண்டில் ஒன்றாக மாற்றினார்கள். பிரிட்டிஷ் இராஜாங்கத்தாரும்வெகு நீண்டகாலமாக ரயத்துவாரி நிலத்தைச் சர்க்காருக்குச் சொந்தம்போல் நினைக்கவேயில்லை. ஆதியில் கவர்ன்மெண்டார் பட்டாவுக்குட்பட்ட நிலங்களைக்குறித்து, "கிஸ்தி செலுத்தும்வரை அனுபவத்திற்கு ஹானியில்லை" யென்று பகிரங்கமாய் வெளியிட்டிருக்கிறார்கள். இதனால் ஸ்திரமான பாத்தியம் ஒன்றிருக்கிறதாக ஏற்படுகிறது. நிலத்தைக் கிரயசாஸனமோ, தானசாஸனமோ செய்வதற்கும் யாதொரு தடையும் சொல்லவில்லை; பராதீனம் செய்வதற்கு முன் சர்க்காரின் அனுமதி வேண்டுமென்று விதி யேற்படுத்தவுமில்லை. சர்க்கார் சொந்தக்காரராகவும் மிராசுதார் வெறும் பகுதிக்காரராகவு மிருந்தால், அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமென்றவிதி யேற்பட்டிருக்கும். ஆகையால், மிராசுதாருக்கு நிலத்தில் பூர்ண ஸ்வாம்யமும் உண்டு. அதாவது தன் நிலத்தைத் தானே அனுபவிக்கவும், அதைவிட்டுப் பிறர்களை விலக்கவும், தன்னிஷ்டம்போல் அதை உபயோகிக்கவும் அவனுக்கு பாத்தியமுண்டு. இவைகளைத் தவிர நிலத்தில் இராஜாங்கத்துக்குள்ள வேறு பாத்

தியமென்ன? இராஜாங்கத்துக்கு அனுபவம் கிடையாது; மிராசுதாரை நிலத்திலிருந்து அப்புறப்படுத்த முடியாது; அவன் இவ்விதந்தான் அனுபவிக்கவேண்டுமென்று சொல்லவும் முடியாது; இப்படியிருக்க, நிலம் இராஜாங்கத்துக்குச் சொந்தமென்று எப்படிச் சொல்லலாம்? நிலம் யாராலாவது சாகுபடியாகவேண்டுமென்று சொல்வதற்கும், சர்க்கார்ச் செலவுகள் நடப்பதற்காக வரும்படியில் ஒருபாகம் வரி வாங்கிக்கொள்வதற்கும் மாத்திரம் சர்க்காருக்குப் பாத்தியமுண்டு. மறு செட்டில்மெண்டுகளைப்பற்றி விசாரம் வந்த சமயங்களைத் தவிர மற்ற சமயங்களில் மிராசுதார்களனுபவத்திலிருக்கும் நிலத்தைத் தமக்குச் சொந்தமென்று சர்க்கார் ஒரு நாளும் சொன்னதில்லை இராஜாங்கக் காரியங்களுக்கோ அல்லது பொதுக்காரியங்களுக்கோ அவசியமேற்பட்டால், சொந்தக்காரனுக்கு விலை கொடுத்துத்தான் சர்க்கார் நிலம் வாங்குகிறார்கள் அப்படி வாங்கின பின்பே அவர்களுக்குச் சொந்த பாத்தியமுண்டாகிறது. அந்த சொந்த பாத்தியத்துக்கும், பொதுவாய் இராஜாங்க ரீதியிலுண்டாகும் பாத்தியத்துக்கும் எப்பொழுதும் வித்தியாசமுண்டு.

சாகுபடிக்கு வந்திராத நிலங்களிலும் சர்க்காருக்குச் சொந்த பாத்திய முண்டென்று சொல்லமுடியாது. தரிசுகளை யார் வேண்டுமென்றாலும் சாகுபடி செய்யலாம். எல்லாஜில்லாவிலும் அப்படி வருஷா வருஷம் நடந்து கொண்டிருக்கிறது. சாகுபடி செய்யுமுன் தர்க்காஸ்து மனுக்கொடுப்பதுண்டு, வாஸ்தவந்தான். அது நிலத்தை யெடுத்துக்கொள்ள அனுமதி

கேட்பதற்காகவல்ல. மனுப்பண்ணிக்கொள்ளுகிறவன் தான் வைத்துக்கொண்டிருக்கும் நிலங்களின் ஜாப்தாவில் அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தாசில்தாருக்கு ஒரு நோட்டீஸ் கொடுப்பதற்குச் சமானமாகும். சாகுபடி செய்வதில் லாபமில்லாவிட்டால் அவன் நிலத்தை விட்டுவிடலாம். அப்பொழுதும் ஷ ஜாப்தாவிலிருந்து அந்த நிலத்தை விலக்கிவிடும்படி மறுபடியும் தெரிவித்து விடலாம். 1905-ம் வருஷத்து (Land Encroachment Act) நில ஆக்கிரமிப்புச் சட்டப்படி இன்னாருக்கென்று சொந்தமில்லாத நிலமெல்லாம் சர்க்காருக்குச் சொந்தமென்று சொல்லியிருக்கிறது உண்மைதான். ஆனால், அனுமதியில்லாமல் ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு மாத்திரம் ஒரு அதிகாரம் உண்டாக்கிக் கொள்வதற்கு அவ்விதம் சொல்லியிருக்கிறது. மேற்கண்ட ஆக்டின் 2 (1) செக்ஷன்படிக்கு ரஸ்தாக்கள், பாலங்கள், குழிகள், குளங்கள் முதலியவை பொதுஜன உபயோகத்துக்கு வேண்டியவையென்று சொல்லியிருப்பதால், அவைகள் அழிந்து போகாமல் காப்பாற்றவேண்டியது அவசியமென்றேற்படுகிறது. பொதுஜன உபயோகத்துக்கு வேண்டாததும், சாகுபடிக்கு வரக்கூடியதுமான நிலங்கள் சர்க்காருக்குச் சொந்தம்போல் பாவிக்கப்படுகிறது. ஆனால் சாகுபடிக்குக் கொண்டுவராத வரையில் தான் அப்படி பாவிக்கலாம். அனுமதியின்மேல் சாகுபடியாகிவிட்டால், சாகுபடி செய்தவன் ஷ ஆக்டு 2-வது பிரிவுப்படி "ரயத்துவாரி நிலக்கார"னாகி விடுகிறான். அவன் நிலம் சர்க்காருக்குச் சொந்தமென்ற வகுப்பை விட்டு விலகிவிடுகிறது. இங்கே நாம் ஆலோசிப்பது, அனுபோகத்துக்குவந்த நிலங்களைப்பற்றி சர்க்கார்

சொந்த பாத்தியம்கொண்டாட முடியுமா வென்பதுதான்.

ஆகையால், இந்நாட்டில் நிலம் இராஜாங்கத்துக்குச் சொந்தமென்று சொல்வது, விஷயத்தை ஊன்றிக் கவனிக்காமல் சொல்லும் சொல் என்று விளங்கும். கட்சிக்காக அந்த வார்த்தை உண்மையென்றே வைத்துக்கொள்வோம். அந்த ஆதாரத்தைக் கைக்கொண்டு, நிலங்களுக்கு "நீதிப்பகுதி" யென்று சொல்லப்படுகிற அளவுக்குள் பகுதி பெற்றுக்கொள்ள சர்க்காருக்குச் சம்மதந்தானா? நிலச்சொந்தக்காரனிடம் பகுதிக்கு ஒப்புக்கொள்ளும் குடியானவன், சாகுபடிக் கூலிக்கும் தன் காலட்சேபத்துக்கும் எவ்வளவு செல்லுமோ அதுபோக பாக்கியிருக்கும்படி விளைந்தால் தான் பகுதிகொடுக்க முடியும். சில நிலங்களில் அப்படி பாக்கியிராது; அப்பொழுது பகுதியும் கிடையாது. சாகுபடிச் செலவுக்கும் குடியானவன் காலட்சேபத்துக்கும் எவ்வளவு வேண்டுமோ அதற்குமேல் விளைவதைமாத்திரம் பகுதியாய்வாங்குவதற்குத்தான் "நீதிப்பகுதி" யென்று பெயர். அவ்விதம் பகுதி பெற சர்க்கார் சம்மதிக்கும் பட்சத்தில், இப்பொழுது வயிறு ரப்புசிக்கமுடியாமல் கஷ்டப்படும் எத்தனையோ ஏழை நிலக்காரர்கள் சற்று சுகமடைவார்கள்.

நிலம் சர்க்காருக்குச் சொந்தமென்ற கொள்கையை கிராகரிக்க இன்னொரு காரணமும் உண்டு. அந்தக் கொள்கை ஜனங்களுடைய க்ஷேமத்தைக் கெடுக்கக் கூடியது. பகுதிக்காரனைப் பிழிந்து தான் லாபமடைய வேண்டுமென்று விரும்புவது எங்கும் நிலமுடையவர்களின் சுபாவம். இந்தச் சுபாவத்தை

நினைத்தே ஜமீன்தாரிப் பிராந்தியங்களில் வசிக்கும் குடியானவர்களைக் காப்பாற்றும் பொருட்டு "மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்ட்" (Madras Estates Land Act) என்ற சட்டம் 1908-ம் வருஷத்தில் ஏற்பட்டது. அது சட்டசபையில் ஆலோசனைக்கு வந்தபோது, அந்த மசோதாவைச் சட்டமாகச் செய்ய முன்னிற்கும் கடமையை வகித்த கவர்ன்மெண்டு மெம்பர் உபமானம் ஒன்று எடுத்துச் சொன்னார். "இரு கரைகளையும் இடைவிடாது சிறுகச்சிறுக இடித்துத் தள்ளும் ஒரு நீரோட்டத்திற்குச் சமானம் ஜமீன்தார்கள்," என்று சொன்னார். கரைகளைக் கெட்டிப்படுத்திக் கொண்டேயிருந்தால் தான் நீரை நேரான ஓட்டத்தில் செல்லும்படி செய்யலாம். அதுபோலவே குடியானவனை வெருட்டவோ, அல்லது பகுதியை உயர்த்தவோ, ஜமீன்தாருக்கு இவ்வளவு மட்டில் தான் பாத்தியமுண்டென்று தெளிவாய் வரையறை செய்யவேண்டியது அவசியம். கவர்ன்மெண்டார் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட ஜமீன்தார்களையே இவ்விதம் தடைப்படுத்த வேண்டுமென்றால், ஒரு கட்டுக்கும் அடங்காமல், சட்ட சபைக்கும் கீழ்ப்படாமலிருக்கும் நமது கவர்ன்மெண்டார் நிலைமையென்ன? பெரும்பிரவாகத்துடன் கரையை இடித்துத் தகர்த்து நாடெல்லாம் பரவும் கங்கா நதிக்கு ஒப்பாகச் சொல்லலாம் நமது கவர்ன்மெண்டாரை. கங்கையின் ஜலம் பரவின விடங்களில் வண்டல் படிந்து காலக்கிரமத்தில் பூர்ணபலனுண்டாகும். அம்மாதிரி குடிகளிடமிருந்து ஏராளமாய் இறுத்த வரியை மறுபடியும் அவர்கள் நன்மையின் பொருட்டே ராஜாங்கத்தாரும் செலவழிக்கக்

கூடும். ஆனால், குடிகளே அவ்விதம் பலங்குன்றச் செய்வது தகுதியா?

கவர்ன்மெண்டார் சாதாரண மிர்ாசுதாரைப் போல் அகப்பட்ட மட்டிற் பார்க்கும் குணத்தை விட்டு, தாமாகவே கருணை கூர்ந்து ஜனங்களுடைய க்ஷேமத்தை மாத்திரம் கருதி நடப்பார்களென்று நம்பியிருந்தோம்; அது வீணெண்ணமாய்விட்டது. கூடிய மட்டில் வரியை உயர்த்தி வசூலித்துவிட வேண்டுமென்ற எண்ணமொன்றுதானிருக்கிறதாகத் தெரிகிறது: அது ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு விதமாக வெளியாகிறது. ஒரு சமயம், கையில் மிகுந்ததை நிலக்காரன் கள்ளுக்கடைக்குக் கொண்டு போகும் வழியில் தடுத்துவிட வேண்டுமென்று வேகங் கொள்வதின் மூலமாக வெளியாகிறது இன்னொரு சமயம், "இடையில் நிற்பவனை" ஒழித்துவிடவேண்டு மென்று செய்யும் முயற்சிகளில் தோன்றுகிறது; மற்றொரு சமயம் நிலமெல்லாம் சர்க்கார் வசமாகிவிட வேண்டுமென்ற வார்த்தையால் வெளியாகிறது. கவர்ன் மெண்டார் தமஷ்டம்போல் கொஞ்ச காலத்திற் கொருதரம் நிச்சயமாய்க் கிஸ்தியை உயர்த்தி விடுவதென்ற முறையை நிறுத்தி, சட்ட சபையில் கிஸ்தியை உயர்த்தலாமா வென்ற விஷயத்தை நன்றாக ஆலோசித்த பின்பே அவ்விதம் செய்யவேண்டிய காலம் வந்து விட்டது. இந்த நோக்கத்துடன் புதிதாய் ஒரு சட்டம் ஏற்படுத்தும் பொருட்டு, சட்ட சபையிற் கொண்டுவரவேண்டுமென்ற உத்தேசத்துடன் மசோதா ஒன்று பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதை அடுத்த அத்தியாயத்தில், சில வியாக்கியானங்களுடன் வரைவோம்.

# அத்தியாயம் 14.

முன் அத்தியாயத்திற் சொன்னபடி, சில வரியை மாற்றும் முறையை நிபந்தனைகளுக் குட்படுத்த வேண்டுமென்ற உத்தேசத்துடன் வரையப்பட்ட மசோதா ஒன்று கீழே அச்சிட்டிருக்கிறது. அதன் காரணங்களும் நோக்கங்களும் அதிலேயே சேர்க்கப்பட்டிருக்கின்றன. 1916-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ந் தேதி கூடின சென்னைச் சட்டசபை மீட்டிங்கில் அதை ஆலோசனைக்குக் கொண்டுவரலாமென்று முதலில் உத்தேசமிருந்தது; பின்பு யோசித்ததில், அதை மிராசுதார்கள் எல்லாரும் பார்த்து நன்ருய் ஆலோசித்து அவர்கள் சம்மதம் கொடுக்கும் வரையில் பொறுப்பது தகுதி யென்று தோன்றிற்று.

மசோதாவின் இரண்டாவது பிரிவில் இரண்டு நிபந்தனைகளடங்கி யிருக்கின்றன. அதாவது, (1) கிஸ்தியை மாற்றலாமாவென்ற விசாரணை ஆரம்பிக்கு முன்னும், (2) மாற்றப்பட்டபடி புதுக்கிஸ்தி வீதங்கள் ஊர்ஜிதத்துக்கு வருமுன்னும், சட்ட சபையாரின் அனுமதி பெறவேண்டுமென்று அதில் சொல்லியிருக்கிறது. கிஸ்தியை ஏற்றவேண்டுமா வென்பதற்கு விசாரணைகள் நடந்து செலவுகளும் செய்தபின், புது வீதப்படி கிஸ்தி வசூலிக்குங் காலத்தில் தடைசெய்தால், கவர்ன்மெண்டாருக்குச் சம்மதமாயிராதாகையால் முதலாவது நிபந்தனை போடப்பட்டிருக்கிறது. ஏற்றப்பட்ட வீதப்படி கிஸ்தி வசூல் செய்வதைத் தடுப்பதற்கு இப்பொழுது சட்ட சபையார் யாதொன்றும் செய்யமுடியாது. அவ்விதம் தடுக்கப் பல

நடவை சட்ட சபையில் தீர்மானங்கள் கொண்டுவந்தும் பயன்படாமற் போய்விட்டது. ஆகையால், இனிமேல் புது செட்டில்மெண்டுகளில் நிதிக்கு அதிகக் கிஸ்தியை வசூல் செய்ய ஆரம்பிக்குமுன், சட்டசபையார் உத்தரவு பெறவேண்டியது கவர்ன்மெண்டாருடைய கடமை என்று ஏற்படுத்திவிட வேண்டும்.

"நோக்கங்களும் காரணங்களும்" என்ற பாகத்தின் மூன்றாவது பாராவில் இரண்டாவது வாக்கியத்தைச் சிறிது விவரிக்கவேண்டும். கவர்ன்மெண்டார் எல்லா ஜனங்களுக்கும் பொதுவில் டிரஸ்டிகளாக நிலத்தைத் தம் வசமாக்கிக்கொள்ள வேண்டுமென்று சிலர் சொல்லுகின்றனர். நிலமானது செயற்கைப்பொருளல்லாது இயற்கைப் பொருளாயிருப்பதால், பூமியிலிருந்துண்டாகும் லாபத்தில், முழுமைக்கு மில்லாவிட்டாலும், பெரும் பான்மைக்காவது கவர்ன்மெண்டார் பாத்தியப்பட்டவர்களென்று சொல்லலாம். பொது ஜன நன்மையை உத்தேசித்துச் சொல்லப்படுகிறபட்டில், இந்தக்கட்சிக்கு ஒருவித ஆட்சேபணையும் சொல்லமுடியாது. ஆனால் ஒன்று மாத்திரம் கேட்டுக்கொள்ளுகிறோம். மேற்கண்ட விஷயத்தை ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துவிட்டு, அதற்குள்ள ஆட்சேபணை சமாதானங்களை விரிவாய்வெளிப்படுத்தி, ஜனங்களும் தம்முடைய அபிப்பிராயத்தைத்தெரிவித்த பின்புதான் அப் புதுமுறையை அனுசரிப்பது தகுதி. ஜனங்கள் அதற்குச் சம்மதப்பட்டுவிட்டால் மெத்த நலம். அதன் பிறகு நிலத்திலிருந்து கிடைக்கும் வரும்படியை யாதாரமாய்க்கொண்டு வரிபோடுவதா, அல்லது நிலத்தின் விலையை ஆதாரமாய்க்

கொண்டு வரி போடுவதா என்ற கேள்வி யுண்டாகும். முதற்சொன்ன வழியை அனுசரித்தால் கைத் தொழிலின்மேல் வரிபோடுதல் சரியல்லவென்ற ஆட்சேபனை யுண்டாகும். பின் சொன்ன வழியை யனுசரித்தால் சில நன்மைகளுண்டு. அவைகளைப் பின்வரும் அத்தியாயங்களில் விளக்குவோம். தவிரவும், என்ன வீதம் வரி போடுகிறதென்று சட்ட சபையிலுள்ள பிரதிநிதிகள் மூலமாய் ஜனங்கள் சம்மதத்தைக் கேட்டுக்கொண்டு தான் செய்யவேண்டும். புது நிலைமைக்குத் தகுந்தபடி வேண்டுவன செய்து கொள்வதற்காக மிராசுதார்களுக்குத் தக்க சாவகாசம் கொடுத்தபின் புது ஏற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில், எல்லா நிலத்துக்கும் சர்க்கார் டிரஸ்டி யென்றால், நிலம் சாகுபடியாவதற்குச் செல்லும் செலவு போக பாக்கி நிலவரும்படியெல்லாம் சர்க்காரைச் சேர்ந்ததாகும். அதாவது, நிலத்தில் சாதாரண மனிதர்களுக்குள்ள பாத்தியமெல்லாம் பறித்துவிட்டதற்குச் சமானமாய்விடும். ஆகையால், எது செய்தாலும் யாவருமறிய வெளிப்படையாகச் சொல்லிச் செய்யும்படி வேண்டுகிறோம்.

சென்னை இராஜதானியில் நிலவரியை மாற்றும் முறையை ஒழுங்குபடுத்த ஒரு மசோதா.

நிலவரி வீதத்தை மாற்றும் முறைகளைச் சீர்ப்படுத்த வேண்டியது அவசியமாயிருப்பதால் கீழ்க்கண்டபடி சட்டம் செய்யப்படுகிறது.

(1) இந்தச் சட்டத்துக்கு "நிலவரித் தீர்மானச் சட்டம்" என்று பெயர். இது உடனே அமுலுக்கு வரும்.

(2) எந்த ஜில்லாவிலாவது, அல்லது ஜில்லாவின் ஒரு பாகத்திலாவது, இந்தச் சட்ட சபையின் அனுமதியில்லாமல் நிலவரியை மாற்ற ஏற்பாடுகள் ஆரம்பிப்பதாவது, அல்லது மாற்றின வீதப்படி வசூலிப்பதாவது கூடாது.

## நோக்கங்களும் காரணங்களும்.

(1) நிலம் பொறுக்கும் கிஸ்தியைப் பிரஜைகள் அரசனுக்குச் செலுத்தவேண்டிய வரியாக வைத்துக்கொண்டாலும், அல்லது பகுதிக்காரனால் சொந்தக்காரனுக்குச் செலுத்தப்படும் பகுதியாக வைத்துக்கொண்டாலும், அதை எப்பொழுது எவ்விதமாய் மாற்றலாம் என்று விதிகள் ஏற்படுத்தவேண்டியது அவசியம்.

(2) நாகரீகமடைந்த எல்லாத் தேசங்களிலும் கருதுவதுபோல இங்கேயும் அது வரி யென்றே ஏற்றுக்கொண்டால், மற்ற வரிகளைப் போல் இந்த வரியையும் சட்ட சபையின் சம்மதியின்மேல் தான் போடவேண்டும். சர்க்காருக்குப் பணம் வேண்டியிருந்தாலும் அல்லது வேண்டாதிருந்தாலும், 30 வருஷத்திற் கொருதடவை நிலத்தீர்வையை நிச்சயமாய் மாற்றும் வழக்கம் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. ஆகையால், மறுசெட்டில்மெண்டுகளில் நிலத்தீர்வையை யேற்றின காரணத்தினால் இதர வரிகளிலெதையாவது சர்க்கார் குறைத்திருக்கிறார்களென்பது இதுவரையிற் கிடையாது. சாதாரண மனிதர்களைப்போல் சர்க்காரும் வரவுக்குத் தகுந்தபடி செலவுகள் ஏற்படுத்திக்கொள்வது சரியல்ல. அவர்கள் செய்யவேண்டுவதாவது, தேசத்தின் ஆட்சி திறமாய் நடப்பதற்கு எவ்வளவு பணம் தேவை யென்று கணக்கிட்டு, பிறகு எல்லாப் பிரஜைகளிடமிருந்து நியாயமாய்ப் பகிர்ந்து வேண்டுவதை வசூலித்துக்கொள்ள வேண்டும்.

(3) நிலத்தீர்வையைப் பகுதி யென்றெண்ணினாலும், அப்பொழுதும் சட்டம் அவசியந்தான். நிலமெல்லாம் தம்முடையதென்றும், நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களெல்லாம் பகுதிக்காரர்களென்றும் பாத்தியம் கொண்டாடுகிற இராஜாங்கம் உலகத்தில் வேறெங்கேயாவது இருக்கிறதோவென்பது சந்தேகம். ஈஸ்டு இந்தியா கம்பெனியார் அதிகாரம் வகித்த காலத்தில், தாம் போட்டிருந்த

முதலுக்கு முடிந்தவரையில் உயர்ந்த லாபமடையவேண்டுமென்ற ஒரே நோக்கமுள்ள வியாபாரிகளாயிருந்தால், நிலத்தைத் தமக்கே உரித்தான சொத்தென்று நினைத்தார்கள். அவர்களுக்குப் பின்வந்த இந்தியா கவர்ன்மெண்டாரும் அதை யொட்டி அவ்விதமே நினைக்கிறார்கள் போலும்.

நிலம் கவர்ன்மெண்டாருக்கே சொந்தமென்று வைத்துக் கொள்வோம். அப்பொழுதும் கிஸ்தி விதிக்கும் முறையை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டியது அவசியந்தான். நில முழுபவனிடமிருந்து தன்னாலானமட்டில் பறிப்பது நிலச் சொந்தக் காரனின் சுபாவம். உழுபவன் எக்கேடுகெட்டாலும் அவன் கவனிப்ப தில்லை. இது மனித இயற்கை. நிலச் சொந்தக்காரன் சாதாரண மனிதனாயிருந்தாலும், அல்லது கவர்ன்மெண்டாராயிருந்தாலும் ஒரே மாதிரிதானே நடக்கும். கவர்ன்மெண்டார் இந்தக் கருத்தைக்கொண்டு தான் சாசுவதக் கிஸ்திக்குட்பட்ட எஸ்டேட்டுகளில் குடிவார மேல்வாரதார்களுக்குள் ஒருவருக்கொருவருள்ள பாத்தியத்தை நிர்த்தாரணம் பண்ண, "எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டு" (Estates Land Act) என்னும் சட்டத்தையேற்படுத்தினார்கள். ஜனங்களுடைய க்ஷேமத்தைக் கருதி கவர்ன்மெண்டார் தாமாகவே கட்டுக்குள்ளடங்கி நடப்பார்களென்று எண்ணக்கூடும். ஆனால், கவர்ன்மெண்டார் மறு செட்டில்மெண்டுகள் பண்ணும் விதத்தையும். ஜனங்களும் ஜனப் பிரதிநிதிகளும் நியாயமாய் எவ்வளவு கேட்டுக்கொண்ட போதிலும் அவ்வளவையும் ஒதுக்கிவிட்டுத் தாம் போன போக்கிலேயே போய்க்கொண்டிருப்பதையும் பார்த்தால், ஜனங்களுடைய நன்மை யைக் கவனியாமல் வரி வரும்படியைப் பெருக்குவதிலேயே நோக்க முள்ளவர்களாயிருப்பதாகத் தெரிகிறது. அதிகாரம் வகிக்கும் மனிதர் கள் காலத்துக்குக்காலம் வேறுபடுவதால் ஒருவேளை இவ்விதம் நடக்கக் கூடும். ஆகையால் சட்ட சபையின் அனுமதிக்குட்பட்டே நிலத் தீர்வையை உயர்த்தவேண்டியது அவசியமாயிருக்கிறது.

(4) நிலத்தை யுழுபவர்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கு மிடை யில் மிராசுதார்கள் என்ற புதுவகுப்பினர் ஏற்பட்டுவிட்டதாக பெரிய பொறுப்புள்ள கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் வெகு அதிருப்தி யுடன் அடிக்கடி சொல்லுகிறார்கள். சாகுபடிக்காரன் பிழைப்பதற்கு

வேண்டுமளவுக்கு மேல் மிகுதியிருக்கும்படி ஒதுக்கியிருப்பதால்தான் அந்தப் புதுவகுப்பினர் உண்டாயிருக்கிறதாகச் சொல்லுகின்றனர். ஆகையால் மிகுதி ஒன்றுமேயில்லாமல் நிலத்தீர்வையை உயர்த்தி விட்டால் சர்க்காருக்குச் சந்தோஷந்தான் என்று எண்ண இடமிருக்கிறது. நிலக்காரன் கையில் ஏதாவது மிகுந்தால் அது கள்ளுக்கடைக்குப் போய்விடுமாகையால் தீர்வையை உயர்த்துவது நியாயமென்று கலெக்டர் துரை யொருவர் சொன்னாராம். சர்க்கார் அதை மறுதளித்து ஒன்றும் சொல்லவில்லை. இந்த வார்த்தைகளை யனுசரித்து முற்றிலும் நடந்தால் நிலக்காரர்களனைவரும் அற்றைக் கூலி கொண்டு பிழைக்கும் ஆட்கள் போல் ஆய்விடுவார்கள். தீர்க்காலோசனையின்றித் தப்பி நடந்தால் ஜனங்களுக்கு ஏராளமான நஷ்டமுண்டாகக்கூடிய இந்த முக்கியமான விஷயத்தில், கவர்ன்மெண்டு மெம்பர்களோ, செட்டில்மெண்டு உத்தியோகஸ்தர்களோ டிஸ்டிரிக்ட் கலெக்டர்களோ தமதிஷ்டம்போல் தோன்றினதைச் செய்யும் வழக்கத்தை நிறுத்தி, ஸ்திதியை மாற்ற யோசனைகள் ஆரம்பிக்குமுன்னும், கடைசியான தீர்மானங்கள் செய்வதற்கு முன்னும் ஒரு சட்டத்தின் கட்டுக்குக் கீழ்ப்பட்டு எல்லாம் நடக்கவேண்டியது அத்தியாவசியமானது.

(5) "எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட்" என்னும் சட்டத்தின் அவசியத்தை வற்புறுத்தும்போது கனம் போர்ப்ஸ் பின் வருமாறு பேசினார்:— "அவரவர் பாத்திய மின்னதென்று தெளிவாய்த் தீர்மானிக்காவிட்டால், ஜமீன்தார்கள் குடிகளைச் சிறுகச்சிறுகக் கரைத்துவிடுவார்கள். ஜமீன்தார் நதியின் வெள்ளம்போல் ஆவார். குடியோ அந்நதியின் கரைபோலாவான். பலமற்றவர்களுக்குத் துணை நிற்கவேண்டுமென்ற காரணத்தால் மாத்திரமன்றி, ராஜ்ய தந்திர ரீதியையும் தேச க்ஷேமத்தையும் அனுசரித்து கவர்ன்மெண்டார் குடிகளுக்கு இவ்விதம் சாதகம் செய்யவேண்டும்." நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்களிடமிருந்து வாங்கும் வரியை கவர்ன்மெண்டார் மேலும் மேலும் ஏற்றிக்கொண்டு போவதைப் பார்த்துக்கொண்டு, ஜனப்பிரதிநிதிகள் சும்மாவிருப்பது சரியல்ல வென்று தோன்றுகிறது. ஜமீன்தார்களின் குடிகள் விஷயத்தில் மிஸ்டர் போர்ப்ஸ் சொன்னதெல்லாம் கவர்ன்மெண்டாருக்குட்பட்டிருக்

கும் ரயத்துவாரி நிலக்காரர்கள் விஷயத்தில் இன்னும் அதிகமாய்ப் பொருந்தும்.

(6) தஞ்சாவூர் ஜில்லா விவசாயிகளின் பொருளாதார நிலைமையைக் குறித்து விசாரணை யொன்று செய்யவேண்டுமென்று நான் தீர்மானம்கொண்டு வந்தபோது, சட்ட சபையில் வெளிப்பட்ட அபிப்பிராயங்களை உற்றுப்பார்த்தால், மேற்சொன்னபடி ஒரு ஒழுங்கு ஏற்படுத்தவேண்டியது அவசியமென்று தெளிவாகும். வரி வருமானத்தில் மாத்திரம் கவலைகொண்ட கவர்ன்மெண்டார் அந்தத் தீர்மானத்தை அலட்சியம் செய்துவிட்டார்கள்.

(7) இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் சென்னை கவர்ன்மெண்டாருக்கும் வரிகளைப் பகிர்ந்துகொள்வதற்கு இப்பொழுதுள்ள ஏற்பாட்டை மாற்ற இந்த மசோதா பிரவர்த்திக்கவில்லை. நிலத்தீர்வை மொத்த வசூலிற் பாதி எப்பொழுதும்போல் இந்தியா கவர்ன்மெண்டாரைச் சேரும். தீர்வையை மாற்றுவதை மாத்திரம் சட்டத்திற் குட்படுத்தவேண்டும்.

(8) தீர்வையை எவ்வளவு காலத்திற்குப் பிறகு மாற்றலாம் என்றாவது, எவ்வளவுக்கு அதிகப்படாமல் மாற்றலாம் என்றாவது இதில் சொல்லவில்லை. நிர்வாக அதிகாரிகள் தீர்வையை மாற்ற ஆரம்பிக்குமுன் சட்டசபையின் அனுமதியைப்பெறவேண்டுமென்று மாத்திரம் சொல்லியிருக்கிறது.

---

## அத்தியாயம் 15.

இதுவரையில் இப்பொழுதிருக்கும் பிசகுகளை மாத்திரம் எடுத்துச்சொன்னோம். செட்டில்மெண்டு பண்ணும் வழியைப் படிப்படியாய்க் காட்டினோம். அதிலுள்ள குறைகளை வெளியிட்டோம். செட்டில்மெண்டுகள் நிலையான ஆதாரமொன்றையும் வைத்

துக்கொண்டு செய்யப்படவில்லையென்றும், உத்தியோகஸ்தர் மனதில் தோன்றியபடி யெல்லாம் நடத்துவதற்கு ஏராளமாய் இடமிருக்கிறதென்றும் வாசிப்பவர்களுக்குவிளங்கியிருக்கும். ஒரு செட்டில்மெண்டான பின் சிறிது காலங்கழித்து இன்னொரு செட்டில்மெண்டு பண்ணுவதில் தவிர்க்கமுடியாத பல கஷ்டங்களிருப்பதாகச்சொன்னோம். சாகுபடிச் செலவுகளைப்பற்றி கவர்ன்மெண்டார் முதலில் போட்ட கணக்கு சரியல்லவென்று காண்பித்தோம். கவர்ன்மெண்டாரும் அது மிகச் சிரமமானதும் சரியாய்ச் செய்யமுடியாததுமான காரியமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அநேக காரணங்களால், செலவுபோக மிகுந்ததிற் பாதி எவ்வளவென்று கண்டுபிடித்து, அதிலிருந்து கிஸ்தி விதிப்பது அசாத்தியமாயிருப்பதால், வேறு ஏதாவது புதுவழி யொன்று தேடவேண்டியிருக்கிறது. மதுரை ஜில்லாவில் நடந்த புது செட்டில்மெண்டில் கவர்ன்மெண்டார் அப்புது வழியைக்கண்டுபிடித்தார்கள் போலும். அங்கே செய்ததாவது, நிலங்களுக்கு மிராசுதார்கள் ஒப்புக்கொண்டபடி விளைச்சல் இவ்வளவென்று ஏற்றுக்கொண்டு, மாற்றுவிதத்தை மாத்திரம் புதிதாய்க் கணக்கிட்டு, அதன்படி விளைச்சலின் மொத்தப் பெறுமானங்கண்டு பிடித்து, அதில் 5-ல் ஒன்றைக் கிஸ்தியாக விதித்தார்கள். சில வருஷங்களுக்கு முன் காலஞ்சென்ற இராமசந்திர தத்தரும் அவருடைய சில நண்பர்களும் இந்தியா மந்திரிக்கு அனுப்பிய மனுவில், மொத்த வரும்படியில் ஐந்தில் ஒன்று கிஸ்தி விதிக்கலாம் என்று சொல்லியிருப்பது வாஸ்தவந்தான். ஆனால் நிலத்தீர்வையேற்பாடுகளைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் பிரசுரித்

திருக்கும் யாவருமறிந்த தீர்மானத்தில் லார்டு கர்ஸன் அந்த யோசனையைச் சிறிதும் அங்கிகரிக்காமல் தள்ளிவிட்டார் அப்பொழுது இந்தியா கவர்ன்மெண்டார் தீர்க்காலோசனை செய்து வெளியிட்ட தீர்மானத்தை இப்பொழுது சென்னை கவர்ன்மெண்டார் அசட்டை செய்யலாகாது அது எப்படியாயினும், இம்மாதிரி செட்டில்மெண்டு பண்ணும் கிரமத்தைத் தலைகீழாக மாற்றுவதற்குமுன் மிராசுதார்களுக்கு அதைத் தெரிவித்து அவர்கள் சம்மதியையும் பெற்றுக்கொள்ள வேண்டிய நியாயமுண்டு.

கவர்ன்மெண்டாரும் மிராசுதாரும் கவனிக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் என் எண்ணமொன்றை வெளியிடுகிறேன் நாளுக்குநாள் விரிந்துகொண்டிருக்கும் சர்க்காரின் காரியங்கள் நடந்து வருவதற்கு மேலும்மேலும் பணம் தேவையாயிருக்கிறதென்பது நன்றாய்த் தெரிந்தவிஷயம் இதர வரிகளைத் தொடாமல் அதிகப்பணம் அகப்படவேண்டுமென்றால், எல்லா ஜில்லாக்களிலும் நிலத்தீர்வைமொத்தத் தொகையையெடுத்துக்கொண்டு, 100-க்கு இத்தனைவீதமென்று அதிகப்படுத்தி வசூல் செய்துவிடலாம் 1912-13ம் வருஷத்துக்கும், 1913-14-ம் வருஷத்துக்கும் சர்க்கார் வரவு செலவு பட்ஜட் கணக்குகளை வைத்துக்கொண்டு இப்பொழுது சொன்ன ஏற்பாட்டை உதாரணங்காட்டி விவரித்துக் கூறுவோம்.

-57-

| வரவுகள் | 1912—13 ரூபாய்கள் | 1913—14. ரூபாய்கள் |
|---|---|---|
| நிலத்தீர்வை (பாய்ச்சல் தீர்வையுள்பட) | 341,96000 | 348,35000 |
| ஸ்டாம்புகள் ... ... | 65,50000 | 71,25000 |
| எக்சைஸ் (கலால்வரி) ... ... | 159,50000 | 174,00000 |
| வருமான வரி (இன்கம்டாக்ஸ்) ... | 16,21000 | 1775000 |
| காட்டிலாகா வரும்படி ... ... | 40,60000 | 40,00000 |
| ரிஜிஸ்டிரேஷன் ... ... | 20,80000 | 23,50000 |
| இதர வரும்படிகள் ... ... | 45,70000 | 46,03000 |
| ஆ | 690,27000 | 720,88000 |

| செலவுகள். | 1912—13 ரூபாய்கள் | 1913—14 ரூபாய்கள் |
|---|---|---|
| நிலத்தீர்வையிலாகா ... ... | 145,67000 | 146,51000 |
| காட்டிலாகா ... ... | 35,10000 | 32,03000 |
| நியாயஸ்தலங்கள் ... ... | 63,36000 | 65,94000 |
| போலீஸ் ... ... | 82,91000 | 87,46000 |
| கல்வி யிலாகா ... ... | 58,88000 | 97,63000 |
| வைத்திய இலாகா ... ... | 29,39000 | 39,14000 |
| மராமத்து இலாகா (Public Works) ... | 183,02000 | 195'79000 |
| இதர செலவுகள் ... ... | 159,19000 | 156,08000 |
| ஆ | 757;52000 | 820,58000 |

மேலே குறித்த இரண்டு வருஷங்களுள், முதலாவது வருஷத்தில் உத்தேசச் செலவானது உத்தேச வரவைக்காட்டிலும் சுமார் $67\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் அதிகமாயிருக்கிறது. அந்தச் சமயத்தில் சர்க்கார் வசத்தில் ஏராள்மாகப் பணத்தேக்கமிருந்ததால், அதிலிருந்து அதிகச்செலவுக்கு வேண்டியிருந்ததை எடுத்துக்கொண்டார்கள். அப்படியில்லாமல், கையிருப்பு சாதாரண

மாயிருந்திருக்கும் பட்சத்தில், மேற்சொன்ன அதிகச் செலவுக்காக புதுவரியாவது போட்டிருக்கவேண்டும். அல்லது கடனாவது வாங்கியிருக்கவேண்டும். புதுவரி போடுவதென்றால் கீழே விவரித்திருக்கிறவாறு செய்திருக்கலாம். நிலவரியில் சென்னை மாகாண கவர்ன்மெண்டாரடையும் பாதி 341,96(0) ரூ., இந்தியா கவர்ன்மெண்டாரடையும் பாதி 34196000ரூ., ஆக நிலவரி மொத்தம் 683,92000 ரூ யின்மேல் 100-க்கு 10 விதம் ஏறுபடிவரி போட்டால் அதனால் 6839200 ரூ. கிடைத்திருக்கும். இந்தத் தொகை அதிகச் செலவுக்குங்கண்டு மிகுந்து மிருக்கும். மேற்சொன்ன இரண்டாவது வருஷத்தில் 99,70,000 ரூ. அதிகச் செலவேற்பட்டிருக்கிறது. அப்படியே அந்தவருஷம் உத்தேச நிலவரிமொத்தம் 696,70000 ரூ. யின்மேல் ஏறுப்படி வரி 100-க்கு 15 விதம் போட்டால் அதிகச் செலவுக்குவேண்டிய தொகை கிடைத்திருக்கும். இப்படி வருஷாவருஷம் அவசியம்போல் வேண்டுமளவு ஏறுபடிவரி போட்டு, செலவுக்குப் போதாமையுண்டாகாமல் ஏற்பாடு செய்துகொள்ளலாம். வருஷாந்திர வரவுசெலவுகளின் உத்தேசக் கணக்குப்போடும் போது அதைப்பற்றித் தீர்மானிக்கலாகும்; சட்ட சபையும் அதை நன்கு ஆலோசிக்கநேரிடும். மேலே காட்டியிருக்கும் முறை இப்பொழுதே ஒருவாறு தெரிந்ததுதான். மறு செட்டில்மெண்டில் வரி உயர்த்தும் போது, 100-க்கு இத்தனை விதமென்று உயர்த்துகிறார்கள். ஆனால் அநேக உத்தியோகஸ்தர்கள் பெரிதும் சிரமப்பட்டு விசேஷப் பணச்செலவுடனும் கால தாமதத்துடனும் புதிய விதங்களின்படி கணக்குப்

-58-

போட்டு புதிய செட்டில்மெண்டு ரிஜிஸ்டர்கள் எழுதி முடித்து அச்சுப்போடுகிருர்கள். இவையெல்லாம் செய்யவேண்டுவது அனுவசியம். இப்பொழுது நடக்கும் மறுசெட்டில்மெண்டுகளில், வேண்டியிருந்தாலும் வேண்டாவிட்டாலும் கட்டாயம் அதிகப்பணம் கிடைத்து விடுவதால், மிதமிஞ்சிச் செலவு செய்யத் தூண்டுதல் உண்டாகிறது. நாம் சொல்லும் யோசனைப்படி செய்தால், புதிய செலவுகளைப்பற்றி சட்ட சபையில் நன்ருய் ஆலோசனை செய்தபின்னர், அவசியத்துக்குத் தக்கபடி மாத்திரம் ஏறுபடிவரி போடப் படும். இப்பொழுதிருக்கும் நிலைமையில், முன் செட்டில்மெண்டின் காலாவதி கடந்துவிட்டதென்ற காரணத்தால் மறுசெட்டில் மெண்டுக்ககப்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டொரு ஜில்லாக்கள் மாத்திரமே மாகாண முழுவதுக்கும் ஏற்பட்ட அதிகச் செலவைத் தாங்கும்படி நேரிடுகிறது. நாம் சொன்ன யோசனைப் படியோ வென்ருல். எல்லா ஜில்லாக்களும் அதிகச் சுமையை சமமாகப் பொறுக்கும்படி நேரிடும். இப்பொழுது வருஷாவருஷம் இரண்டு மூன்று லக்ஷம் ரூபாய்ச்செலவுக்கு ஏதுவாயிருக்கும் செட்டில்மெண்டு உத்தியோகக் கூட்டத்தாரையும் வீட்டிற்குப்போகச் சொல்லிவிடலாம்.

மேற்கண்ட யோசனையில், ஏறுபடிவரியால் கிடைப்பதையெல்லாம் மாகாண கவர்ன்மெண்டாரே அடைவதாக வைத்துக்கொண்டிருக்கிருேம். ஆனல், இப்போதைய வழக்கப்படி நிலவரிவசூலில் பாதிக்கு பாத்தியப்பட்ட இந்தியா கவர்ன்மெண்டார், ஏறுபடி வரியிலும் பாதி தரும்படி கேட்கக்கூடும்; அப்படிக்கேட்

கும் பட்சத்தில் நமது மாகாண கவர்ன்மெண்டார் அதற்கு உடன்படக்கூடாது. இப்பொழுது வரும்படி வரியின்மேல் ஏறுபடிவரி போட்டிருப்பதாற்கிடைக்கும் தொகை முழுவதையும் இந்தியா கவர்ன்மெண்டார் மாத்திரமே அடைகிறார்கள். அதுபோல நிலவரியின்மேல் ஏறுபடிவரி போடுவதால் உண்டாகும் லாபம் அனைத்தையும் மாகாண கவர்ன்மெண்டாரே அடையவேண்டுமென்று சொல்லலாம். சாசுவத செட்டில்மெண்டுக்குட்பட்ட வங்காள மாகாணத்தைப் போலல்லாமல், நமது மாகாணம் வருஷத்துக்கு வருஷம் வளர்ந்துகொண்டேவரும் நிலவரியிற் பாதியை இந்தியா கவர்ன்மெண்டுக்குக் கொடுத்துக்கொண்டு வருகிறது. இது போதாதென்று, இதர மாகாணங்களின் குறைவுகளை ஈடுபண்ண இந்த மாகாண மிராசுதார்களிடமிருந்தே இன்னும் வாங்குவது சரியல்ல.

நாம் காட்டியிருக்கும் வழியைக் கைக்கொள்ள முடியுமானால் ஆரம்பத்தில் எல்லா ஜில்லாக்களிலும் நிலவரி நெருக்கும் ரீதியைச் சமப்படுத்தவேண்டும். அங்கங்கே மாற்றுவீதம் கணக்கிடுவதற்கு வெவ்வேறு காலங்களை ஆதாரமாய்க்கொண்டு மாற்றுவீதங்களேற்பட்டிருப்பதால், வரிவீதமும் ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசப்படுகிறது. எல்லா ஜில்லாக்களுக்கும் ஒரே காலத்தை யெடுத்துக்கொண்டு விட்டால், வரிவீதமும் சமப்பட்டுவிடும். புதிய மாற்று வீதப்படி விளைச்சலுக்கு மதிப்பிட்டு, காலவேறுபாடுகளுக்காக வேண்டுமான தள்ளுபடியும் செய்துவிடலாம். சாகுபடிச் செலவுகளையும் கண்டுபிடிக்கவேண்டும். ஆனால், அவைகளைச் சரியாய்க் கணக்கிடுவது துர்லபம். இதற்கொரு

பரிகாரம் செய்யலாம். ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்தந்த (மண்) வகுப்புகளுக்குட்பட்ட நிலங்களின் மொத்த விஸ்தீர்ணத்தை அந்தந்த வகுப்புக்கேற்பட்ட விளைச்சற் பெறுமானத்தைக்கொண்டு பெருக்கி, எல்லா நிலங்களின் மொத்த வரும்படி எவ்வளவென்று கண்டுபிடிக்கலாம். அப்படி எல்லா ஜில்லாக்களுக்கும் சேர்த்துக்கூட்டினுல், இராஜதானி முழுவதும் நிலங்களிலிருந்து கிடைக்கும் மொத்த வருமானம் தெரியும். அந்தத்தொகையானது இராஜதானியின் மொத்த நிலவரி வசூல் தொகையைக் காட்டிலும் — இப்பொழுது அந்தத் தொகை சுமார் 700 லட்சம் ரூ.— எவ்வளவு மடங்கிருக்கிறதென்று பார்க்கவேண்டும். வரிமொத்தமானது வரும்படி மொத்தத்தில் ஐந்தில் ஒன்ருக இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். பிறகு ஒவ்வொரு ஜில்லாவினுடைய நில விளைச்சற் பெறுமானத்தையும் எடுத்து அந்தத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு அந்தந்த ஜில்லாவிலிருந்து கிடைக்க வேண்டிய வரியென்று நிர்மானிக்கலாம். இந்தப் புது ஏற்பாட்டினுல் மாகாண முழுவதின் நிலவரி மொத்தம் மாருது; ஜில்லாக்களில் மாத்திரம் இப்பொழுதைக் காட்டிலும் வரிவசூல் சிலவற்றில் ஏறும். சிலவற்றிற் குறையும். இவ்விதம் செய்வதில் நிலக்காரர்களுக்கும் ஆட்சேபனையிராது. அவசிய மிருந்தால் வெவ்வேறு ஜில்லாக்களில் முன்னும் பின்னுமாக நடந்த செட்டில்மெண்டுகளை யெல்லாம் ரத்து செய்து, எல்லா வற்றிலும் புதிய ஏற்பாட்டை ஒரே காலத்தில் தொடக்கம் செய்ய சட்ட சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்விதம்செய்து விட்டால் மிராசுதார்களுக்கெல்லாம் சாசுவத செட்டில்மெண்டு

கிடைத்தற்குச் சமமாகிவிடும். அவசிய மேற்பட்டால், ஏறுபடிவரி மாத்திரம் கொடுக்கக் கடமையுண்டு. விவசாயி கையில் நிலம் பண்பட்டு விளைச்சலும் பெருக இடமுண்டாகும். ஒவ்வொரு விவசாயிக்கும் காலட்சேபத்திற்கு வேண்டிய அளவு கிடைப்பதற்குப் போதுமான நிலமிருக்கும்படி செய்துவிட்டால், நாடெங்கும் நலமுண்டாய்ச் செழிக்கும். நிலம் மிகவும் சிறு துண்டுகளாக உடைபட்டுப் போகாமல் தடுப்பதற்கு, சட்டமொன்று செய்தால் மாத்திரம் போதாது. பங்கு பிரிப்பதினுலோ, அல்லது பராதீனம் செய்வதினுலோ, நிலத்தை மிகவும் சிறு துண்டுகளாகப் பண்ணுதல் மிகக் கேடான காரியம் என்ற எண்ணம் ஜனங்களுக்குள்ளேயே உண்டாகவேண்டும். இதைத்தவிர, இன்னொரு அவசியமான காரியமிருக்கிறது. ஒரு விவசாயிக்குள்ள நிலமெல்லாம் ஒரே பக்கத்தில் சேர்ந்தாற்போல் இருக்கும்படிக்கும், அதிலேயே ஒரு புறம் அவனும் வசிக்கும்படிக்கும் ஏற்பாடு செய்தால் மிக நலமாயிருக்கும். அவ்விதம் செய்தால் ஒன்றுக்கொன்று தூரத்திலிருக்கிற ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்குப் போவதால் உண்டாகும் வீணை சிரமமும் காலதாமதமுமிராது. ஆனல், இதெல்லாம் நடப்பதற்குமுன், நிலவரியானது நிலைப்பட்டு, சட்டசபையில் ஜனப்பிரதிநிதிகளின் சம்மதத்தாலன்றி வரியை யேற்றமுடியாதென்ற நிச்சயமுண்டாக வேண்டும். மேற்கூறிய விஷயங்கள் யாவராலும் நன்ருய் ஆராய்ந்து பார்க்கப்படும் என்று நம்புகிறேம்.

இதோடு நிலவரி செட்டில்மெண்டைப் பற்றின விசாரம் முடிந்து விட்டது. இனி அடுத்த மூன்று

-60-

அத்தியாயங்களில் வருஷா வருஷம் நடக்கும் ஜமா பந்தி யென்று சொல்லப்படுகிற ஏற்பாட்டைப் பற்றி விவரிப்போம்.

---

## அத்தியாயம் 16.

இதுவரையில் செட்டில்மெண்டைப் பற்றியும் மறு செட்டில்மெண்டைப் பற்றியும் சொன்னோம். இனி, வருஷாவருஷம் நடக்கிற ஜமாபந்தியைப்பற்றியும் அது எவ்விதமாய் நடத்தப்படுகிறதென்பதைப் பற்றியும் சொல்லுவோம். ஒவ்வொரு பட்டாதாரும் கவர்ன்மெண்டுக்குச்செலுத்தவேண்டிய கிஸ்தி எவ்வளவாகிறதென்று தீர்மானிப்பதற்காக ஜமாபந்தி நடக்கிறது. அது ஒவ்வொரு வருஷமும் நடப்பானேன்? ஏனெனில், ஒவ்வொருவனும் தனதிஷ்டம் போல் சாகுபடிக்காகப் புது நிலம் எடுத்துக்கொள்ளலாம். அப்படியே தன்னிடமிருக்கும் நிலத்தை விட்டும் விடலாம் ஒவ்வொரு பட்டாதாரும் வைத்துக்கொண்டிருக்கும் நிலங்களெல்லாம் பதிந்திருக்கும் ரிஜிஸ்டர் ஒன்று கலெக்டரிடமிருக்கிறது. அந்த ரிஜிஸ்டரில் புதிதாய் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களைச் சேர்க்கவேண்டும். விடப்பட்டவைகளை நீக்கவேண்டும். மேற்கண்ட பதிவுகளைக் கலெக்டரே செய்வதில்லை; கிராமத்தில் அவருடைய ஏஜண்டாயிருக்கிற கிராமக்கணக்கன் செய்கிறான். அந்த ரிஜிஸ்டருக்குச் சிட்டா என்று பெயர். அதில் கீழ்க்கண்ட

விவரங்களிருக்கும்:— வயலின் சர்வேநம்பர், சப்டிவிஷன், விஸ்தீர்ணம், தீர்வை. நஞ்சைகள் தனியாகவும் புஞ்சைகள் தனியாகவும் எழுதியிருக்கும். ஒவ்வொரு பட்டாவுக்குமுள்ள பதிவுகளை யெல்லாம் கூட்டினால் அந்தந்தப்பட்டாதாரன் செலுத்தவேண்டிய மொத்தத் தீர்வை எவ்வளவென்று தெரியும். புதிதாய்ச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட நிலங்களை ஜாப்தாவின் கடைசியிற் சேர்த்துப் பதிவுசெய்யப்படும். விட்டுவிடப்பட்ட நிலங்களைக் காட்டுவதற்கு ஷரா கலத்தில் "விட்டு விடப்பட்டது" என்று பதிவுசெய்யப்படும். இவ்விதமாக மேற்கண்ட ரிஜிஸ்டரிலிருந்து நாளது தேதியிலுள்ள நிலைமையைக்கண்டு கொள்ளலாம். ஒவ்வொரு பட்டாதாரும் செலுத்த வேண்டிய தொகை இன்னதென்றும் தெரியும்.

மேற்கண்ட காரியத்தால் தாலூகாவுக்குத் தலைமை ரெவினியூ அதிகாரியான தாசில்தாருக்கு எவ்வளவு வேலை உண்டாகிறதென்று பார்ப்போம். யார் வேண்டுமென்றாலும் இஷ்டமானபடி புது நிலம் எடுத்துக்கொள்ளலாமென்று முன்னேயே சொன்னோம். ஒரே நிலத்தை விரும்பும் பலபேர்களுக்குள் சண்டையுண்டாகாமலிருப்பதற்காகவும், பட்டாவில் பதிந்து கொள்வதற்காகவும், புது நிலம் எடுத்துக்கொள்வதற்குமுன் தாசில்தாருக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படித் தாசில்தாருக்குத் தெரிவிக்கும் மனுவுக்குத் தர்க்காஸ்து மனுவென்று பெயர். தாசில்தார் தன்னிடம் வந்த மனுவைக் கிராமத்தில் பகிரங்கப்படுத்துவதற்காக கிராம மணியகாரனிடம் அனுப்புவார்; ஆட்சேபனைகள் ஏதாவது வருகின்றனவா வென்று பார்ப்

பதற்குச்சிறிதுகாலஞ்சென்றபின் உத்தரவுபோடுவார். அந்த உத்தரவுப்படி கிராமக்கணக்கன் ரிஜிஸ்டரில் வேண்டிய மாறுதல் செய்வான். தாசில்தார் உத்தரவையேற்றுக்கொள்ளாதவர்கள் டிவிஷனல் ஆபீசரிடமும் கலெக்டரிடமும் அப்பீல் செய்துகொள்ளலாம்.

ஆகையால் தர்க்காஸ்து மனு ஒவ்வொன்று நிமித்தமாகவும் தாசில்தாருக்கு வேலையுண்டாகிறது. தர்க்காஸ்து மனுக்கள் அடிக்கடியில்லாமல் எப்பொழுதாவது அரிதாக வருகின்றவைகளா? தண்ணீர்ப்பாய்ச்சலுக்குக் குறைவில்லாத நஞ்சைகளுள்ள நதிக்கரை கிராமங்களில் ஒரு குழி நிலங்கூட காலியாயிராது; அங்கே எவனும் தன்னிடத்திலிலிக்கும் நிலத்திற் சிறிதுபாகத்தைக்கூட விடமாட்டான். புஞ்சைகள் மிகுந்திருக்கும் நீர்வளமில்லாக் கிராமங்களிலோ, சில தாக்குகள் தரிசாகவே கிடக்கின்றன; அந்தத்தரிசிலிருந்து மாற்றிமாற்றிச் சில துண்டுகளைச்சாகுபடி செய்வதும், சில துண்டுகளை விட்டு விடுவதுமாக விருக்கும். ஒரு வருஷத்திற் சாகுபடிசெய்த நிலங்களைப் பிறகு இரண்டுமூன்று வருஷங்களுக்கு விட்டு விடுவதற்குக் காரணமென்னவென்று கேட்கலாம். அவைகள் தொடர்ச்சியாகச் சாகுபடிச்செய்ய யோக்கியமில்லாமல் சிறிதுகாலம் தரிசாகத்தான் கிடக்கவேண்டிய நிலங்களாயிருக்கின்றன வென்பதுதான் காரணம். தீர்வை பளுவாயிருப்பதால், அவைகளை ஒவ்வொரு வருஷமும் சாகுபடி செய்து கிஸ்தி செலுத்த முடியாது. ஏகருக்கு நான்கணு அல்லது ஆறணு வீதம் விதித்திருக்கிற கிஸ்தி தாழ்ந்ததல்லவா வென்று சர்க்கார் தரப்பில் கேள்வி யுண்டாகலாம். வாஸ்தவம். ஆனல்

காலு, ஐந்து மைல் தூரம் சாணி மூட்டைகளைத் தலையிற் சுமந்துகொண்டுபோய் விற்று அற்பக்காசு சம்பாதிப்பவர்களுக்கு அதுகூடப் பெரும் பாரந்தான். நிலங்களைச் சில வருஷம் சாகுபடி செய்து சில வருஷங்களில் விட்டு விடுகிறார்களென்பதிலிருந்து, தீர்வை கடுமைதான் என்று தெளிவாகும். அப்படிப்பட்ட நிலங்களின் தீர்வையைக்குறைப்பது நியாயமென்று கவர்ன்மெண்டார் மனதிற் படுமா? விட்டு விட்டுச் சாகுபடியாகும் நிலங்கள் எவையென்று சிலவருஷங்களில் தர்க்காஸ்து அடைமானங்களையும், விடப்பட்ட நிலங்களையும் காட்டும் ரிகார்டுகளைப்பரிசோதித்துச் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கண்டபடி செய்தால் தாசில்தாரின் வேலை சிறிது குறையும். ஆனால் முழுவதும் நீங்காது. அந்த வேலையை வேறு யாராலாவது செய்விக்க முடியுமா? முடியும். ஒவ்வொரு கிராமத்துக்கும் பஞ்சாயத்து ஒன்று ஏற்பட்டால், சாகுபடிக்காகப் புதுநிலம் அடைமானம் செய்யும் காரியத்தையும், விட்ட நிலங்களை யேற்றுக்கொள்ளும் கடமையையும் அவர்களிடம் ஒப்புவிக்கலாம். அவர்கள் எல்லாருக்கும் தெரிவித்து, ஆட்சேபனைகளையுங் கேட்டு ஒவ்வொரு கேசையும் சீக்கிரம் பைசல் செய்வார்கள். இப்பொழுது ஆகிறது போல் வீண் தாமதமாகாது. பஞ்சாயத்தார்களுடைய உத்தரவு கடைசியான உத்தரவென்றும் வைத்து விட்டால், வியாஜ்ஜியங்களும் குறையும். இந்திய ஜனங்கள் கோர்ட்டு விவகாரம் செய்வதில் அதிகப் பிரீதியுடையவர்களென்ற வசைச் சொல்லை அடிக்கடி கேட்கிறோம். அவர்கள் அப்படியே தான் எப்

பொழுதுமிருந்தார்களா? அப்படி யில்லையாயின், எந்த உத்தரவின்மேரிலும் அப்பீல் செய்யலாமென்று இடம் கொடுத்திருக்கும் கவர்ன்மெண்டார் தானே அந்த விவகாருசியை வளர்க்கிறார்கள்? பஞ்சாயத்தார் தீர்ப்பை மாற்றமுடியாதென்று வைத்துவிட்டால், சில கேசுகளில் அநியாயம் நடக்கக்கூடுமென்று சொல்லலாம். வாஸ்தவம். ஆனால் எது முக்கியம்? எங்கேயாவது தப்பித்தவறி அநியாயம் நடந்து விடாமல் தடுப்பது மாத்திரம் அவசியமா? அல்லது வியாஜ்ஜியங்கள் வளருவதற்கு மூலகாரணமாயிருப்பதை அறவே ஒழிப்பது அவசியமா? குறுகலாக ஒரு விஷயத்தை மாத்திரம் நோக்கத்தில் வைத்துக்கொண்டு அதிலிருந்தே முடிவு செய்வது நமக்கு வழக்கமாயிருக்கிறது. நமது எண்ணத்தைக் கொஞ்சம் அகல வைத்துப் பார்ப்போம். சற்று நீண்ட காலம் எடுத்துப்பார்த்தால், ஒரு கிராமத்துக்குள் எவ்வளவு தான் அநியாயக்கேசுகள் நடந்துவிடும்? பஞ்சாயத்தார் எல்லாரும் கொஞ்சங்கூட யோக்கியதையில்லாக் கடையர்களாயிருந்தாலொழிய, அநியாயம் நடப்பது அபூர்வமாய்த்தானிருக்கும். இப்பொழுதோ உத்தரவு ஒவ்வொன்றின்மேலும் அப்பீல் உண்டென்றிருப்பதால் விவகாரம் வளருகிறது. தவிரவும், டிவிஷனல் ஆபீசரும் கலெக்டரும் தீர்ப்புகள்செய்வதில் பிசகுகள் ஒன்றுமிராமல் எப்பொழுதும் நியாயந்தான் நடக்கிறதா? அப்படி யேதாவது இரண்டொரு நியாயத் தவறுதல்கள் நேரிட்டால்தானென்ன? நிலம் தர்க்காஸ்து கேட்டவனுக்கு, முன்னேயே சொந்தமாயிருந்ததொன்றும் போய்விடாதே? பஞ்சாயத்தார்களிடம் ஒப்புவித்தால் சாகுபடிகளை மறைத்து சர்க்

காருக்குக் கிடைக்கக்கூடிய வரும்படியில் மோசமுண்டாகலாமென்று சொல்லக்கூடும். இப்பொழுது மாத்திரம் அவ்விதம் நடப்பதில்லையா? அவ்விதம் நடக்காமல் புது சாகுபடியை யெல்லாம் வெளிக்குக் கொண்டுவரவேண்டியது இப்பொழுது கிராமக் கணக்கனுடைய கடமை. பஞ்சாயத்தார் கீழும் அவனிராமல் எங்கே போய்விடுவான்? கணக்கன் வேலையை யெடுத்து விடுவதாக ஒருவரும் சொல்லவில்லையே. இந்த விஷயத்தில் அவன் பஞ்சாயத்தாருக்குக் கீழ்ப்பட்டு நடக்கவேண்டுமென்று மாத்திரம் சொல்லுகின்றோம். எப்பொழுதும்போல் சர்க்காருக்குள்ள கடமையை அவன் சரியாய்ச் செய்வானென்பதில் தடையில்லை. சாகுபடியை மறைத்து பஞ்சாயத்தார் மூலமாய் நஷ்டமுண்டானால், அந்த நஷ்டத்தைப் போல் இரண்டு அல்லது மூன்று மடங்கு அவர்களிடமிருந்து வசூல் செய்து தண்டித்து அவ்விதம் நடவாமல் தடுக்கலாம்.

நிலத்தைப் புதிதாய் எடுத்துக்கொள்வதினாலோ அல்லது விட்டுவிட்டதினாலோ சிட்டாவில் செய்ய வேண்டிய மாறுதல்களைப்பற்றிச் சொன்னோம். நிலங்கள் சாஸனமானால், சாஸனம் கொடுத்தவன், சாஸனம் வாங்கினவன், இவர்களுடைய ரிஜிஸ்டரிலும் அந்த மாறுதலைப்பற்றிப் பதியவேண்டும். இது சம்பந்தமாய் நடத்தவேண்டிய நடவடிக்கை முதலில் மிகச் சுற்றாயிருந்தது. இருதிறத்தார்களும் தாசில்தார் முன்பு ஆஜராகி, அவருக்குச் சாவகாசமும் சௌகரியமும் வந்து விசாரிக்கிற வரையில் காத்திருக்கவேண்டியிருந்தது. அவரோ பல வேலையுள்ளவர். வந்தவுட

-63-

னேயே ஒவ்வொருவரையும் அவர்விசாரிக்க முடியாது. இதற்காகச் சாஸனம் ரிஜிஸ்டரானதாயிருந்தால் சப் ரிஜிஸ்டிரார்முன் ஆஜராஞற்போதுமென்று கொஞ்சம் சௌகரியம் செய்யப்பட்டது. சப்ரிஜிஸ்டிராராபீசில் அநேகமாய்ப் பத்திரம் எழுதிக்கொடுத்தவன் மாத் திரந்தான் ஆஜராகும் வழக்கமாயிருப்பதால், அதனு லும் சரிப்படவில்லை. சுற்றுப்பிரயாணத்தில் ரெவினியூ இன்ஸ்பெக்டர் கிராமத்திற்கு வருங்காலத்தில் இரு திறத்தார்களும் அவர் முன் ஆஜராகிப்பட்டாமாறு தல் செய்து கொள்ளலாமென்று அடுத்தபடி உபாய மேற்படுத்தினுர்கள். ரெவினியூ இன்ஸ்பெக்டர் வரும் சமயம் முன்னேயே தெரியக்கூடியதல்ல; அவர் வருங் கால் கிரயம் வாங்கினவர், அல்லது கொடுத்தவர், கிரா மத்தைவிட்டு வேறிடம் போயிருக்கலாம். இந்தக் காரணங்களையெல்லாம் உத்தேசித்து ஐக்கிய நாணயச் சங்கங்களிருக்கும் கிராமங்களில் இந்த வேலையைப் பஞ்சாயத்தாரிடம் ஒப்புவிக்கலாமென்று சட்ட சபை யில் ஓர் தீர்மானம் கொண்டுவந்தேன். அது பயன் படவில்லையென்பது சொல்லாமலே தெரிந்துக்கொள்ள லாம். ஆனுல், நிலம் விற்றவனே அல்லது வாங்கின வனே தாசில்தாருக்குப் போஸ்டு மூலமாய்த் தெரி விக்கலாமென்று உத்தரவு கொடுத்திருக்கிருர்கள். இது கட்சிக்காரர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் பெரும் சாதகந்தான். தாசில்தார் சம்பந்தப்பட்ட மட்டில் என்ன பயனுண்டாயிற்று? இருதிறத்தார்களும் ஆஜ ரானபோது அவர்கள் சம்மதத்தைக் கேட்டுக் கொண்டு உடனே அவர் உத்தரவு பண்ண முடிந்தது. புதுஉத்தரவுப்படி, தன்னிடம் வந்தமனுவைத் தாசில் தார் ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பி, அவர்

மனுதாரருக்கு எதிராயுள்ளவருடைய சம்மதத்தை வாங்கித் திருப்பியனுப்பினபின், தாசில்தார் உத்தரவு போடவேண்டி யிருக்கிறது: அதாவது, அவர் மனுவை இரண்டுதரம் கவனிக்கவேண்டி யிருக்கிறது. இந்த வேலை அவருக்கு மிகவும் பாரமானதா யிருக்கிறது. இதற்குப் பரிகாரம் தேடக் காலம் வரவில்லையா? ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்தொன்று ஏற்பட்டால், பட்டா மாறுதலை அவர்கள் கவனிக்கும்படி விட்டுவிடலாம். அவர்களுக்கு, சம்பந்தப்பட்ட பேர்வழிகளை நேரே தெரியும்; இன்னாரின்னாரென்று ரூபிப்பதற்கு ருஜூத்தேடவேண்டாம். சாஸனங்களிலேயே நிலங்களின் சர்வே நம்பர்களும் சப்டிவிஷன் லெட்டர்களும் கண்டிருக்கும்; அந்த விவரங்களில்லாவிட்டால் சப் ரிஜிஸ்டிரார் ரிஜிஸ்டர் செய்திருக்க மாட்டார். கிராமக் கணக்கனது உதவியையும் வேண்டும்போது பெற்றுக்கொள்ளலாம்.

இப்பொழுது பஞ்சாயத்தார்களிடம் ஒப்புவிக்கலாமென்று நாம் சொல்லுங்காரியமெல்லாம், முன்னே பஞ்சாயத்தார்கள் செய்துவந்த காரியந்தான். கவர்ன்மெண்டார் யோசனையில்லாமல் அந்தக்காரியத்தையெல்லாம் தம் தலையிற் போட்டுக்கொண்டார்கள். கடைசியில் காரியம் சரியாக ஆகவில்லை. தாசில்தார் செய்யவேண்டிய வேலை மிகுந்துபோய், அநேக தாலூகாக்களை ஒவ்வொன்றை யிரண்டு தாலூக்காக்களாக உடைக்கும்படி நேரிட்டது. வேலையும் ஊழலாய்த்தான் நடக்கிறது. இந்த நிலைமையில் கிராமக்கணக்கன் வைத்தது சட்டம். தான் பண்ணுவதைக்கண்டு பிடிப்பது துர்லபம் என்று எண்ணி, பொய்க்கற்பனை

களும் செய்கிறன். அவன் ஸ்தலத்திலுள்ள மனிதனயிருப்பதால், கடைசியில் அவன் வார்த்தை தான் செல்லுகிறது. இதற்கெல்லாம் பரிகாரம் முன்னிருந்த நிலைமையை அனுசரிப்பது தான். எந்த வேலையை யார் நன்ருய்ச் செய்வார்களோ அவர்களிடம் அதை ஒப்புவிக்கவேண்டும். அப்படிச்செய்து விட்டால் கிராமத்துக்குச் சுய ஆட்சி கிடைத்தது போலாகும்

இதனல் இன்னெரு நன்மையுண்டாகும். இப்பொழுது வார்சுக் கிரமத்தினலோ, கிரயம் தான முதலானவைகளாலோ, நிலம் ஒருகைவிட்டு இன்னெரு கைக்கு மாறினல் அப்பொழுது அவைகளைப் பதிய வைப்பதில்லை. ஆகையால், கிராமக்கணக்கன் வைத்திருக்கும் ரிஜிஸ்டரானது நாளது தேதியில் உள்ள நிலைமையைக் காட்டுவதில்லை. அதில் ஒருவன் பெயருக்குச் சொந்தமாய்க் காட்டியிருக்கும் நிலம் இன்னெருவன் அனுபவத்திலிருக்கும். இவ்விதம் குழப்பம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. பிறகு புது செட்டில்மெண்டுபண்ண ஆரம்பிக்கச்சொற்ப காலத்துக்கு முன், அதற்கென்று புது உத்தியோகஸ்தர்கள் நியமித்து நில ரிஜிஸ்டர்களைத் திருத்துகிருர்கள். முதலிற் கையால் கிள்ளியெறியக் கூடியதை பிற்பாடு கோடாலி கொண்டு வெட்டவேண்டியிருக்கிறது. பஞ்சாயத்தார்களுக்கோவென்ருல் நிலம் ஒருகைவிட்டு மாறினல் உடனே தெரியும்; அப்பொழுதே ரிஜிஸ்டரிலும் பதியவைக்க ஏற்பாடு செய்வார்கள். இப்பொழுது ஜனங்கள் ஒத்தாசை செய்யாமலிருக்கிருர்களென்று சொல்வது சரியன்று. தம் சொந்தவேலையை மாத்திரம் கவனித்துக்கொண்டு இந்தக் காரியத்தில் அசட்

டையாயிருக்கிறார்கள். இந்தக் காரியத்திற்கென்று தனியாக உத்தியோகஸ்தர்கள் நியமிப்பதாலுண்டாகும் செலவை ஜனங்கள் தானே பொறுக்கவேண்டியிருக்கிறது? இப்பொழுதிருக்கும் குறைகளை யெல்லாம் நீக்க ஜனங்கள் முயற்சிசெய்ய வேண்டியது அவசியமல்லவா?

---

## அத்தியாயம் 17.

கடைசி அத்தியாயத்தில், புது நிலத்தைச்சேர்த்துக் கொள்ளுவதாலும், இருக்கும் நிலத்தைவிட்டு விடுவதாலும், ஒருவன் மற்றொருவனுக்குப் பராதீனம் செய்வதாலும், ஒரு பட்டாதாரன் வைத்திருக்கும் நிலஜர்ப்தாவில் மாறுதல்களுண்டாகலாமென்றுசொன்னோம். இந்த மாறுதல்களை யெல்லாம் கிராமக்கணக்கன பட்டாதார் ரிஜிஸ்டரில பதிவு செய்து, அந்தந்த வருஷத்துக்கு ஒவ்வொரு பட்டாதாரனும் செலுத்த வேண்டிய தீர்வை எவ்வளவென்று பார்க்கவேண்டும். வருஷாவருஷம் ஜமாபந்தியில் செய்யும் காரியம் இதுவே. நிலப்பாய்ச்சலுக்காகத் தண்ணீர் எடுத்துக்கொள்வதாலும நிலக்காரன் செலுத்தவேண்டிய தீர்வை ஏறவும் இறங்கவுங்கூடும். இதைப்பற்றி இப்பொழுது கவனிப்போம்.

முதலில் நஞ்சை நிலங்களை யெடுத்துக்கொள்வோம். செட்டில்மெண்டு செய்தபோது, ஒரே வருஷத்தில் இரண்டுதரம் மகசூல் உண்டாகும் நிலங்களை

இருபோக நிலங்களாகப் பதிவு செய்தார்கள். ஒரு போகமாக வைத்துக்கொண்டு கணக்கிட்டு, அந்தத் தீர்வையைப்போல் அரை மடங்கு சேர்த்து இருபோகத் தீர்வை விதிக்கப்படும். ஏகருக்கு 9 ரூபாய்வீதம் கிஸ்தியுள்ள ஒரு வயலின் விஸ்தீர்ணம் 75 செண்டென்று வைத்துக்கொள்வோம். அதற்குத் தீர்வை ரூ. 6—12—0; அதிற்பாதி ரூ. 3—6—0 சேர்த்து இருபோகத்தீர்வை ரூ. 10—2—0 என்று விதிக்கப்படும். இந்தப்படி செட்டில்மெண்டு ரிஜிஸ்டரில் பதிந்திருக்கும். பாய்ச்சலுக்கு ஜலம் கிடைக்காததால் இரண்டாவதுபோகம் விளையாவிட்டாலொழிய, அந்தவீதம்வசூலிக்கப்படும். மற்ற நிலங்களையெல்லாம் ஒருபோகநிலங்களாகப் பதிந்திருக்கும். அந்நிலங்களில் இரண்டாந்தரம் சாகுபடியானால், அந்தக் கணக்குக் கொண்டுவந்து ஜமாபந்தி காலத்தில் ஒருபோகத் தீர்வையிற் பாதிசேர்த்து வசூலிக்கப்படும். சௌகரியம்போல் இருபோக சாகுபடிசெய்துகொண்டு தீர்வை ஜாஸ்தியைக்கொடுக்க இஷ்டமுள்ளவர்கள், அந்தப்படி கலெக்டரிடம் ஏற்பாடு செய்துகொள்ளலாம். இதற்கு "ராஜியின்மேல் ஒப்பந்தம்" என்று பெயர். பாய்ச்சலுக்கு ஜலம் கிடைப்பதிற் சந்தேகமேதாவது இருந்தால் தான் அவ்விதம் ராஜி செய்து கொள்ளலாம். ஒருபோகத் தீர்வையில் மூன்றிலொன்றோ, நான்கிலொன்றோ, ஐந்திலொன்றோ, எட்டிலொன்றோ சேர்த்து மேற்கண்டபடி ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறதுண்டு. ஒரு தாக்கில் பாய்ச்சலுக்காகப் பல கிணறுகளேற்பட்டிருந்தால், அந்த இடம் போதுமான ஜலம் கிடைக்காத விடமென்று கருதப்படும்.

இரண்டாவது புஞ்சைகளைப்பற்றி. புஞ்சைகளின் பாய்ச்சலுக்கு ஜலம் கொடுக்கத் தாம் கட்டுப்பட்டவரில்லை யென்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கின்றனர். ஆகையால் புஞ்சைகளுக்கு மழைதான் கதி. கிணறு வெட்டிக்கொண்டு அதிலிருந்து ஜலம் பாய்ச்சிக்கொண்டு சாகுபடியாகும் புஞ்சைக்கு அதிகப்படித் தீர்வை செலுத்த வேண்டியதில்லை. ஒரு காலத்தில் சர்க்காருக்குச் சொந்தமான நீர்க்கால்களுக்கருகாமையில் கிணறுகள் வெட்டக்கூடாதென்று தடையிருந்தது. இப்பொழுது சற்றுத் தாராளயோசனை அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. சர்க்காருக்குச் சொந்தமான நீர்க்கால்களிலிருந்து ஜலமெடுத்துக்கொண்டால் அதிகத்தீர்வை செலுத்தவேண்டும். எந்தெந்த சாகுபடிக்கு எவ்வளவு ஜலம் வேண்டியிருக்குமென்று வேற்றுமை யேற்படுத்தியிருக்கிறார்கள். நெல், வாழை, கரும்பு, மஞ்சள், கருணைக்கிழங்கு முதலானவைகள் நஞ்சை சாகுபடியைச் சேர்ந்தவை. நீர் நிறைந்தவிடத்தில் தான் நெல் விளையுமாதலால், நெல் நஞ்சைத்தானியந்தான். மேற்சொன்னவைகளில் மற்றவைகளையும் அப்படியே சொல்லலாமா? ஒருநாளும் சொல்லமுடியாது. அவைகளுக்கு ஜலத்தை முதலிற் கொண்டுபோய்ப் பாய்ச்சி, நிலம்நனைந்தபின், மேற்பட்டிருக்கும் ஜலத்தை வடித்துவிடுவது வழக்கம். ஆற்றுப்படுகை, வாய்க்காற்கரை, இதுபோன்ற விடங்களில் நீர்மிகுதியால் வாழை கெட்டுப்போகிறதென்று தஞ்சாவூர் மிராசுதார்கள் வெகுநாளாய்ச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். வாழைகள் நிற்கும் கரைக்கு இருபுறமும் நீண்ட கிடங்குகள் வெட்டும் வழக்கமிருக்கிறது, வாஸ்தவந்தான். ஆனால், ஆற்று

-66-

நீர்மட்டத்துக்கு மேல் நிலத்தை உயர்த்துவதற்காகவும், கிடங்குகளில் ஜலம்வடிந்தபின வண்டல் தங்கி வாழைக்கு எருவாக உபயோகப்படுமென்றும், அவ்விதம் செய்கிறார்களே யொழிய வேறில்லை தஞ்சாவூர் ஜில்லா சம்பந்தப்பட்டமட்டில், கிடங்குகள் வெட்டுவது நீர்ப்பாய்ச்சலுக்காக வன்று. இதர ஜில்லாக்களில் நீர்ப்பாய்ச்சலிருக்கும் பட்சத்தில், அங்கே சாகுபடியாகும் வாழை வேறுதினுசாகவோ, அல்லது சாகுபடி முறை வேறாகவோ, இருக்கவேண்டும். தஞ்சாவூர் மிராசுதார்கள் தம் ஜில்லா வழக்கத்தைப் பற்றிக் கவர்ன்மெண்டாருக்கு எவ்வளவு சொல்லியும் பயன் படவில்லை. தண்ணீர் ஓடிவந்தோ, அல்லது இறைக்கப்பட்டோ, வாழைக்குப் பாய்வதில்லை யாதலால், வாழைக்கு நீர்ப்பாய்ச்சல் உண்டென்று சொல்வது சரியல்லவென்று சொல்லும் கட்சியைக் கவர்ன்மெண்டார் கேட்பதில்லை. நிலத்தில் ஈரமிருக்கிறதாவென்றும், வேண்டிய அளவு ஜலம் கிடைக்கிறதாவென்றும் மாத்திரம்தான் கவனிப்பார்களாம். இதைத் தீர்மானிக்கச் சட்டப்படி அதிகாரமுள்ளவர் கலெக்டர். அவர் தன் அதிகாரத்தைத் தாசில்தாருக்கு ஒப்புவித்து விட்டார். அந்த அதிகாரத்தை உண்மையில் செலுத்துபவன் கிராமக்கணக்கன். அவன் வார்த்தையைத்தான் மேலதிகாரிகள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். மேற்கண்டபடி ஈரமிருந்தால் போதுமென்று சொல்வது நியாயமானால், புஞ்சை சாகுபடிகளுக்கும் அப்படியே சொல்லிவிடலாமே? ஆனால் கவர்ன்மெண்டார் தம்முடைய உத்தரவில்லாமல் அவ்விதம் புஞ்சைகளையும் சேர்க்கக்கூடாதென்று கட்டளை யிட்டிருக்கிறார்கள்.

இரண்டுபோகம் நெல் விளையக்கூடும்படி அவ்வளவு காலமும நிலத்தில் நிற்கும் நஞ்சைப் பயிர்களுக்கு இருபோகத்துக்குள்ள தீர்வைவிதிக்கிருர்கள். சென்ற அநேக வருஷங்களாகத் தண்ணீர்த் தீர்வையின்விதம் முதற் பலனுக்கு ஏகருக்கு ரூ. 4-ம், இரண்டாம் பலனுக்கு ரூ 2-ம், ஆக ரூ 6. இரண்டுதரம் நெல் சாகுபடிக்கு எவ்வளவு ஜலம் வேண்டுமோ அவ்வளவு ஜலமே வாழை கரும்பு முதலியவைகளுக்கு வேண்டியிருக்கிறதென்று கவர்ன்மெண்டார் சுலபமாய்க் கண்டுபிடிக்கலாம். அப்படி இன்னும் செய்யவில்லை. தண்ணீர்த் தீர்வை விதிக்கவேண்டிய விதம் எவ்வளவென்று தீர்மானிப்பது அவர்கள் கையிலிருக்கிறது. ஆகையால் நிர்வாக அதிகாரிகள் தமதிஷ்டம்போலவே நடத்த முடிகிறது.

இதரப் பயிர்களைப் புஞ்சைப் பயிர்களாகக் கருதுகிருர்கள். அவைகளின் பாய்ச்சலுக்கு ஜலம் தொடர்ச்சியாகவா, அல்லது விட்டுவிட்டா, எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று பார்க்கவேண்டும். இது, முன்னே, கிராமக்கணக்கன் பார்த்துச் செய்யவேண்டிய காரியமாயிருந்தது. ஆனல், இப்பொழுது, எந்தெந்த ஜில்லாக்களில் அல்லது தாலூக்காக்களில் எந்தப்பயிர்களுக்கு ஜலம் தொடர்ச்சியாகப் பாய்ச்சப் படுகிறதென்றும், எவைகளுக்கு விட்டுவிட்டுப் பாய்ச்சப்படுகிறதென்றும் கவர்ன்மெண்டாரே தீர்மானித்திருக்கிருர்கள். தொடர்ச்சியாய்ப் பாய்ச்சுவதற்கு ஏகருக்கு ரூ. 3 வீதமும், விட்டுவிட்டுப் பாய்ச்சுவதற்கு ரூ 2 வீதமும், தீர்வை யேற்பட்டிருக்கிறது. ஒரே வருஷத்தில் இரண்டாவது புஞ்சைப் பலனுண்

டானால் இன்னும் தாழ்ந்த விதங்கள்படி தீர்வையேற்
பட்டிருக்கிறது.

சுமார் 10வருஷங்களுக்கு முன் தண்ணீர்த்தீர்வை
விதங்களைப்பற்றி ஒரு திருத்தம் ஏற்பட்டது. அது
வரையில் எல்லா நிலங்களுக்கும் ஒரேவிதமிருந்தது.
அது கொழுத்த நிலங்களுக்கு லகுவாயும் மட்டநிலங்
களுக்குக் கடுமையாயுமிருந்தது. புது முறைப்படி,
புஞ்சைத் தீர்வைக்கும் நஞ்சையாயிருந்தால் அப்
பொழுது அதற்கு விதித்திருக்கக்கூடிய தீர்வைக்கும்
வித்தியாசம் எவ்வளவோ அதுதான் தண்ணீர்த்தீர்
வைவிதம் என்றேற்பட்டது. உதாரணமாக, ஏகரு
க்கு ரூ. 4 விதம் தீர்வையுள்ளதும் வண்டற்களியில்
மூன்றாந்தினுசை, [1(3)], சேர்ந்ததுமான ஒருபுஞ்சை
நிலத்தை யெடுத்துக்கொள்வோம். அதன் பாய்ச்ச,
லுக்காகத் தண்ணீர்த்தீர்வைவிதம் கண்டு பிடிக்கக்
கிராமக்கணக்கன் செய்யவேண்டியதாவது, வண்டற்
களியில்மூன்றாந்தினுசு, [1 (3)], மண்ணுக்கு ஏற்பட்ட
நஞ்சைத்தீர்வை என்னவென்று பார்க்கவேண்டும்.
அது ஏகருக்கு ரூ. 9. என்று வைத்துக்கொள்வோம்.
அப்பொழுது விதிக்கவேண்டிய தண்ணீர்த் தீர்வை
ரூ. 9இல் ரூ 4போக பாக்கி ரூ. 5. இந்த ஏற்பாடு ஸ்தி
ரப்பட்டு எல்லா ஜில்லாக்களிலும் பரவி அனுஷ்டா
னத்திலிருக்கிறதா வென்று தெரியவில்லை. ஆனால்
அது அனுபோகத்திலிருக்கு மிடங்களில், கிராமக்
கணக்கன் கைக்குள் எல்லா மிராசுதார்களும் அகப்
பட்டுக்கொண்டிருக்கிறார்களென்பது நிச்சயம். முன்
னே, சில்லியான விதங்களிருந்தபோது, தம் வயலின்
விஸ்தீர்ணத்தைக் கொண்டு பெருக்கி கர்ணன் கொ

டுத்த கணக்குச் சரிதானுவென்று பார்க்கமுடிந்தது. இப்பொழுது அவனுடைய ஒத்தாசையில்லாமல் எந்த நிலம் எந்த மண் வகுப்பைச் சேர்ந்ததென்று ஒருவரும் தெரிந்துக்கொள்ள முடியாது. ஜமாபந்தி காலத்தில் தாலூக்கா குமாஸ்தாக்கள் எல்லாவற்றையும் அஜிமாஷ் செய்வார்களென்று நம்புவதிற் பிரயோசனமில்லை. அவர்களுக்குள்ள அவசரத்தில் ஏதாவது அங்குமிங்கும் இரண்டொரு பதிவுகளைத்தான் பரிசோதிக்க முடியும். இந்த ஸ்திதியில் அற்ப சம்பளக்காரனை மேற்சொன்ன அதிகாரி தனக்குச் சமயம்வாய்த்ததென்றெண்ணி, தனதிஷ்டப்போல் காரியத்தை நடத்துகிறுன். இப்படி அநீதிக்கு இடங்கொடுக்கும் ஏற்பாட்டைப்பற்றி நாம் என்னென்று சொல்வது?

இந்தப் பிரகிருதத்தில், தண்ணீர்த்தீர்வை மூலமாகச் சர்க்கார் அடையும் தீர்வைக்கு அளவு மட்டுயாதொன்றுங் கிடையாதாவென்ற கேள்வி உண்டாகிறது. பாய்ச்சல்வரிச் சட்டத்தின் முன்னுரையில், கவர்ன்மெண்டார் ஆறு, ஏரி முதலியவைகளில் நீர்ப்பாசன சௌகரியத்தின் பொருட்டு பெரும் செலவு பண்ணி அநேக வேலைகளும் மராமத்துக்களும் செய்திருக்கிறுர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளிலிருந்து கவர்ன்மெண்டாருக்குத் தகுந்த வரும்படி கிடைக்கவேண்டியது நியாயந்தான். முன்னே கவர்ன்மெண்டார் 100-க்கு ரூ. 3½-வீதம் வட்டிக்குக் கடன் வாங்குவது வழக்கம். இப்பொழுது வட்டி சிறிது ஜாஸ்தியாயிருக்கிறது. சாதாரணமாய்க் கடனுக்கு என்னவீதம் வட்டியுண்டோ அதற்கு மேற்படாமல் கவர்ன்மெண்டார் நீர்ப்பாய்ச்சல் மராமத்

துக்களுக்காகச் செலவிட்டிருக்கும் தொகைகளின் மீது வரும்படி கிடைக்கும்படி தண்ணீர்த் தீர்வை விதிப்பது நியாயம். நீர்ப்பாய்ச்சல்கள் நிமித்தமாய் சர்க்கார் இதுவரையில் செலவிட்டிருக்கும் முதல் தொகை எவ்வளவென்றும், தண்ணீர்த் தீர்வையால் கிடைக்கும் மொத்தவரும்படி எவ்வளவென்றும் தெரியவில்லை. ஆனல் வரும்படி மிகவும் ஜாஸ்தியாக இருப்பதாகத் தான் தோன்றுகிறது. நீர்ப்பாய்ச்சலாதாரங்கள் எல்லாவற்றையும் கவர்ன்மெண்டார் ஏகதேசத்தில் தம் வசத்திலேயே வைத்துக்கொண்டு அதனு லுண்டாகும் எல்லா லாபத்தையும் அடைகின்றனர். உப்புப் பண்ணுவதற்கு ஏகதேச பாத்தியம் வைத்துக்கொண்டிருக்கும் கவர்ன்மெண்டார் அதில் இவ்வளவு வீதந்தான் லாபமடையலாம் என்று ஒருவரை வைத்துக்கொண்டிருப்பதுபோல, தண்ணீர்த் தீர்வை விஷயத்திலும் ஒரு எல்லை யிருக்கவேண்டும்.

இனிமேல், புஞ்சைகளுக்கு ஜலம் உபயோகப்பட்டிருக்கிறதா வென்பதைப் பற்றியும், ஒருபோகமாய்ப் பதிவாயிருக்கிற நிலங்களில் இரண்டாவது போகம் சாகுபடியாயிற்ரு வென்பதைப்பற்றியும் கவனித்துக் கணக்குக் கொண்டுவரும் வேலையைச் செய்யத் தகுதியுள்ளவன் கணக்கன்தானு வென்பதைப்பற்றி யோசிப்போம். இப்பொழுது அந்தக்காரியம் செய்யு அவனைத்தவிர வேறொருவருமில்லை. அவன் மிராசுதார்களோடு சேர்ந்துகொண்டு சர்க்காருக்கு நஷ்டமுண்டாக்கக்கூடும். அந்த ஒரு தீங்கு மாத்திரமல்ல. ஒரு காரியத்தில் ஆரம்பித்த மோசக்கருத்து, அப்படியே நில்லாது, இதர விஷயங்களிலும் இதர மனிதர்

களிடத்திலும் பரவிப் போய் அதிகமாவதால், புதுக் கோர்ட்டுகளும் ஏற்படுத்தவேண்டி யிருக்கும் இவ் விதமாவதைத் தடுப்பதற்கு ஒரு வழியுமில்லை மேற் பார்வை வேலையை நன்ருய்ச் செய்வதற்கு இப்பொழு திருக்கிற ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் போதாது. அவர்களின் சங்கியையை அதிகப்படுத்தலாமோ வென்ருல், அப்படிச் செய்யுமுன் எல்லாருக்கும் தட் டாமல் பிரமோஷன் கிடைக்கும்படி புதிதாய் அநேக தாலூக்கா ஹெட் அக்கவுண்ட்டெண்டு வேலைகளும் உண்டுபண்ண வேண்டும். இது செய்யக்கூடிய காரிய மல்ல திர்வை வசூலுக்கும் கெடுதலில்லாமல், ஜனங் களுடைய நன்மையும் நல்வாழ்க்கையும் பெருகவேண் டுமென்று கவர்ன்மெண்டாருக் கெண்ணமிருந்தால், வேறு என்னதான் செய்யலாம்? இப்பொழுதிருக்கும் சிடுக்குகள் மிகுந்த முறையை மாற்றி, அற்பசம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தனிடம் அதிக அதிகாரம் வைக்காமல் எடுத்துவிட வேண்டியது கவர்ன்மெண் டார் செய்யவேண்டிய முதற்காரியம்.

நிலத்திலிருந்து கிடைக்கும் வரும்படியின்மேல் வரிபோட்டுத் தண்ணீர்த் திர்வையும் விதிப்பதற்குப் பதிலாக, நிலத்தின் பெறுமானத்தை, அதாவது, நிலத் தைவிற்ருல் என்னவிலை கிடைக்குமோ அதை ஆதார மாய்க்கொண்டு திர்வைகள் விதிக்கலாமா வென்பது பொதுஜனங்கள் யோசிக்கத்தகுந்த விஷயம். நிலப் பெறுமானத்தில் 100-க்கு 1-வீதம் திர்வை விதிப்ப தாக வைத்துக்கொண்டால், ஏகர் 1-க்கு ரூ 1000 பெறக்கூடிய நிலத்திற்கு கிஸ்தி ரூ. 10 ஆகும். இந்த யோசனைப்படி தண்ணீர்த்திர்வை எப்படி விதிக்கலா

மென்று பார்ப்போம். இந்த ஜில்லாவில் சாதாரண மாக ஒருபோக நஞ்சை, ஏகருக்குச் சுமார் ரூ. 900 முதல் ரூ. 1050 வரையில் விலைக்குப்போகிறது. புது யோசனைப்படி, தீர்வை ஏகருக்கு ரூ 9 முதல் ரூ 10 வரையிலாகும். இருபோக நஞ்சை ஏகர் 1-க்கு ரூ 1500 பெறுவதால், அதன் தீர்வை ஏகருக்கு ரூ. 15 ஆகும். இப்பொழுதிருக்கிற முறைப்படி இரண்டாவதுபோகத்துக்குப் பசலி ஜாஸ்தி போடுவதென்றால், ரூ. 9 + ரூ. $4\frac{1}{2}$ ஆக ரூ. $13\frac{1}{2}$, அல்லது ரூ $10\frac{1}{2}+5\frac{1}{4}$ ஆக ரூ. $15\frac{3}{4}$ ஆகும் இதில் அதிகவித்தியாசமில்லை. வாழை சாகுபடியாகும் புஞ்சைகள் ஏகருக்கு ரூ. 1000 விதம் விலையாகின்றன. ஆகையால், அவைகளுக்குத் தீர்வை ஏகருக்கு 10 ரூபாயாகும். இப்பொழுது அவைகளுக் கேற்பட்ட கிஸ்தியும் கிட்டத்தட்ட அவ்வளவுதான். புஞ்சைத் தீர்வை ரூ 5-ம் தண்ணீர்த் தீர்வை ரூ. 6-ம் ஆகிறது. கம்பு, சோளம் விளையும்புஞ்சைகள் ஏகருக்கு ரூ. 500விதம் விற்பதால், அவைகளுக்கு ரூ 5 தீர்வை யேற்படும் அவைகளுக்கு இப்பொழுதுள்ள கிஸ்தி, புஞ்சைத் தீர்வை ரூ 3-ம், ஜலம் இறைத்துக்கொள்வதற்கு ரூ. 2—4—0ம் ஆக ரூ. 5—4—0. இதேமாதிரி அங்கங்கே யிருக்கிற நிலங்களுக்கு ஒத்துப்பார்த்துக் கொள்ளலாம். தஞ்சாவூர் ஜில்லா செட்டில்மெண்டில் திருவையாற்றுக்குச் சமீபத்திலுள்ள செழிப்பான நெல்வயல்களுக்கு, வேண்டுமென்றே, ஏகருக்கு ரூ 14 விதம் தீர்வை விதிக்கப்பட்டது. இந்த நிலங்களில் இருபோக சாகுபடிக்குத் தீர்வை ரூ. 21. அந்த நிலங்கள் ஏகருக்கு ரூ. 2000 முதல் ரூ. 2500 வரையில் இப்பொழுது விற்பதால், நிலப்பெறுமானத்தின் மேல்

அவைகளுக்குத் தீர்வை போட்டாலும், ஏகருக்கு ரூ. 2) முதல் ரூ 25 வரையிலாகும்.

மேற்கண்ட யோசனைப்படி நிலத்தில் செலவு செய்து அதன் பெறுமானத்தை ஓங்கச்செய்தால், அந்த விருத்திக்கும் வரி விதிக்கப்படுமோவென்று சந்தேகப்படவேண்டாம். ஒரு வயலில் கிணறு நிலக்காரன் வெட்டிக்கொண்டால், அந்த நிலத்துக்குத் தீர்வைபோடுவதில் கிணற்றையும் சேர்த்து விலை போடாமல், அக்கம்பக்கத்து நிலத்துக்குள்ள விலை மாத்திரந்தான் ஆதாரமாய்க்கொள்ளப்படும். வரி போடாமல் விலக்கவேண்டுமென்றால், மேற்சொன்ன விருத்தியானது அற்பமாயிராமல் விலை மதிப்புக் ககப்படக்கூடியதா யிருக்கவேண்டும். உதாரணமாக, நல்ல எருப்போட்டு வயலைக் கொழுக்கச்செய்வது ஸ்திரமான விருத்தியன்றாதலால், அது மேற்சொன்ன மாதிரியான விருத்தியாகமாட்டாது.

நில வரும்படியின்மீது தீர்வை விதிப்பதிலுள்ள கஷ்டங்கள் நிலவிலையின்மீது விதித்தாலு மிருக்குமென்று சொல்லக்கூடும்; அது சரியன்று. நிலவரும்படிமீது வரிபோடுவதற்கு நிலங்களின் விளைவும், விளைவின் பெறுமானமும், சாகுபடிச் செலவுகளும் கண்டுபிடிக்கவேண்டி யிருக்கிறது. இவைகள் செய்வதில் சில தள்ளுபடிகள் பண்ணவேண்டியிருக்கிறது. இவை ஒவ்வொன்று செய்வதிலும் ஆட்சேபணைக்கிடமான பல அம்சங்களிருக்கின்றன. நில விலையைத் தீர்மானம் பண்ணுவதில் இன்னும் சற்றுக் கெட்டியான ஆதாரங்களை யனுசரிக்கலாம். இந்த தேசத்தில் ரிஜிஸ்டரான பத்திரங்கள் மூலமாய்த்தான் நிலத்தைக்கிரயம்

70-

செய்யலாம். ஆகையால், ரிஜிஸ்டிரேஷன் ஆபீஸ்களில் விலைகளைப்பற்றிச் சரியான விவரங்கள் கிடைக்கும். நில வகுப்புக்களை இப்பொழுதிருக்கிறபடியே வைத்துக் கொள்ளலாம். ஒருவகை மண்ணுலாகிய நிலங்களெல்லாம் கிட்டத்தட்ட ஒரே வகுப்பிலிருப்பதால், ஒரு வயலின் பெறுமானங்கண்டு பிடித்து அந்தப்படியே அந்தத்தாக்கு முழுவதற்கும் வைத்துக்கொள்ளலாம். இங்குமங்கும் ஏற்றத்தாழ்வுகளிருக்கக்கூடும். சில சமயங்களில் ஒரு மிராசுதார் தன் நிலங்கள் நாலு பக்கமுமிருக்க நடுவில் வேறொருவனுக்கு ஒரு சிறு துண்டு நிலமிருந்தால், அதையும் சேர்த்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன், அளவுக்கு மிஞ்சிய விலை கொடுத்து அதை வாங்குவதுண்டு. அப்படியே கடன் தீர்க்கவேண்டிய அவசரத்திற்காக ஒருவன் தன் நிலத்தை ஈனக்கிரயத்துக்கும் விற்பதுண்டு. அந்தமாதிரி கேசுகளைவிட்டு, சராசரி விலையை மாத்திரம் எடுத்துக்கொள்ளலாம். தவிரவும், பல தினுசான நிலங்கள் சேர்ந்து ஒரு மொத்தத் தொகைக்குச் சாசனமாயிருந்தால், ஒவ்வொரு தினுசுக்கும் விலைபோடுவது கஷ்டமாயிருக்கும். தினுசுக்குத் தகுந்தாற்போல் பிரித்துத்தான் விலை போடவேண்டும். ஒவ்வொரு கிராமமாக எடுத்துக்கொண்டு, ஒரே மண்ணுயிருக்கும் நிலங்களைத் தாக்குகளாக வகுத்து, நிலப்பெறுமானங் கண்டுபிடிக்க வேண்டும். என்னென்ன ஆதாரங்களை அடியாக வைத்துக்கொண்டு அக்காரியங்கள் செய்ய வேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டு, பிற்பாடு ஒவ்வொரு வயலுக்கும் விலை மதிப்பிடும்போது நிலக்காரர்களையும் கிட்டவைத்துக்கொண்டு செய்யலாம்.

ஒருதரம் போட்டவிலையை அப்படியே 10 வருஷத்துக்கு வைத்துக்கொள்ளலாம்.

இந்தப்படி நில விலைகளின்மீது கிஸ்தி யேற்படுத்திவிடலாம் தரிசாயிருக்கும் நிலம் சாகுபடிக்கு வந்தால் அதற்கு அதன் விலையைக்கொண்டே தீர்வை விதிக்கலாம்; புதிதாய்ச் சாகுபடியாகும் வயல்களையெல்லாம் ஒரு தனிஜாப்தாவில் வைத்து மூன்று வருஷத்திற் கொருதரமோ, ஐந்து வருஷத்திற் கொருதரமோ அவைகளின் விலை ஏற ஏறத் தீர்வையையும் ஏற்றலாம். சர்க்காருக்கு அதிகப்பணம் தேவையிருந்தால் 15-வது அத்தியாயத்திற் சொன்னபடி ஏறுபடி வரிபோட்டுக் கொள்ளலாம்.

இப்பொழுது ஆஸ்டிரேலியாவில் மேற்கண்டமுறை அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. நிலப்பெறுமானங்கள் தீர்மானிப்பதற்கு எந்த வழிகளை யனுசரிக்கலாமென்பதற்கு, அங்கேயிருந்து ஒரு ரிபோர்ட்டு வரவழைத்துத் தெரிந்துக்கொள்ளலாம்.

---

## அத்தியாயம் 18.

கடைசியிரண்டு அத்தியாயங்களில், நிலக்காரன் செலுத்தவேண்டிய மொத்தத்தொகை எவ்வளவென்று வருஷாவருஷம் நடக்கும் ஜமாபந்தியில் நிஷ்கரிஷை செய்யப்படுவதாகச் சொன்னோம். நிலம் புதிதாய் எடுத்துக்கொள்வதாலும் அல்லது விட்டுவிடுவதாலும், கிரயம் தானம் முதலியவைகளால் நிலம் ஒரு

வன் கையிலிருந்து வேறொருவன் கைக்கு மாறுவதாலும், ஒரு போகமாகப் பதிவான நிலங்களில் இரு போக சாகுபடியாவதாலும், புஞ்சைப் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்வதாலும் நிலக்காரன்செலுத்தவேண்டிய தொகை ஏறவு மிறங்கவுங் கூடியதாயிருக்கிறதென்று பார்த்தோம். இவைகளைத் தவிர, இன்னொருவிதமான மாறுதலுக்கு மிடமுண்டு; சில சமயங்களில் தீர்வையில் ஒருபாகத்தைக் கவர்ன்மெண்டார் வஜாச்செய்வதுண்டு. அதனால் நிலக்காரன் செலுத்தவேண்டிய தொகை குறைவுபடக்கூடும். இந்த அத்தியாயத்தில் வஜாக்கள் விஷயத்தைப்பற்றிச் சொல்லுவோம்.

ஆதியில் விளைந்த தானியத்திலொருபாகத்தை வரியாக வாங்கிக்கொண்ட காலத்தில், வஜாக்கள்செய்யவேண்டிய அவசியமேயிராது. ஒன்றுமே விளையாவிட்டால், பிரிப்பதற்கு ஒன்றுமிராது; வரியும் கிடையாது. அதிகம் விளைந்தால் அதிகவரியும், கொஞ்சம் விளைந்தால் கொஞ்சவரியும் கொடுக்கவேண்டும். அந்த முறை மாறி, தானியவரிக்குப்பதிலாகப் பணவரி யேற்பட்டபோது, வஜாக்கள் செய்யவேண்டிய அவசியமுண்டாயிற்று. சராசரி விளைவு இவ்வளவாயிருக்குமென்று மதிப்பிட்டு, அதன்மேல் பணத்தீர்வை யேற்பட்டிருப்பதால், அந்தச் சராசரி மதிப்புக்குக் குறைவாக விளைந்து பெரும் நஷ்டம் ஏற்படும்பட்சத்தில், அதற்குத் தகுந்தபடி சௌகரியம் செய்யவேண்டுமென்றுகேட்கநிலக்காரனுக்குப்பாத்தியமுண்டு. முன்னே சொன்னபடி, "திட்டம்" என்கிற முறை அனுஷ்டானத்திலிருந்தபோது, வஜாக்கள் செய்யவேண்டிய

அவசியம் அதிகரித்தது. அந்த முறைப்படி, ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் எந்த மிராசுதார் எவ்வளவு ஏகரா நிலங்கள் சாகுபடி செய்யவேண்டுமென்று மிராசுதார்களுடன் தாசில்தார் ஒப்பந்தம் செய்வது வழக்கம். தாசில்தாருக்குத் தன் வேலையில் தீவிரம் எவ்வளவு இருந்ததோ அவ்வளவு முன்யோசனையுமில்லாததால், சாகுபடியாகக்கூடிய அளவுக்குமேல் நிலங்களை அடைமானம் செய்துவிடுவார். மழையின்மை முதலிய கஷ்டங்களேற்பட்டால், எல்லா நிலத்தையும் சாகுபடி செய்யமுடியாமல், வஜாக்கள் வேண்டுமென்று மிராசுதார்கள் கூக்குரலிடுவார்கள். அதிலிருக்கும் அசௌகரியங்களைப் பொறுக்கமாட்டாமல், அந்த முறை கடைசியில் விடப்பட்டது. அதற்குப் பதிலாகத்தான், எவன் வசத்தில் நிலமிருக்கிறதோ அவன் தீர்வை செலுத்தவேண்டுமென்ற முறையேற்பட்டது. இதற்குப் பிறகு வஜாக்கள் செய்யவேண்டிய அவசியம் குறைந்தது. சர்வேசெட்டில்மெண்டு நடந்தபோது, புஞ்சைகளின் பாய்ச்சலுக்கு ஜலம்கொடுக்கக் கவர்ன்மெண்டார் கட்டுப்பட்டவரில்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆகையால், புஞ்சைகளுக்கு, மழை பெய்தால்தான் உண்டு; கவர்ன்மெண்டார் அவைகளுக்குத் தீர்வை போடும்போது, கம்பு, சோளம், கேழ்வரகு, வரகு முதலிய சாதாரணப் புஞ்சைப் பலன்கள்தான் சாகுபடியாகுமென்று வைத்துக் கொண்டார்கள். கரும்பு, வாழை, இவைபோன்ற தொடர்ச்சியாக நீர்ப்பாய்ச்சல் வேண்டுவனவும், உயர்ந்த விலைப்பெறுமான முள்ளவையுமான பயிர்கள் சாகுபடியாகுமென்றெண்ணவில்லை. மேலும், பலன் கைக்கு வராவிட்டாலும், அல்லது நிலம் தரிசாகக்கிடந்தாலும்

-72-

புஞ்சைகளுக்கு வஜாக்கொடுக்கப்பட மாட்டாதென்றும் சொல்லியிருக்கிறார்கள். நஞ்சைகளுக்கு மாத்திரம் ஜலம்கொடுக்க கவர்ன்மெண்டார் கட்டுப்பட்டிருக்கின்றனர். அந்த நிபந்தனையின்மேல்தான் அவைகளுக்குத் திர்வை யேற்பட்டிருக்கிறது. ஆகையால், பாய்ச்சலுக்குப் போதுமான ஜலமில்லாததால் நிலம் சாகுபடியாகாமலோ, அல்லது பலன் கைக்கு வாரமலோ போய்விட்டால் நஞ்சைநிலக்காரன் வஜாக் கேட்க பாத்தியமுண்டு. வெள்ளத்தினால் சேதமுண்டானாலும் கவர்ன்மெண்டார் வஜாச்செய்வதுண்டு.

மேலே சுருக்கமாய்ச் சொன்னதிலிருந்து, வஜாக் கேட்பவர்களுக்கு அப்படிக்கேட்க பாத்தியமிருப்பதால்தான் வஜாக்கொடுக்கப்படுகிற தென்று தெரிக்திருக்கும். "ரெவின்யூ போர்டாருடைய ஸ்திரமான உத்தரவுகள்" (Board's Standing Orders) என்ற புஸ்தகத்தில், வஜாக்களைப்பற்றின விதிகளைச் சொல்லும்போது, ஆரம்பத்தில் "தயாவிஷயமாய்த்தான் வஜாக்கள் கொடுக்கப்படும்," என்று சொல்லியிருப்பது சரியன்று. மழையில்லாமல் பயிர் நஷ்டமானால், புஞ்சைகளுக்கும் சில சமயங்களில் கவர்ன்மெண்டார் வஜாக் கொடுப்பதுண்டு. புஞ்சைகள் சம்பந்தப்பட்ட மட்டில், வஜாக் கொடுக்கத்தான் வேண்டுமென்று கேட்கப் பாத்தியமில்லை. பஞ்சப்பரிகார வேலைகளேற்படுத்தி ஜனங்களுக்கு உணவு கொடுக்கும் காரியத்தைப் போல், புஞ்சைகளுக்கு வஜாக்கொடுப்பதும் தயா விஷயந்தான். புஞ்சைகளுக்கு வஜாச்செய்யும்போது, தனித்தனியாக ஒவ்வொரு புஞ்சைச்சொந்தக்காரனுக்கும் எவ்வளவு நஷ்டமுண்டாயிருக்கிற தென்று பார்க்கிறதில்லை.

வஜாக்கள் செய்யும் விஷயத்தில், வேறு அநேக கேள்விகளுமுண்டு. அவைகளைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறுவோம். முதலாவது, வஜாக்கொடுக்குமுன் மனுப் பண்ணிக் கொள்ளவேண்டியது அவசியமாவென்பது. தாசில்தார்வந்து நேரில் பார்வையிடும் பொருட்டு வஜாக்கேட்கும் வயலைக் குறிப்பிட்டு எழுத்துமூலமாய் மனுப் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று சுவர்ன்மெண்டார் விதித்திருக்கிறார்கள். நிலக்காரர்களில் அநேகர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயிருப்பதால், மனு எழுதிப்போடச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். ஆயினும், தாசில்தாருக்கு வயல் இன்னதென்று தெரியவேண்டுமல்லவா? கணக்கனைக்கேட்டுக் கொண்டு அவன் காட்டும் வயல்களை மாத்திரம் தாசில்தார் பார்வையிடுவதென்றால், நிலக்காரனைக் கணக்கன் தனதிஷ்டம்போல் ஆட்டிவைக்க முடியும். ஆகையால் எழுத்து மூலமாய் மனுக்கொடுக்க வேண்டுமென்ற விதியிருக்கத்தான் வேண்டும். ஆனால், யாராவது சில பிராசுதார்கள் மனுவின்பேரில் ஒரு கிராமத்துக்குத் தாசில்தார் போனால், அங்கே வேறு பேர்களுடைய நிலங்கள் தரிசுகிடந்தாலும், அல்லது பலன் தவறிவிட்டாலும், அந்நிலங்களுக்கும்வஜாக்கொடுப்பதற்கு தாசில்தார் சிபார்சு செய்யலாமென்று அதிகாரம் கொடுத்தாற்போதும். இவ்விதமாய் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுடைய சிரமம் நிவர்த்தியாகும்.

முழு வயல்களுக்கல்லாமல், வயல்களின் பின்னங்களுக்கும், அதாவது, சப்டிவிஷன்களுக்கும் ஏன் வஜாக் கொடுக்கக்கூடாதென்று இன்னொரு கேள்வியுண்டாகிறது. அப்படிச் செய்வதில் ஒரு கஷ்டமிருக்

கிறது. வஜாக்கொடுக்கும்படியாக நேரிடும் சமயங்களிலெல்லாம், அநேக வயல்களைப்போய்ப் பார்வையிடவேண்டிய அவசியமேற்படுகிறது. அவைகளையெல்லாம் அளப்பதென்றால் ஏராளமான சிரமத்துடன் தான் முடியும். கணக்கன் மிராசுதாரோடு சேர்ந்துகொண்டு மோசஞ்செய்ய இடமில்லாமல் காரியமாக வேண்டுமென்றால், வயல்களை அளப்பதென்பது முடியாதகாரியம். வயல்களை சப்டிவிஷன் செய்துகொள்ளலாமென்று சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதை யனுசரித்து ஒரு சர்வே நம்பராயுள்ள வயல்களை வேண்டுமளவு பிரித்து, தனித்தனிச் சப்டிவிஷன்களாகச் செய்துகொண்டுவிட்டால், வஜாக் கேட்கும்போது சௌகரியமாயிருக்கும். வஜாவுக்கு மனுக்கொடுத்த பிற்பாடு அவ்விதம் சப்டிவிஷன் செய்ய ஆரம்பிப்பது கூடாது.

பயிர் பூராவும் நஷ்டமாகாமல், ஒரு பாகம் மாத்திரம் நஷ்டமாயிருந்தால், அப்பொழுது வஜாக்கேட்கலாமா வென்பது மூன்றாவது கேள்வி. நிலங்களின் சரியான விளைவின்மீது கிஸ்தி யேற்பட்டிருந்தால் அவ்விதம் கேட்கலாம். ஆனால், தீர்வை போடும்போது காலவேறுபாடுகளுக்காகத் தள்ளுபடி செய்து, சாதாரணவிளைச்சலுக்குச் சிறிது குறைவாகவே வயல்களின் விளைச்சலை மதிப்பிட்டிருப்பதால், குறைந்த விளைவுக்காக வஜாக்கேட்கமுடியாது. மேற்சொன்ன தள்ளுபடி போதாதென்றால், அது வேறுவிஷயம். இப்பொழுது செய்வதற்குமேல் அதிகமாகத் தள்ளுபடி செய்து, தீர்வைவீதங்களையே குறைக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொள்ளலாம். ஒரு சந்தர்ப்

பத்தில்மாத்திரம் வஜாச்செய்யவேண்டியது நியாயந்தான்; அதாவது, விளைந்திருக்கும் மகசூல் முழுவதும் அதைக்கூட்டிச் சேர்ப்பதற்கு அறுவடைக் கூலிக்குக் கூடக் காணுமற்போனால், பயிர் பூராவும் நஷ்டமானதற்குச்சமானமாகக் கருதவேண்டும். வெகு தர்க்கத்துக்குப் பிறகு, கவர்ன்மெண்டார் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ போர்டாருடைய ஸ்திரமான உத்தரவுகளில் ஒரு ரூபாயில் ஒரு அணுவுக்கும் (அதாவது பதினாறில்ஒன்றுக்கும்) கீழாக விளைந்திருந்தால் அதைப் பூராநஷ்டமாதக் கருதவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இனி, வஜாக்கள் செய்யும்முறை இப்பொழுது சரியாக நடக்கிறதாவென்றும், அந்தப்படியே இருக்கலாமாவென்றும் யோசிப்போம் அது சம்பந்தமான விதிகள் நன்றாய்த்தானிருக்கின்றன. ஆனால் அனுஷ்டானத்தில்மாத்திரம் வஜாக்கிடைப்பது மிகத்துர்லபமாயிருக்கிறது. நிலம் சாகுபடியானபின் சாவியாய்ப்போய்விட்டால், தாசில்தார் வந்து பார்வையிடுகிறவரையில் அதை அப்படியே வைத்திருக்கவேண்டும். தாசில்தாருக்குச் சாவகாசம் கிடைத்து வந்து பார்ப்பதற்குள், வயலைமாடுமேய்ந்துவிடும். உடனே, வஜாக்கிடையாதென்று சுலபமாக உத்தரவும் வந்துவிடும். தவிர, வேறு காரணங்களாலும் வஜாக்கிடைக்காமற்போகிறதுண்டு. எழுத்து மூலமாய் மனுவில்லையென்றும், சர்வே நம்பரில் ஒரு பாகத்துக்கு மாத்திரம் கேட்கப்பட்டிருக்கிறதென்றும், சிறிதளவாவதுவிளைந்திருக்கிற தென்றும், சாதாரண விளைவில் பதினாறில் ஒன்றுக்கும் குறைவாயில்லாமல் விளைந்திருக்கிறதென்

றும் சொல்லி, வஜாக்கொடுக்காமல் மறுப்பதுண்டு. ஆகையால் வஜாக்கொடுக்கலாம் என்று பேர்மாத்திரமிருக்கிறதே யொழிய, அனுஷ்டானத்தில் நன்மையுண்டாவது சிறிதுதான். அதிலிருந்து வேறு தீங்குகூட உண்டாகிறது. வஜாச் செய்யவேண்டிய அவசியமுண்டாகும்போது, தாசில்தாருக்குச் சுற்றிப்போய்ப் பார்வையிடுங் காரியம் மிகப் பளுவாகவிருப்பதால், அவர் கிராமக்கணக்கனைத்தான் நம்பவேண்டியிருக்கிறது. அவன் மிராசுதார்களுடன் சேர்ந்துகொண்டு மோசம்செய்ய இடமுண்டாகிறது. நிலம் வைத்துக்கொண்டிருக்கும் பிரஜைகளுக்கு நியாயம் செய்யவேண்டுமென்றும், ஜனங்கள் கெட்டுப்போகாமல் நல்வழியிலிருக்க வேண்டுமென்றும் கவர்ன்மெண்டாருக்குக் கவலையிருக்குமானால், இப்பொழுதிருக்கும் முறையை மாற்றவேண்டும். ஒரு காரியம் செய்யலாம். இதுவரையில் வஜாக்கள் மூலமாக எவ்வளவு தள்ளுபடிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளெல்லாம் அடங்கிப்போகும்படி காலவேறுபாடுகளுக்காகச் செய்யும் தள்ளுபடியை அதிகப்படுத்தலாம். அவ்விதம் செய்துவிட்டால் வஜாக்கேட்கவும் கூடாது, கொடுக்கவும் முடியாதென்று சொல்லிவிடலாம். இன்னொன்று செய்யக்கூடியது, நில வரிபோடும் முறையை மாற்றிவிடலாம். நில வரும்படியின்மீதல்லாது, நில விலையின்மீது வரிபோடலாம். வரும்படிமீது வரிபோட்டால் தான், வரும்படி குறைந்தால் வஜாக்கேட்க இடமுண்டாகிறது. நிலப் பெறுமானத்தின்மேல் வரிபோட்டுவிட்டால், வரும்படியைப்பற்றிக் கேள்வியேயில்லை. நிலம் தரிசுகிடந்தாலும், சாகுபடியானாலும்

வரி கொடுக்கவேண்டியது தான். நிலப்பெறுமானத்தின்மேல் வரிபோடும் விஷயத்தைப்பற்றிக் கடைசி அத்தியாயத்திற் சொன்னோம்.

---

## அத்தியாயம் 19

---

நிலக்காரன் செலுத்தவேண்டியதாக ஏற்படக்கூடும் தொகைகளில் இன்னும் சொல்ல வேண்டியது ஒரு இனம் பாக்கியிருக்கிறது; அதாவது "பல சில்லரை ரெவின்யூ" என்ற தலைப்பின் கீழ்வரும் விகிதங்கள். ஜோடி என்று சொல்லப்படும் தீர்வை; சிறிய இனம் எஸ்டேட்டுகளுக்கு விதித்திருக்கும் குவிட்ரேண்டு என்ற தாழ்ந்த தீர்வை; பட்டணங்களில் விதிக்கப்படும் மனைத்தீர்வை; ஜமீன்தாரி கிராமங்களிலும், இனம் கிராமங்களிலும், ரயத்துவாரி கிராமங்களிலிருக்கும் சிறிய இனங்களிலும் வசூலாகும் தண்ணீர்த் தீர்வை; ஏலம் போடப்பட்ட நிலங்களின் விலை வருமானம்; ஆற்று நடுவிலிருக்கும் "லங்கை"களுக்கு ஏற்பட்டிருக்கும் தீர்வை; இவைகளெல்லாம் மேற்சொன்ன தலைப்பின்கீழ் வரும். ரயத்துவாரி நிலக்காரனுடைய ரிஜிஸ்டரில் அவைகள் காணப்படா. ஆகையால் அவைகளைப்பற்றி இங்கே கவனிக்கவேண்டியதில்லை. அடிக்கடி கண்ணிற் படக்கூடிய மூன்று இனங்களைப்பற்றி மாத்திரம் சற்று கவனிப்போம்.

ஒழுங்குத் தப்பாய் ஜலம் பாய்ச்சிக்கொள்வதற்காக விதிக்கப்படும் மடங்குத் தண்ணீர்த்தீர்வை ஒரு

இனம் இந்த வகையில் எல்லா ஜில்லாக்களிலும் ஒரு வருஷத்தில் வசூலாவது சுமார் 4 லட்சம் ரூபாய். அநேக ஜில்லாக்களில், பாய்ச்சலுக்கு ஜலம் வேண்டுமென்றால் மனுப்பண்ணிக் கொள்ளவேண்டுமென்று விதியிருக்கிறது. அந்த மாதிரி மனுப்பண்ணிக் கொள்ளாவிட்டாலும், அல்லது உத்தரவு வருவதற்குமுன் ஜலம் பாய்ச்சிக் கொண்டாலும், அது ஒழுங்குத் தப்பான பாய்ச்சலென்று அபராதம் விதிக்கப்படும். இந்த இராஜதானியில் ஜலம் சமிருத்தியாயிராமல் அளந்து தான் செலவிடும்படியான நிலைமையிலிருக்கிறபடியால், ஜலம் பாய்ச்சிக்கொள்ள உத்தரவுகேட்க வேண்டுமென்றும், தவறினால் அபராதமுண்டென்றும், கவர்ன்மெண்டார் விதித்திருப்பது சரியே. ஆனால் நீர்ப் பாய்ச்சலை விநியோகம் செய்யும் அதிகாரத்தை மராமத்திலாகா அல்லது ரெவின்யூ இலாகா உத்தியோகஸ்தர்களிடம் வைக்கக்கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறோம். அந்த உத்தியோகஸ்தர்கள் இருக்குமிடம் கிராமத்திலிருந்து தூரத்திலிருப்பதுடன், அவர்கள் வேறு பல வேலையுமுள்ளவர்களா யிருப்பதால் காரியங்கள் தாமதமாய்த்தான் நடக்கின்றன. ஜனப்பிரதிநிதிகள் வெகுகாலமாய் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறபடி நிர்வாகப் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தினாலும் சரி, அல்லது கனம் ராமசந்திரராவ் நீர்ப் பாய்ச்சல் விஷயமாகக் கொண்டுவந்திருக்கும் மசோதாவில் குறிப்பிட்டிருக்கிறபடி நீர்ப்பாசன பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தினாலும் சரி, கிராமப்பஞ்சாயத்தாரைக் கொண்டுதான் மேற்சொன்ன காரியத்தைச் செய்விப்பது தகுதி. கிராமத்து வாய்க்காலில் வரும் ஜலத்தை மொத்தம் இவ்வளவு விஸ்தீர்ணத்துக்குப்

பாய்ச்சிக்கொள்ள வேண்டுமென்று மராமத்திலாகா அதிகாரிகள் பஞ்சாயத்தாருக்குத் தெரிவித்துவிட்டு, பிறகு கிராம நிலங்களுக்குள் ஜலத்தைப் பிரித்துக் கொடுக்கும் காரியத்தை அவர்கள்வசம் விட்டுவிட வேண்டும். இதர விஷயங்களைப்போல இந்தக் காரியத்திலும் சுயஆட்சி தேவை தான். அப்படிச்செய்து விட்டால் அபராதம் விதிக்கவேண்டிய அவசியமிராது. கிராமத்தில் கட்டுக்கடங்காத பேர்வழிகளிருந்தால் பஞ்சாயத்தாரே அவர்களுக்கு அபராதம் போட்டு வசூலிக்கலாமென்று அதிகாரம் கொடுத்துவிடவேண்டும். இப்பொழுதிருக்கும் முறையில் மடங்குத்தீர்வை விதிக்கும்போதெல்லாம், நம்மிடம் அபராதம் வாங்கி விட்டார்களே, என்ற ஆத்திரம் ஜனங்கள் மனதிலுண்டாகிறது. விவேகமுள்ள நமது கவர்ன்மெண்டார் அந்த ஆத்திரம் தம்மேல் செல்லாது ஜனப்பிரதிநிதிகளே பொறுக்கும்படி செய்யலாம். அபராதத்தொகைகளெல்லாம் கிராமப்பொது மூலதனத்திற் சேரும் என்றேற்படுத்தி விட்டால், மறைவாக ஜலம் பாய்ச்சிக்கொள்வதை வெளிக்குக் கொண்டுவரவேண்டுமென்று கிராமத்தாருக்கே ஒரு தூண்டுதலுண்டாகும். இவ்விதம் செய்துவிட்டால், ஒவ்வொரு வருஷமும் கவர்ன்மெண்டுக்கு நாலுலட்ச ரூபாய் நஷ்டமாகும். ஆனால் ஜனங்களுடைய மனங்குளிர்ந்து திருப்தியடைவார்கள். இதுதான் கவர்ன்மெண்டாருடைய நோக்கமாயிருக்கவேண்டும். வரி வாங்குவதெல்லாம் அந்த உத்தேசத்தைச் சாதிக்கும் பொருட்டுத்தான்.

புறம்போக்கு நிலத்தை, அதாவது கிராமப் பொது உபயோகத்துக்காக விட்டிருக்கும் நிலத்தை,

ஆக்கிரமிப்பதற்காகவிதிக்கப்படும் அபராதம் இரண்டாவது இனம். கிராமத்திலுள்ள ரஸ்தாக்களும், வழிநடப்புகளும், நீர்க்கால்களும், களங்களும், மேய்ச்சற்றரைகளும், புறம்போக்குக் குள்ளடங்கினவை. அவைகளில் யாராவது நிலக்காரன் ஆக்கிரமித்தால், கணக்கன் தாசில்தாருக்குத் தெரிவித்து, அவர் நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை நடத்துவார். அதைக்கண்டித்துத் தெரிவிக்கக்கணக்கன்தான் தகுதியுள்ளவனு? சமுதாயநிலங்களைக் காப்பாற்றவேண்டுமென்ற அக்கரையுள்ள சர்க்காருக்கு இவன்தான் ஏஜண்டு என்று சொல்லலாம் சர்க்காருக்குள்ளது என்னவிதமான அக்கரை? தங்கள் சொந்த நன்மையை உத்தேசித்தா, அல்லது கிராம ஜனங்களின் சௌகரியத்தின் பொருட்டா? 1915-ம் வருஷம் மார்ச்சு மாதம் 15-ந் தேதியிட்ட 683 நம்பர் கவர்ன்மெண்டு உத்தரவில், (G. O. No. 683 Rev. Dated 15th March 1915) 32-வது பக்கத்தில், புறம்போக்கு என்பதற்கு, "சர்க்கார்க் காரியங்களுக்கர்கவும் பொதுஜனக் காரியங்களுக்காகவும் ஒதுக்கி வைக்கப்பட்டநிலம்" என்று பொருள்கூறியிருக்கிறது. ஜனங்களுக்கு டிரஸ்டியென்றமுறைமையில் தவிர, சர்க்காருக்கு அந்தநிலத்தில் என்ன பாத்தியமிருக்கிறது? இந்தச் சிறு விஷயத்தை அடிக்கடி அவர்கள் மறந்து விடுவதால், அதைச் சில சமயம் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. புறம்போக்குகள் அழிந்து போகாமல் காக்க வேண்டுமென்று கவலை கொண்டவர்கள் கிராமத்தார் தானென்று ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், அதைக் காக்கும் காரியத்தை அவர்களிடந்தானே விடவேண்டும்? இப்பொழுதுமாதிரி கிராம மணியக்காரனிடம்

ஒப்புவிக்காமல், சரியான பஞ்சாயத்து ஏற்படுத்தி அவர்களிடம் ஒப்புவிக்கவேண்டும் கௌரவமுள்ள வர்களாக அங்குமிங்கும் சில மணியக்காரர்களிருக்கி ருர்களாயினும், அந்த வேலைக்குள்ள அற்ப சம்பளத் தினுலும், தாலூகா ஆபிசிலிருந்தும் பிரயாணம் பண் ணும் உத்தியோகஸ்தர்களிடமிருந்தும் உண்டாகும் பல சில்லரைத் தொந்தரவுகளாலும், நல்ல மனிதர் கள் மணியக்காரன் வேலையை ஒப்புக்கொள்வது அரி தாயிருக்கிறது. இந்தக் காரியத்திலும் வேறு காரி யங்களிலும் மணியக்காரன் செலுத்தும் அதிகாரத் தைப் பஞ்சாயத்தாரிடம் ஒப்புவிக்கவேண்டும். நில ஆக்கிரமிப்புச் சட்டத்தில் மணியக்காரனுக்குக் கொ டுத்திருக்கிற அதிகாரங்களைப் பஞ்சாயத்தாருக்குக் கொடுக்கவேண்டும். அப்போது ஆக்கிரமிப்பு உண் டாவதே அரிதாய்ப்போய்விடும். அதை நீக்கும் காரி யமும் நன்ருய் நடக்கும். மேலே, ஒழுங்குத்தப்பான பாய்ச்சலுக்கு அபராதம் விதிக்கும் விஷயத்தில் ஜனங்களுக்குண்டாகும் கோபத்தைச் சர்க்கார் வகிக் காமல் ஜனங்களிடமே திருப்பிவிடலாமென்று சொன் னது இந்த விஷயத்திலும் பொருந்தும்.

வருஷாவருஷம் 'ஆக்கிரமிப்பு' என்று சொல்லப் படும் கேசுகளில் பெரும்பான்மை உண்மையில் அப் படியல்லாதவை. வாய்க்கால்களுக்கு அடுத்து வயல் களிருக்கின்றன. வாய்க்கால்கள் பெரும்பாலும் நேரே நீண்டிராமல் வளைந்து வளைந்து போகின்றன. முக்கிய மான வளைவுகளை மாத்திரம் காட்டி கற்கள்போட்டு டிமார்கேஷன் ஆயிருக்கும். ஒரு கல்லிலிருந்து இன் னெரு கல்லுக்கு நேரே கோடுகிழித்து அந்தக் கோட்

டுக்கும் வாய்க்காற்கரைக்கு மிடையில் ஏதாவது நாற்றுகளிருந்தால் அதை ஆக்கிரமிப்பென்று கணக்கன் சொல்லிவிடுகிறான். அந்த ஆக்கிரமிப்பின் அகலம் சாதாரணமாய் 5-லிங்கு அல்லது 3-அடி கூட இராது. விவேகியான டிப்டி கலெக்டர் ஒருவர் ஆக்கிரமிப்பின் அகலம் 5-லிங்குக் குட்பட்டிருந்தால் அபராதம் விதிக்கக்கூடாதென்று உத்தரவு போட்டிருக்கிறாராம் அந்த உத்தரவின் நகல் நமக்குக் கிடைக்கவில்லை. அது இருப்பது உண்மையோ அல்லவோ தெரியாது. எனினும், அந்தமாதிரி விதி மிகவும் நேராயிருப்பதால், எல்லா விடங்களிலும் அதையே அனுசரிக்கலாம். ஆக்கிரமிக்க வேண்டுமென்ற ஆசை நிலக்காரனுக்குக் கிடையாது. வாய்க்காலுக்கடுத்த அந்தச் சிறு துண்டிலிருந்து தனக்குப் பெரும் லாபம் கிடைக்குமென்று அவன் நினைப்பதுமில்லை. கூலியாட்கள் தவறுதலாய் நாற்றுகளை நட்டு விடுகிறார்கள். அதை நிலக்காரன் கவனிப்பதில்லை. பிற்பாடு கணக்கன் கண்டு அதைக் காண்பிக்கும்போது தான் அவனுக்குத் தெரிகிறது. கணக்கனுடைய விஷமபுத்திக்குத்தான் ஆக்கிரமிப்பிருப்பதாக முதல் முதல் தோன்றுகிறது. நிலக்காரன் அவனுக்கு வேண்டியவனாயிருந்தால், ஆக்கிரமிப்பைக் காட்டி அதை உடனே நீக்கிவிடுகிறான். இல்லாவிட்டால், ஜமாபந்தி சமயம் வரட்டுமென்று காத்துக் கொண்டிருக்கிறான்.

இந்தப் பிரகிருதத்தில் புறம்போக்குக் குளங்களில் நாற்றுவிடும் வழக்கம் தஞ்சாவூர் ஜில்லாவில் பலவிடங்களி லிருந்துவருவதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டி யிருக்கிறது. சாகுபடி ஆரம்பிக்கும்

காலத்தில் குளங்களில் அடியில் கொஞ்சம் ஜலமிருக்கும்போது நாற்றுவிட்டு, சொற்பகாலத்துக்கெல்லாம் ஆற்றில் ஜலம் வந்தபின் வயலை உழுது தயார் பண்ணிக்கொண்டு, நாற்றைக்கொண்டுபோய் நடுவது வழக்கம். நாற்றைக் கொண்டுபோய் நடும் வயல்களுக்கு வரிபோட்டிருப்பதால், அந்த நாற்றுகளுக்கும் வரி போட்டதற்குச் சமானம்தான். குளம் அநேகமாய் வற்றிப்போய், ஒருவருக்கும் உபயோகமில்லாதபோது விரை விடுகிறார்கள். அதனால் ஒருவருக்கும் கஷ்டமில்லை. ஆயினும் சர்க்கார் அதற்கு வரிபோடுவது தகுதியென்றெண்ணி கிராமத்திலேற்பட்ட உயர்ந்த புஞ்சைத்தீர்வை வீதப்படி வரிவிதிக்கிறார்கள். குளத்தின் அடித்தலம் சொற்பகாலத்துக்காவது அனுபோகத்துக்குள்ளாவதால் வரி விதிக்கப்படுகிற தென்று குதர்க்க வார்த்தை சொல்லுகிறார்கள். கவர்ன்மெண்டார் அவ்விதம் செய்வது நியாயமன்று. பைமாஷ் கணக்குகளில் அப்படிப்பட்ட குளங்கள் "நாற்றங்கால் குளங்கள்" என்று கண்டு அளக்கப்பட்டிருக்கின்றன. சர்வேயில், "நாற்றங்கால்" என்ற வார்த்தை யில்லாவிட்டாலும், மற்றப்படி முன்னிருந்தபடியே அளவுகளேற்பட்டிருக்கின்றன. ஆகையால், நில ஆக்கிரமிப்புச் சட்டத்திற் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்கு அக்குளங்கள் உட்பட்டவை அந்தச் சட்டத்தில், குளங்களெல்லாம் அதற்கு முன்னிருந்த பாத்தியங்களுக்கு எவ்வித ஹானியுமில்லாமல் சர்க்காருக்குச் சொந்தமானவை, என்று சொல்லியிருக்கிறது. பைமாஷ் கணக்குகளேற்பட்ட பிறகு சென்ற சுமார் 100 வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாக மிராசுதார்கள் குளங்களில் நாற்றுவிட்டுக்கொண்டு வருகிறார்கள்.

ஆகையால் அவ்விதமே இனிமேலும் செய்ய அவர்களுக்குப் பாத்தியமுண்டாகிவிட்டது. அம்மட்டோடு அவர்கள்நின்ருல், சார்க்கார் பாத்தியத்துக்கு விரோதமாக ஒன்றும் செய்தவர்களாகமாட்டார்கள். மேற்சொன்னபடி-வரிபோடுவது சட்டத்துக்கு விரோதமாயிருப்பதால், கோர்ட்டில் வியாஜ்யம் செய்தால் வரி ரத்தாகிவிடும். இந்த விவரங்களையெல்லாம் கவர்ன்மெண்டுக்கு எடுத்துச்சொன்னதுந் தவிர, சட்டசபையில் தீர்மானமொன்றும் கொண்டுவந்தோம். கவர்ன்மெண்டார் எதிர்க்கும் தீர்மானங்களுக்கெல்லாம் என்ன கதியாகுமோ அதுவேதான் அதற்குமாயிற்று. எடுத்துச்சொன்ன கட்சிகளுக்கு எதிர்மொழி யொன்றுங் கூருமல், இந்த இனத்தில் வசூலாகும் தொகை வெகு அற்பமென்றும், தஞ்சாவூர்ஜில்லா முழுவதுக்கும் வருஷத்துக்கு 800 ரூபாய் தான் கிடைக்கிறதென்றும் சொன்ஞர்கள். கோடிக்கணக்கான பணத்தின் மேல் புரளுகிறவர்களுக்கு அது அற்பமாயிருப்பினும், எளிய நிலக்காரர்களுக்கு அதுவும் பெரிதுதான் என்றுபதிற் சொன்னேம். எந்த விதத்திலாவது வரிபோட்டு வரும்படியடைய வேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கிருக்கும் அவாவைக் காட்டுவதற்கு இது ஒரு உதாரணமாகும்.

நிலக்காரன் பட்டாவில் ஸ்திரமாய்ச் சேராமல், புதிதாய் அத்தத்த வருஷத்தில் சாகுபடிக்காக எடுத்துக்கொண்ட நிலங்களின்மீது வரிபோடுவதால் உண்டாகும் வரவு இன்னெரு இனம். அநேக கிராமங்களில் தொடர்ச்சியாகச் சாகுபடி பண்ணமுடியாத சிலநிலங்களிருப்பதாகவும், அவைகளிலிருந்து சில துண்டுகளை

ஒருவருஷம் அல்லது இரண்டுவருஷம் சாகுபடிசெய்து அப்புறம் விட்டுவிடுவது வழக்கமென்றும் முன்னேயே சொல்லியிருக்கிறோம். இவ்விதமாய் ஆகும் சாகுபடிகளைப்பற்றிக் கணக்கன் மேலே தெரிவிப்பான். அங்கே மேலாபீசில வழக்கப்படியுள்ள ஆர்ப்பாடங்களெல்லாம் ஆனபிறகு, புதிதாய்ச் சாகுபடியான நிலத்தைச் சாகுபடி செய்கிறவன் பேரால் பதிவுசெய்துக் கொள்வது வழக்கம். அடுத்த வருஷத்தில் அவன் அந்த நிலத்தைவிட்டுவிடுவதால், இவ்வளவு காரியமும் வீணாகி விடுகிறது. இந்த மாதிரி விட்டுவிட்டுச் சாகுபடியாகும் நிலங்களை யெல்லாம் சேர்த்து ஒவ்வொரு கிராமத்திலும் தனித்தாக்குகளாக வைத்து, அவைகள் சம்பந்தப்பட்டமட்டிலாவது தர்க்காஸ்து அடைமானங்களுக்கேற்பட்டிருக்கும் சுற்றான நடவடிக்கையை அனுசரிக்கக்கூடாது. நிலத்தை ஸ்திரமாக அடைமானம் செய்வதாயிருந்தால் தான் அந்த நடவடிக்கையை அனுசரிக்கவேண்டும்.

அடுத்தது, புறம்போக்கு நிலங்களில் அங்குமிங்குமிருக்கும் மரங்களுக்காக வரி வசூல்செய்வதைப் பற்றிச் சொல்லுவோம். இந்த அற்பவிஷயத்தில் வரும்படியை விரும்புவதால் கிராமத்தாருக்கு அனாவசியமான தொந்தரவுண்டாகிறது. ஒவ்வொரு மரத்தையும் தேடிப்பிடித்து வரிபோடுவதே சிரமமான காரியம். அப்படிச் செய்தாலும், இடையில் ஒழுகிப் போவதுபோக சர்க்காரிடம்போய்ச் சேருவது சொற்பந்தான். ஆகையால் இந்த இனத்தில்வரும் வரும்படியைக் கிராமப்பஞ்சாயத்தாருக்குக் கொடுத்துவிடுவது தகுதியென்று தோன்றுகிறது.

சர்க்கார்க் கணக்குகளில் "பலசில்லரை ரெவின்யூ" என்ற தலைப்பின்கீழ் தனியாய்க் காட்டியிருக்கும் வரவுகளைப்பற்றி இப்பொழுது சொல்லிவிட்டோம். மற்ற வரவுகளெல்லாம் "இதர இனங்கள்," என்று காட்டப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றின முழு விவரங்களும் தெரிந்தால் நலமாயிருக்கும் அவைகளில் ஒன்று "மீன் குத்தகைகள்" என்று கண்டிருக்கிறது. அநேக ஜில்லாக்களில் அங்கங்கேயிருக்கும் குளம் குட்டைகளிலுள்ள மீன்களை அந்தந்த கிராமத்துக் குடிகளே பிடித்துக்கொண்டு, மாமூலாய் அதற்காகச் செய்யவேண்டிய கிராமப்பொது ஊழியங்களையும் செய்துவருவது வழக்கம் மதுரை ஜில்லாவில் மாத்திரம், மீன் பிடித்துக்கொள்வதற்காக நிலவரியின்மீது 'ஓட்டுவரி' (cess யொன்று போட்டிருக்கிறார்கள். அதாவது ஜில்லா போர்டு, தாலூகா போர்டுகளின் செலவுக்காக நிலக்கிஸ்தியின்மேல் ஓட்டுவரி விதித்திருப்பதுபோல் மதுரை ஜில்லாவில் அந்த ஓட்டுவரி விதித்திருக்கிறார்கள். மறு செட்டில்மெண்டில் கிஸ்தி உயரும்போது மீன் பிடிப்பதற்காகப் போட்டிருக்கிற ஓட்டுவரியும் உயரும் இந்தமாதிரி வரிபோட்டிருப்பது எவ்விதம் நியாயமாகுமென்பது தெளிவாகவில்லை.

அவ்வளவு அநியாயமான இன்னொருவித வருவிருக்கிறது. அதாவது புறம்போக்கு நிலத்திலிருந்து செங்கல் அறுப்பதற்காக மண் எடுத்துக்கொண்டால், அதற்காக ஒரு பகுதி விதிக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு விற்பதற்கல்லாமல் சொந்த உபயோகத்துக்

காகச் செங்கல் அறுத்துக்கொண்டால் அதற்குவரி போடுவது சரியன்று.

மேற்சொன்ன சில்லரை வரிகளையெல்லாம ஒழித்துவிட வேண்டியகாலம் வந்துவிட்டது. சர்க்காருக்கு அதிகப்பணம தேவையாயிருந்தால் நேரான வழிகளால் அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மேற்சொன்ன சில்லரை விகிதங்களால் அற்ப சம்பளக்காரர்களுக்கு அதிகப்படியாய் அதிகாரம கொடுக்கவேண்டியிருப்பதுடன், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் படும் சிரமத்துக்கும் ஜனங்களுக்குண்டாகும் உபத்திரவத்துக்கும் தகுந்தபடி வசூலும் ஆவதில்லை. இப்பொழுது நிலவரியிலாகா நடத்தப்படும் முறையில் ஜனங்களுக்குப் பல உபத்திரவங்களுண்டாகின்றன. எல்லா மிராசுதார்களையும் கிராமக்கணக்கன் தன் காலின்கீழ் வைத்து அமுக்கமுடிகிறது. வசூலாகும் வரியில் பெரும்பாகம் செலவழிந்தும் போகிறது. அம்முறையை மாற்றி, புதிதாய்ச் சுருக்கமானதும் சீரானதுமான ஒழுங்குகள் ஏற்படுத்தவேண்டும். இதுவரையில் சொல்லப்பட்ட கட்சிகளையும் யோசனைகளையும் எல்லாருமே ஒப்புவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. ஆயினும், பொதுவாய் இந்த விஷயத்திற்கவனம் திரும்பி பலரும் தம் தம் அபிப்பிராயத்தை வெளியிட நேரிடின், அதுவே ஒரு பெரும் நன்மையாகும்.

முற்றிற்று.

80-

## அநுபந்தம் I.

## சாகுபடி யாகாவிட்டாலும் கிஸ்தவசூலிக்கப்படும் நிலவிஸ்தீர்ணம்.

(1-வது அத்தியாயம் 6-வது பக்கமும், 5-வது அத்தியாயம் 35-வது பக்கமும் பார்க்கவும்.)

| வருஷம். | | உண்மையில் சாகுபடி யானது. | தரிசாய்க்கிடந்தும் தீர்வை வசூலிக்கப்பட்டது. |
|---|---|---|---|
| | | ஏகராக்கள். | ஏகராக்கள். |
| 1327-ம் பசலி (1917–18) | நஞ்சை | 4,793,683 | 228,581 |
| | புஞ்சை | 15,522,821 | 5,299,475 |
| | மொத்தம் | 20,316,504 | 5,528,056 |
| 1326-ம் பசலி (1916–17) | நஞ்சை | 4,804,379 | 206,899 |
| | புஞ்சை | 15,673,930 | 5,071,288 |
| | மொத்தம் | 20,478,309 | 5,278,187 |
| 1325-ம் பசலி (1915–16) | நஞ்சை | 4,775,672 | 228,179 |
| | புஞ்சை | 15,765,276 | 4,874,086 |
| | மொத்தம் | 20,540,948 | 5,102,265 |

## அநுபந்தம் II.

## ஸர்வே இலாகாவிலும், செட்டில்மெண்டு இலாகாவிலும் ஆகும் செலவுகள்.

(2-வது அத்தியாயம்.)

| சென்னை இராஜதானி எல்லா ஜில்லாக்களிலும் | ஸர்வே இலாகா. | செட்டில்மெண்டு இலாகா. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1915–16 வரையில் மொத்தம் செலவழிந்திருக்கிறது. | 3,21,68,322 | 2,02,78,628 |
| 1916–17 ல் செலவழிந்தது | 6,35,766 | 3,89,558 |
| மொத்தம் | 3,28,04,088 | 2,06,68,186 |

அநுபந்தம் III.

## சென்னை இராஜதானியில் ரயத்துவாரி பட்டா தாரர்களின் ஸங்கியையும் பட்டாக்களின் கிஸ்தியும்

(10-வது அத்தியாயத்தையும் 13-வது அத்தியாயத்தையும் பார்க்கவும்.)

| 1327-ம் பசலியில் (1917–18) | தனிப்பட்டாக்களின் ஸங்கியை | |
|---|---|---|
| | சென்னை இராஜ தானி எல்லா ஜில்லாக்களிலும் | தஞ்சாவூர் ஜில்லாவில் |
| 1 ரூபாயோ அதற்குக் குறைவாகவோ கிஸ்தியுள்ளவை. ... | 405,779 | 33,895 |
| 1 ரூபாய்க்குமேல் 10 ரூபாய்க்கு மேற்படாமல் கிஸ்தியுள்ளவை... | 1,512,726 | 74,810 |
| 10 ரூபாய்க்குமேல் ரூ. 30க்கு மேற்படாமல் கிஸ்தியுள்ளவை... | 565,786 | 39,613 |
| 30 ரூபாய்க்குமேல் ரூ. 50-க்கு மேற்படாமல் கிஸ்தியுள்ளவை... | 131,391 | 11,713 |
| 50 ரூபாய்க்குமேல் ரூ. 100-க்கு மேற்படாமல் கிஸ்தியுள்ளவை... | 80,130 | 9676 |
| 100ரூபாய்க்குமேல் ரூ. 250க்கு மேற்படாமல் கிஸ்தியுள்ளவை... | 32,235 | 5466 |
| 250ரூபாய்க்குமேல் ரூ. 500க்கு மேற்படாமல் கிஸ்தியுள்ளவை... | 6969 | 1755 |
| 500ரூபாய்க்குமேல் ரூ. 1000க்கு மேற்படாமல் கிஸ்தியுள்ளவை... | 2196 | 648 |
| 1000 ரூபாய்க்கு மேற்பட்ட கிஸ்தியுள்ளவை. | 705 | 345 |
| மொத்தம் | 2,737,917 | 177,921 |
| சென்னை இராஜதானியின் ஜனத்தொகை ... | 41,405,404 | |
| தஞ்சை ஜில்லாவின் ஜனத்தொகை ... | | 2,362,686 |

ஆகையால் நமது சென்னை இராஜதானியில் 1000 பேர்களில் 58 பேர்களுக்கு குறைவில்லாமல் நிலச்சுவான்தாரர்களிருக்கிறார்கள். இங்கிலாந்திலோ அப்படியில்லை. இங்கிலாந்து, வேல்ஸ் இரண்டிலும் சேர்ந்து சாகுபடியாகக்கூடியதாய் சுமார் 275 லட்சம் ஏகராக்கள் இருக்கின்றன. அந்த விஸ்தீர்ணத்தில் சுமார் 150 லட்சம் ஏகராக்கள்—அதாவது பாதிக்குமேல்—2250 மிராசுதார்களுக்குச் சொந்தம். இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாண்ட மூன்றையும் சேர்த்துப் பார்த்தால், லார்டு, ட்யூக் முதலிய பட்டம்வகிக்கும் பிரபுக்கள் 525 பேர்கள், சுமார் 150 லட்சம் ஏகராக்களை தமக்குச் சொந்தமாய் அடக்கிக்கொண்டிருக்கின்றனர். சுமார் 70 பேர்கள் ஸ்காட்லாண்டு தேசத்தின் விஸ்தீர்ணத்தில் ஒருபாதிக்குச் சொந்தக்காரர்களாம்.* இங்கிலாந்தில் 1875-ம் வருஷத்தில் ஏற்பட்ட ஒரு கணக்கிலிருந்து, அத்தேசத்தின் நிலவிஸ்தீர்ணத்தில் ஒருபாதி 7400 பேர்களுக்குள் மடங்கியிருக்கிறதென்றும், மற்றொருபாதி 312,000 ஜனங்களுக்குள் பிரிந்திருக்கிறதென்றும் தெரிகிறது. † அதாவது, இங்கிலாந்தின் ஜனத்தொகை 340½ லட்சம் பேர்களில் 319,400 பேர்கள்தான் நிலச்சொந்தக்காரர்கள்; அதாவது 1000 பேர்களில் 9 பேருக்குத்தான் சொந்த நிலமிருக்கிறது.

## அநுபந்தம் IV

## நிர்ப்பந்தத்தின்மேல் கிஸ்திவசூலான இனங்களைக் காட்டும் அட்டவணை.

(10-வது அத்தியாயம், 67-69-ம் பக்கங்களைப் பார்க்கவும்.)

| வருஷங்கள். | ஜங்கம சொத்துக்கள் ஜப்தியான இனங்கள். | ஸ்தாவர சொத்துக்கள் ஜப்தியான இனங்கள். |
|---|---|---|
| 1323-ம் பசலி (1913–1914) | 87,461 | 14,880 |
| 1324-ம் ,, (1914–1915) | 109,712 | 18,339 |
| 1325-ம் ,, (1915–1916) | 79,446 | 14,871 |
| 1326-ம் ,, (1916–1917) | 61,216 | 11,520 |
| 1327-ம் ,, (1917–1918) | 71,941 | 10,752 |

* "See Land Values Taxation" by Chomley & Outhwaite. Page 57.

† Ibid Page 163

அநுபந்தம் V

## செட்டில்மெண்டுகளில் நிலவரி உயர்த்தப்பட்டிருக்கும் விதத்தைக்காட்டும் அட்டவணை.

(13-வது அத்தியாயத்தைப் பார்க்கவும்.)

| | ஜில்லாக்களின் பெயர்கள். | | செட்டில்மெண்டுக்குமுன்செலுத்தப்பட்டகிஸ்தி | 1325-ம் பசலியில் செலுத்தவேண்டியகிஸ்தி | ஏற்றம் அல்லது தாழ்வு. |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா. | ரூ-ா. | ரூபா. |
| முதல்தரம் செட்டில்மெண்டு ஆனதோடு நிற்கும் ஜில்லாக்கள். | விசாகப்பட்டணம் | ... | 382,161 | 5,22,087 | + 1,39,926 |
| | மதுரை | ... | 16,69,449 | 23,96,635 | + 7,27,186 |
| | நீலகிரி | ... | 77,329 | 1,31,657 | + 54,328 |
| | மலையாளம் (வயனாடு) | ... | 82,654 | 1,37,249 | + 54,595 |
| | தென் ஆற்காடு | ... | 35,84,962 | 41,09,938 | + 5,24,976 |
| | பல்லாரி | ... | 13,30,282 | 16,52,659 | + 3,22,377 |
| | தஞ்சாவூர் | ... | 41,52,855 | 57,82,532 | +16,29,677 |
| | அனந்தப்பூர் | ... | 10,39,869 | 13,33,646 | + 2,93,777 |
| | மலையாளம் | ... | 17,60,497 | 33,23,273 | +15,62,776 |
| | தென்கன்னடம் | ... | 14,28,484 | 24,32,688 | +10,04,204 |
| | | மொத்தம் | 1,55,08,542 | 2,18,22,364 | +63,13,822 |

(தொடர்ச்சி.)

| மத் செட்டில்மென்டு முடிவாகியிருக்கும் ஜில்லாக்கள். | | ரூபா. | ரூபா. | ரூபா. |
|---|---|---|---|---|
| திருச்சிறுப்பள்ளி | ... | 16,21,577 | 27,51,829 | + 11,30,252 |
| கோதாவரி | ... | 35,02,221 | 23,76,621 | − 11,25,600 |
| கிருஷ்ணா (மசுலிபட்டணம் பாகம்) | ... | 12,90,807 | 41,10,001 | + 28,19,194 |
| குண்டூர் | ... | 39,60,145 | 50,05,038 | + 10,44,893 |
| சேலம் | ... | 20,36,737 | 19,71,195 | − 65,542 |
| நெல்லூர் | ... | 19,79,435 | 23,69,270 | + 3,89,835 |
| கர்நூல் | ... | 15,60,350 | 16,83,439 | + 1,23,089 |
| செங்கற்பட்டு | ... | 18,12,739 | 20,44,739 | + 2,32,000 |
| திருநெல்வேலி | ... | 28,40,757 | 26,30,464 | + 3,83,290 |
| கடப்பை | ... | 18,40,991 | 13,34,850 | − 5,06,141 |
| கோயம்புத்தூர் | ... | 29,21,211 | 30,68,415 | + 1,47,204 |
| கஞ்சம் | ... | 6,66,409 | 11,38,782 | + 4,72,373 |
| சித்தூர் | ... | 6,84,579 | 812,960 | + 1,28,381 |
| வடஆற்காடு | ... | 18,01,395 | 29,98,193 | + 11,96,798 |
| இராமநாதபுரம் | ... | | 593,583 | |
| மொத்தம். | ... | 2,85,19,353 | 3,48,89,379 | + 63,70,026 |
| எல்லாம் சேர்ந்த மொத்தம். | ... | 4,40,27,895 | 5,67,11,743 | +1,26,83,848 |

அநுபந்தம் VI

## சென்னை இராஜதானியில் நிலவரியின்மொத்தமும் எல்லாவித வரிகளின் வசூல்மொத்தமும்.

| | 1912—13 | 1913—14 | 1914—15 | 1917—18 |
|---|---|---|---|---|
| நிலத்தீர்வை வசூல் (தண்ணீர்த்தீர்வை யுள்பட) | ரூ. 688 லட்சம் | 679½ லட்சம் | 677¾ லட்சம் | 708¼ லட்சம் |
| எல்லா இனங்களிலும் வரிவசூல் மொத்தம் | ரூ. 1551½ லட்சம் | 16·1 லட்சம் | 1602 லட்சம் | 1829 லட்சம் |

அநுபந்தம் VII

## சென்னை இராஜதானியில்

| ரயத்துவாரி கிராமங்களின் சங்கியை | டிப்டிகலெக்டர், சப்கலெக்டர், ஜில்லா கலெக்டர் இவர்களின் சங்கியை | டிப்டிகலெக்டர், சப்கலெக்டர், ஜில்லா கலெக்டர் இவர்களின் மொத்தசம்பளம் | கிராமமுன்சீப் அல்லது மணியகாரர்களின் சங்கியை | கிராமமுன்சீப் அல்லது மணியகாரர்களின் மொத்த சம்பளம் | கர்ணங்களின் சங்கியை | கர்ணங்களின் மொத்த சம்பளம் |
|---|---|---|---|---|---|---|
| 22,283 | 210 | 13,070,00* | 17,445 | 12,24,000 | 15,109 | 15,85,000 |

* ஜில்லா கலெக்டர்களும், சப்கலெக்டர்களும், டிப்டிகலெக்டர்களும், மேஜிஸ்டிரேட்டுகளாகவு மிருப்பதால் அந்த வேலைக்காக அவர்கள் சம்பளத்தில் 100-க்கு 20வீதம் தள்ளி, ரெவினியு இலாகாவின் வேலைசெய்வதற்கு மாத்திரம் வீதித்த சம்பளத்தை மேற்குறிப்பிட்ட தொகை காண்பிக்கிறது.

N. B.—1913—14 ஷுத்திய பட்ஜட்படி வருஷ சம்பளம்
- 25 ஜில்லா கலெக்டர்களுக்கு ரூ. 6,[illegible],000
- 48 சப்கலெக்டர்களுக்கு ரூ. 5,25,[illegible]
- 137 டிப்டிகலெக்டர்களுக்கு [illegible]

83

COPIES CAN BE HAD OF:—

T. KRISHNASWAMI AIYER,
Hindu Educational Trading Company,
**KUMBAKONAM.**

C. S. DIKSHITHAR & Co,
Dabir West street KUMBAKONAM.

K. SREENIVASA AIYANGAR,
*Stationer and Bookseller,*
DABIR WEST, KUMBAKONAM.